ஆய்வரங்கக் கட்டுரைகள் - 1996

தமிழ் மொழிப் பிரயோகம்
கணக்கெடுப்பும் பிரச்சினைகளும்

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணம்
திருகோணமலை

தமிழ் மொழிப் பிரயோகம்
கணக்கெடுப்பும் பிரச்சினைகளும்

ஆய்வரங்கக் கட்டுரைகள் - 1996

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

வடக்கு - கிழக்கு மாகாணம்

திருகோணமலை

தமிழ் மொழிப் பிரயோகம் – கணக்கெடுப்பும் பிரச்சினைகளும்

முதற்பதிப்பு : அக்டோபர் 1997

பிரதிகள் : 1000

அச்சும் அமைப்பும் : பதிப்பகத் திணைக்களம்
வடக்கு– கிழக்கு மாகாணம்
திருகோணமலை

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான
முயற்சியாளர்களுக்கு

அணிந்துரை

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

என்னும் பாரதியின் தரிசன முழக்கம், நாம் தமிழ்த் தாய்க்கு ஆற்ற வேண்டிய பணியினை எடுத்து விளக்குகின்றது. பொதுவாகத் தமிழ்மொழி வளர்ச்சி பற்றிப் பல கருத்துக்கள் உண்டு. சிலர் நவீன, விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிக்குரிய கருத்துக்களைத் தமிழ் மொழியிலே சொல்ல முடியாது என்பர். ஆயின் இன்னொருசாரார் தமிழ்மொழியின் பிழையன்று தமிழ்மொழியை பயன்படுத்துபவர்களுடைய மொழியாற்றல் விருத்தியின்மையே என்கின்றனர். இதில் உண்மை எது எனக் கண்டறிய ஓர் ஆய்வரங்கு தேவைப்பட்டது. அதன் வெளிப்பாடே இந்நூல் வடிவம்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தலைமை தாங்கிய ஆய்வரங்கிற்கு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இராமசுந்தரம் வருகை தந்து சொற்பெருக்காற்றினார். அத்துடன் நம்நாட்டுச் சகலதுறை சார்ந்த அறிஞர்களும் வரவழைக்கப்பட்டு அவர்களால் ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

தொழில்நுணுக்கம், வைத்தியம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கல்வி, கணனி, திட்டமிடல், நிர்வாகம் போன்ற பல்வேறு முக்கிய துறைகளில் தமிழ்மொழிப் பிரயோகம் எந்தளவுக்கு தனது பயனுறுதி வாய்ந்த பங்களிப்பினைச் செய்துள்ளது என்பதை ஆராய்வதே இந்நூலின் நோக்கமாகும். அந்நோக்கத்தை எந்தளவுக்கு நிறைவு செய்துள்ளது என்பதைவிட, இத்துறை சார்ந்த ஆய்வினை மேலும் எல்லை பரந்து ஊக்குவிக்க வேண்டும் என்பதும் இதன் பெருநோக்காகும்.

"தாய்மொழிக் கல்வியல்லாத மற்றைய கல்வி அடிமைத் தனத்தை வளர்க்கும்; மனித சுதந்திரத்தினை நலிவிக்கும்" என்கின்றார் ஆதாரக் கல்வித் திட்டத்தின் தாபகரான மகாத்மா காந்தி. எமது தாய்மொழிப் பிரயோகம் சம்பந்தமான கருத்தரங்கின் மூலம் தெரியவந்த விடயம் சில துறைகளின் கருத்துக்களைச் சொல்ல எங்கள் மொழியிலே கலைச் சொற்கள் இல்லை என்பதாகும். எனவே அத்துறைகளில் புதிய கலைச் சொல்லாக்கம் மிகமிக அவசியம் என்பதும் அதற்காக விரைந்து செயற்பட வேண்டும் என்பதும் உணரப்பட்டுள்ளது.

மருத்துவம் மிக முக்கியமான ஒரு துறை. அங்கு சகல மருத்துவ பாடநூல்களும் ஆங்கிலமொழியிலே இருப்பதால் தமிழ்மொழியிலே "மருந்துக்குக்கூட ஒரு புத்தகமும் இல்லாத நிலையுண்டு" என ஓர் ஆய்வாளர் இங்கு குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் மொழிபெயர்ப்பு நூல்கள் இல்லாத போது, புதிய கலைச்சொற்கள் எங்கிருந்து உருவாக முடியும்? இத்தகைய நிலைகளுக்கு நாம் பரிகாரம் தேட முயன்றால் எமது அடிப்படை நோக்கம் ஈடேறும்.

தொழில்நுட்பத் துறையை எடுத்துக்கொண்டால் தமிழ்மொழிப் பிரயோகம் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமாயின் வெகுசனத் தொடர்புச் சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றின் மூலம் தொழில்நுட்பக் கலைச்சொற்கள் வெளியிடப்பட வேண்டும். இதன் மூலம் மூலை

தமிழ் மொழிப் பிரயோகம் – கணக்கெடுப்பும் பிரச்சினைகளும்

முதற்பதிப்பு : அக்டோபர் 1997

பிரதிகள் : 1000

அச்சும் அமைப்பும் : பதிப்பகத் திணைக்களம்
வடக்கு – கிழக்கு மாகாணம்
திருகோணமலை

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான
முயற்சியாளர்களுக்கு

அணிந்துரை

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

என்னும் பாரதியின் தரிசன முழக்கம், நாம் தமிழ்த் தாய்க்கு ஆற்ற வேண்டிய பணியினை எடுத்து விளக்குகின்றது. பொதுவாகத் தமிழ்மொழி வளர்ச்சி பற்றிப் பல கருத்துக்கள் உண்டு. சிலர் நவீன, விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிக்குரிய கருத்துக்களைத் தமிழ் மொழியிலே சொல்ல முடியாது என்பர். ஆயின் இன்னொருசாரார் தமிழ்மொழியின் பிழையன்று தமிழ்மொழியை பயன்படுத்துபவர்களுடைய மொழியாற்றல் விருத்தியின்மையே என்கின்றனர். இதில் உண்மை எது எனக் கண்டறிய ஓர் ஆய்வரங்கு தேவைப்பட்டது. அதன் வெளிப்பாடே இந்நூல் வடிவம்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தலைமை தாங்கிய ஆய்வரங்கிற்கு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இராமசுந்தரம் வருகை தந்து சொற்பெருக்காற்றினார். அத்துடன் நம்நாட்டுச் சகலதுறை சார்ந்த அறிஞர்களும் வரவழைக்கப்பட்டு அவர்களால் ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

தொழில்நுணுக்கம், வைத்தியம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கல்வி, கணனி, திட்டமிடல், நிர்வாகம் போன்ற பல்வேறு முக்கிய துறைகளில் தமிழ்மொழிப் பிரயோகம் எந்தளவுக்கு தனது பயனுறுதி வாய்ந்த பங்களிப்பினைச் செய்துள்ளது என்பதை ஆராய்வதே இந்நூலின் நோக்கமாகும். அந்நோக்கத்தை எந்தளவுக்கு நிறைவு செய்துள்ளது என்பதைவிட, இத்துறை சார்ந்த ஆய்வினை மேலும் எல்லை பரந்து ஊக்குவிக்க வேண்டும் என்பதும் இதன் பெருநோக்காகும்.

"தாய்மொழிக் கல்வியல்லாத மற்றைய கல்வி அடிமைத் தனத்தை வளர்க்கும்; மனித சுதந்திரத்தினை நலிவிக்கும்" என்கின்றார் ஆதாரக் கல்வித் திட்டத்தின் தாபகரான மகாத்மா காந்தி. எமது தாய்மொழிப் பிரயோகம் சம்பந்தமான கருத்தரங்கின் மூலம் தெரியவந்த விடயம் சில துறைகளின் கருத்துக்களைச் சொல்ல எங்கள் மொழியிலே கலைச் சொற்கள் இல்லை என்பதாகும். எனவே அத்துறைகளில் புதிய கலைச் சொல்லாக்கம் மிகமிக அவசியம் என்பதும் அதற்காக விரைந்து செயற்பட வேண்டும் என்பதும் உணரப்பட்டுள்ளது.

மருத்துவம் மிக முக்கியமான ஒரு துறை. அங்கு சகல மருத்துவ பாடநூல்களும் ஆங்கிலமொழியிலே இருப்பதால் தமிழ்மொழியிலே "மருந்துக்குக்கூட ஒரு புத்தகமும் இல்லாத நிலையுண்டு" என ஓர் ஆய்வாளர் இங்கு குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் மொழிபெயர்ப்பு நூல்கள் இல்லாத போது, புதிய கலைச்சொற்கள் எங்கிருந்து உருவாக முடியும்? இத்தகைய நிலைகளுக்கு நாம் பரிகாரம் தேட முயன்றால் எமது அடிப்படை நோக்கம் ஈடேறும்.

தொழில்நுட்பத் துறையை எடுத்துக்கொண்டால் தமிழ்மொழிப் பிரயோகம் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமாயின் வெகுசனத் தொடர்புச் சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றின் மூலம் தொழில்நுட்பக் கலைச்சொற்கள் வெளியிடப்பட வேண்டும். இதன் மூலம் மூலை

முடுக்குகளில் வாழும் தமிழ் பேசும் சமூகங்களை புதிய கலைச் சொற்கள் சென்றடைய முடியும் என்பது கட்டுரையாளர்கள் தரும் ஒரு கருத்தாகும்.

தமிழ் நாட்டிலே, விசேடமாகத் திருச்சி, தஞ்சாவூ ர், சிதம்பரம் போன்ற இடங்களிலுள்ள பேராசிரியர்கள் கலைச்சொல்லாக்க முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆயினும், நம்நாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு இக்கைங்கரியத்தில் ஈடுபட வேண்டும் என்பது பேராசிரியர் இராமசுந்தரம் அவர்களின் கருத்தாகும். நம் எல்லோரது கருத்தும் முழுமையாக ஈடேற வேண்டுமானால் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூ ர், தென்னாபிரிக்கா, மொரிசியஸ், ஷெஷல்ஸ் போன்ற நாடுகளிலிருந்து அறிஞர்களை ஈர்த்து இணைத்து மீண்டும் ஒரு மாபெரும் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

மேலும் இங்கு குறிப்பிட வேண்டிய இன்னொரு விடயம் எதுவெனில் சில தமிழ்ப்பதங்களுக்குப் பதிலாக ஆங்கிலப் பதங்களை உள்ளவாறே கண்மூடித்தனமாகப் பிரயோகிக்கும் தன்மை. இந்நிலைமை தடுக்கப்படல் வேண்டியதவசியம். கலைச் சொற்களை கண்டுபிடிப்பதற்காக ஆய்வாளர் கிராமங்கள் தோறும் சென்று சாதாரண மக்களுடன் அளவளாவ வேண்டும். தமிழறிவு, ஆங்கில அறிவுடன் விடயத் தெளிவும் உடைய புத்திஜீவிகள் ஒருங்கிணையவேண்டும். அவ்வேளையில் எமக்குக் கிடைக்கும் கலைச்சொற்களைப் பாட அடிப்படையில் வரன்முறைப்படுத்தவும் வேண்டும்.

தமிழில் ஏறக்குறைய மூன்று லட்சம் வார்த்தைகள் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளமை தெரியவருகின்றது. ஆயினும் வளர்ந்து வரும் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களை அடக்க இவை போதுமானவை அல்ல. பெயரளவில் தமிழர்களாக் வாழும் நிலைமை தமிழர் மத்தியில் இல்லாதொழிய வேண்டும்.

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூ தச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"

என்ற வசை தமிழினத்திற்கு உண்டாகாதவாறு நாம பார்த்துக்கொள்ள வேண்டும். இந்நிலையில் ஏற்கனவே இத்துறை சார்ந்த ஆய்வு முன்னோடிகளை வாழ்த்துவதோடு உலகளாவிய ரீதியில் தமிழ்ப் பேரறிஞர்களின் ஒத்துழைப்பினை நாம் நாடி நிற்கின்றோம். வானம் அளந்து வையம் அனைத்தும் அளந்திடும் வன்மொழியாக தமிழ்மொழி பல்லாண்டு வாழ, நாம் வழிசமைப்போம்.

சுந்தரம் டிவகலாலா

செயலாளர்

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

வடக்கு - கிழக்கு மாகாணம்

வெளியீட்டுரை

"தமிழ் மொழிப் பிரயோகம் - கணக்கெடுப்பும் பிரச்சனைகளும்" என்ற தலைப்பிலான ஆய்வரங்க நிகழ்வும் அதையொற்றி வெளிவரும் இந்நூலும் இக்கால கட்டத்தின் மிக முக்கியமான ஒரு வெளியீட்டுக் குரலாகும்.

தமிழ் மொழியும் அரசகரும மொழிகளில் ஒன்றாக ஆக்கப்பட்டதன் பின்னர் சட்டவடிவிலான ஒன்றாக அது தேங்கி விட்டது. நடைமுறையளவில் நிறைவேற்றுவதற்கு எதிராக பல சிக்கல்களை கொண்டிருந்தபடியால் சட்டமாக்குவதற்கு முன்பிருந்த நிலையிலேயே அது தொடர்ந்தும் இருந்து வருவது வருத்தத்துக்குரிய விடயம்.

ஆகவே, அச் சிக்கல்களின் பரிமாணங்களை இனங்கண்டு அதன் தீர்வுக்கான தொடர்ந்த தேடல்களுக்கும் ஆய்வுகளுக்கும் களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையை முன்னுணர்ந்தோம். அதற்காக எமது அமைச்சினால் மேற்குறித்த தலைப்பில் இவ்வாய்வரங்கு தொடக்கி வைக்கப்பட்டது. ஆய்வரங்கில் சமர்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை இப்போது "தமிழ் மொழிப் பிரயோகம்- கணக்கெடுப்பும் பிரச்சனைகளும்" என்னும் நூலாக வெளிக் கொண்டு வருவதன் மூலம் இவ்விடயம், பரந்த தளத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கான ஒரு திறந்த விவாதத்தைக் கோரும் தொடக்கமாக அமையும் என நம்புகிறோம்.

இந்நூலில் அடங்கியுள்ள ஆய்வுகள் பிரச்சினைகளின் தீர்வுகளுக்கான முன் மொழிவுகளே அன்றி முடிந்த முடிவுகளல்ல. திறந்த விவாதத்திற்குரியவை என நம்புவதால் காத்திரமான விவாதங்களையும், ஆலோசனைகளையும் அமைச்சு எதிர்பார்க்கிறது. அவ் விவாதங்களுக்கு களம் அமைத்து, முன்னெடுக்க அமைச்சு நம்பிக்கையுடன் காத்திருக்கிறது.

ஆய்வரங்க ஒழுங்கமைப்புக்கும் அதன் வெளிப்பாடான இந்நூலின் வருகைக்கும் அயராது உழைத்து, தக்க ஆலோசனைகள் மூலம் எமக்கு வழிகாட்டிய செயலாளர் அவர்களுக்கும், எம் அழைப்பை ஏற்று தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்து விவாத அரங்கில் தன் துறைசார் அனுபவங்களைப் பகிர்ந்து எம்மை உத்வேகப்படுத்திய பேராசிரியர் இராமசுந்தரம் அவர்களுக்கும், ஆய்வரங்க முழுநாட்களையும் பொறுப்பேற்று நடாத்தி, தொகுப்புரை வழங்கிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கும் இந்நூலின் வெளியீட்டுக்கு ஆய்வுக் கட்டுரைகளை நல்கிய ஆய்வாளர்களுக்கும் அனைத்துப் பங்காளர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டு வழங்கிய வடக்கு-கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களத்திற்கும் அதன் ஊழியர்களுக்கும் அமைச்சின் சார்பில் நன்றிகள்.

எஸ். எதிர்மன்னசிங்கம்

உதவிப் பணிப்பாளர் - பண்பாட்டலுவல்கள்

கல்வி , பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை அமைச்சு

வடக்கு - கிழக்கு மாகாணம்

தொகுப்பறிக்கை

இலங்கையின் பிரதான தமிழ் பேசும் மாநிலத்தைத் தனது நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரும் மாகாணசபை எனும் வகையில், இந்த நாட்டின் உத்தியோக மொழிகளுள் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தமிழ்மொழியின் ஆட்சி நிலைப்பிரயோகம் பற்றிய ஒரு கணக்கெடுப்பைச் செய்வது பொருத்தம் எனக்கருதப்பட்டு அக்கணக்கெடுப்புக்கு உதவக்கூடியவர்கள் எனக் கருதப்பட்டவர்களை அழைத்து தமிழ் மொழிப்பிரயோகம் பற்றிய சிறப்பறிவு கொண்டோரால் எழுதப் பெற்ற ஆய்வுக்கட்டுரைகள் பற்றிக் கலந்துரையாடி தமிழ்மொழிப் பிரயோகம் பற்றிய பிரச்சினைகளை இனங்காணும் நோக்குடன் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஆய்வரங்கின் பொதுத்தலைவராகப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் செயற்பட்டார்.

இவ்வாய்வரங்கிலே, தமிழகத்தின் தஞ்சாவூ ர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின், அறிவியல்,தமிழ்துறைத்தலைவரும் பேராசிரியருமான டாக்டர். இராமசுந்தரம் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். தமிழகத்தின் கல்வி, நிர்வாகத்துறைகளில் தமிழைப்பிரயோகிப்பதற்கான புலமைத்துவ நிலைச் செயற்பாடுகளுக்கு (கலைச் சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு முதலியவை) கடந்த பதினைந்து வருடங்களாகப் பொறுப்பாக இருந்துவரும் பேராசிரியர் இராமசுந்தரம் அவர்களின் அனுபவமும், தமிழகத்தில் தமிழ் மொழிப் பிரயோகம் பற்றிய அவர் அறிவும் இந்த ஆய்வரங்கிற்குப் பெரிதும் பயன்படும் என்பதற்காக அவர் அழைக்கப்பட்டிருந்தார். ஒவ்வொரு அரங்கின் பொழுதும் தொகுப்புரையாகத் தமிழகத்து அனுபவங்களை அவர் எடுத்துக்கூறினார். இப்பங்களிப்பு விடயத்தெளிவுக்கும், பிரச்சனைகளை இனங்காணுவதற்கும் பெரிதும் உதவின.

ஆய்வரங்கின் தொடக்க வைபவத்துக்கு வடக்கு-கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி பிரதம விருந்தினராக அழைக்கப் பட்டிருந்தார்.

ஆய்வரங்கிற் கலந்து கொள்வதற்கென நிர்வாகம், கல்வி, வைத்தியம், சட்டம் ஆகிய துறைகளில் அனுபவமுள்ளவர்களும், ஆர்வமுள்ளவர்களும் அழைக்கப் பட்டிருந்தனர். (பெயர்ப்பட்டியலை இணைப்பு 'அ' வில் பார்க்க)

ஆய்வரங்கு அமர்வுகள் திருமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்திலும், குழுநிலை ஆய்வுகள் ஹோட்டல் கிளப் ஒஷியானிக்கிலும் நடைபெற்றன.

ஆய்வரங்கினைத் தொடக்கி ஆரம்பவுரை நிகழ்த்திய வடக்கு-கிழக்கு மாகாண கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், இலங்கையின் பிரதான தமிழ் மொழிப் பிரதேசத்தின் மாகாண நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவுள்ள மாகாண சபையினதும், குறிப்பாக அதன் கல்வி, பண்பாட்டுத் துறைகளுக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சும், தமிழ்மொழியின் உத்தியோகபூ ர்வப் பிரயோகம் பற்றிய பிரச்சினைகள் பற்றித் தெளிவான கருத்துக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதற்காகவே இவ் ஆய்வரங்கு கூட்டப் பெற்றிருப்பதாகவும், அமைச்சின் அடுத்த வருடச்

செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு இவ் ஆய்வரங்கின் வழிவரும் ஆலோசனைகள் உதவி புரிவனவாக இருக்குமென்றும் கூறினார்.

பிரதம விருந்தினர் தமது உரையில், தமிழ்மொழிப் பிரயோகம் பற்றிய சிரத்தை இம் மாகாண சபைக்கு அவசியம் என்றும், அதற்கு இந்த ஆய்வரங்கு உதவும் என்றும் கூறினார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தலைமையுரையில், இந்த ஆய்வரங்குக்கான தேவையும், பணியும் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

சுயபாஷைக் கல்வி வழிவந்த நிர்வாக சேவையினர் 1960கள் முதல் தொழிற்பட்டு வருகின்றனர். தமிழ் இலங்கையின் உத்தியோக மொழிகளுள் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டு (1987) ஏறத்தாழப் பத்து வருடங்களாகின்றன. ஆயினும் தமிழ் எவ்வாறு கல்வி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும், நீதித்துறை மொழியாகவும் பயன்பட்டு வருகின்றது என்பது பற்றி இன்னும் திட்டவட்டமான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

கல்வி, நிர்வாகத்துறைகளில் தமிழைப் பயன்படுத்துவதற்கான ஆரம்ப முயற்சிகளில் (1950களில்) இலங்கை முன்னிலையில் நின்றதுண்மையெனினும், இப்பொழுது இத்துறையில் தமிழ் நாட்டின் வளர்ச்சி மிகக் கணிசமானது என்பது முக்கியமான ஓர் தன்மையாகும்.

வடக்கு-கிழக்கு மாநிலத்தில் நிலையான நிர்வாகம் 1980களின் ஆரம்பத்திலிருந்தே சீர்குலைந்துள்ளது என்பதும் மிக முக்கியமான உண்மையாகும். இதன் காரணமாக தமிழ் மொழி பிரதானமாகப் பேசப்படும் பிரதேசத்திலேயே தமிழ் மொழிப் பிரயோகம் நன்கு நடைபெறவில்லை என்பது தெரிகிறது.

இந் நிலையில், வடக்கு- கிழக்கு மாகாணத்துக்கு வெளியே 25% வீதத்திற்கு மேல் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பிரயோகத்தை நடைமுறைப்படுத்துவதும் நிச்சயப்படுத்துவதும் முடியாத காரியமாகவுள்ளது. இப்பிரச்சனை சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் இன்னும் எடுத்துக் கூறப்படவில்லை என்பது மனவருத்தப்பட வேண்டிய விடயமாகும்.

மேலும் அரசியல் துறையில் தமிழ்நிலைப்பட்ட விடயங்களுக்கான தலைமையில் தெளிவின்மையும், நிச்சயமின்மையும் நிலவும் இன்றைய நிலையில், இப்பிரச்சினை தமிழ் பிரதேசங்களில் நிர்வாகம் எல்லோரின் சிரத்தைக்குரிய ஒன்றாகின்றது. சிங்கள மொழி நிர்வாகிகள் நிர்வாகத்தில் சிங்கள மொழிப் பிரயோகத்திற் காட்டி வந்துள்ள அக்கறை தமிழ் மொழிப் பிரயோகத்திற்கான நிர்வாகிகளுக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும்.

இந்த விடயம் கல்வித்துறையில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இன்று கல்வி நிர்வாகம் பெரும்பாலும் தமிழில் நடைபெறுவதில்லை. அதற்கு மேலாக, கல்வித் திட்டமிடலில் தமிழின் பங்கு மிக மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இந்த நிலையில் இந்த ஆய்வரங்கு மிக முக்கியமான ஒன்றாகும்.

ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் பின்வருமாறு :

1. திரு.க.சண்முகலிங்கம்	-	நிர்வாகத்தில் தமிழ்மொழிப் பிரயோகம்- மொழித் திட்டமிடல் நோக்கிற் சில அவதானிப்புக்கள்.
2. ஜனாப். மு. இ. அ. ஜபார்	-	நிர்வாகத்தில் தமிழ்மொழிப் பிரயோகம்- கொள்கை செயற்படுத்துகை நிலை.
3. திரு. எஸ். ஸ்கந்தராஜா	-	நிர்வாகத்தில் தமிழ்மொழிப் பிரயோகம்- களநிலை
4. திரு. இ. இரங்கராஜா	-	தமிழில் நிர்வாகம் - கணனிப் பயன்பாடு
5. திரு. கு. சோமசுந்தரம்	-	இலங்கை ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைக் கல்வியில் தமிழ்மொழிப் பிரயோகம்
6. பேராசிரியர் சோ. சந்திரசேகரன் விரிவுரையாளர் மா. கருணாநிதி	-	உயர் கல்வியில் தமிழ் - மொழிப்பிரயோகம
7. திரு. வெ. சுந்தரலிங்கம்	-	தொழிற்கல்வித்துறை
8 திரு. ந சிதம்பரநாதன்	-	கல்விக்கான வளங்களும், ஆய்வுகளும்
9. பொறியியலாளர் து. தவசிலிங்கம்	-	தமிழ் மொழி மூலம் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
10 ஏ. ஞா. ஞானகுணாளன் வைத்திய கலாநிதி	-	தமிழ் மொழிப் பிரயோகம் - வைத்தியத்துறை
11. சோ. தேவராசன் சட்டத்தரணி	-	சட்டம், நீதித்துறை என்பவற்றில் தமிழ்மொழிப் பிரயோகம்

திரு. ந. சிதம்பரநாதன் ஆய்வரங்கிற்கு வரவில்லை. அவரது கட்டுரை வாசிக்கப்பெற்றது.

நிர்வாகம், கல்வி, சட்டம் சம்பந்தமாக வாசிக்கப்பெற்ற கட்டுரைகள் தொடர்பாக மிக்க சிரத்தையுள்ள கருத்துப்பரிமாறல்கள் நடைபெற்றன.

ஆய்வுக் கலந்துரையாடல் மட்டத்தில் கல்வி, நிர்வாகம் பற்றிய விடயங்கள் ஆழமாகவும் அகலமாகவும் ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் நேர்த்தியைப்பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகின்றது. குறிப்பாகக்கல்வி, நிர்வாகம், சட்டம் ஆகிய துறைகள் பற்றிய கட்டுரைகளில் இன்றைய நிலை நன்கு புலனாகிற்று. அக்கட்டுரைகளில் எடுத்துக் கூறப்பட்ட விடயங்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றன. தமிழின் நிர்வாகப் பிரயோகத்திலும், கல்விப்பயன்பாட்டிலும் பாரிய சீரழிவுகள் ஏற்படுவதற்கு இடமுண்டு என்பது நன்கு புலனானது.

நிர்வாகத்துறையில் தமிழுக்கு ஏற்பட்டுள்ள புறக்கணிப்பும், கல்வித்துறையில் தமிழுக்கு ஏற்பட்டுள்ள வளக்குறைவும், பின்னடைவுகளும் தமிழ் மொழிமூலம் கல்வி கற்போரை இன்னும் சில நாட்களில் ஓரங்கட்டிவிடும் ஆபத்தைத் தடுப்பது சிரமமாகவிருக்கும் என்ற கருத்து மிக வன்மையாக எடுத்துக் கூறப்பட்டது.

இந்தக் கருத்து மேலோங்கவே, ஆய்வரங்கக் கலந்துரையாடல்களில் சில விடயங்கள் முக்கியப்படலாயின.

1 தமிழ்க் கல்வியைப் பலப்படுத்துவதற்கும் செழுமைப்படுத்துவதற்கும் வடக்கு-கிழக்கு மாகாண சபை மட்டத்திற் செய்யப்பட வேண்டியவை.

2 நிர்வாகத்தில் தமிழ் மொழிப்பிரயோகத்தை உறுதிப்படுத்துவதற்கான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

3 தமிழ் மொழிவழிக் கல்வித் தேவைகட்கென ஆரம்ப கட்டத்திற் செய்யப்பட்ட கலைச்சொல்லாக்க முயற்சிகள் இன்று தறுக்கணித்த நிலையில் உள்ளன சொற்பிரயோக மாற்றங்கள் ஒரு புறமாகவும், புதிய கலைச் சொற்களின் வருகை இன்னொரு புறமாகவும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகின்றது

4. மூன்றாம் நிலைக் கல்வியில் (Tertiary Education) தமிழ் மொழிப் பயில்வுக்கேற்பட்டுள்ள மிகப் பெரிய பின்னடைவு நிலை

5 தமிழ் மொழிப் பிரயோகத்தைச் சாதாரண வாழ்வியல், நிர்வாக மட்டங்களில் ஸ்திரப்படுத்துவதற்கும், சுலபப்படுத்துவதற்குமான வழியில் நடைமுறைத் தமிழ்ப் பயில்வு ஒன்றினை மேற்கொள்ளல்.

6 சட்ட, நீதித்துறைகளில் தமிழுக்கு இன்றுள்ள இயலாமை நிலையினைத் திருத்துவதற்கான வழிவகைகள் காணுதல்

இவ்வாறு பிரச்சினைகள் முனைப்புறவே இவை பற்றிய ஆழமான, நுண்ணிய அலசலுக்கு குழுநிலை விவாதங்களும், பரிந்துரைகளும் வாய்ப்பானவையாக இருக்குமென்று கருதப்பட்டது.

அந்தக் கருத்தின் அடிப்படையில் பின்வரும் குழுக்கள் ஆழமான, நுண்ணிய ஆய்வுக்காக நியமிக்கப்பட்டன.

குழு 1 - பாடசாலை மாணவர்களுக்கான உப பாடநூல்களைத் தயாரித்தல்

குழு 2 - பள்ளிப்படிப்பின் இறுதி முதல் மூன்றாம் கல்வி நிலையில் தமிழ்பேசும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்

குழு 3 - நடைமுறைத் தமிழ்

குழு 4 - கலைச் சொல்லாக்கம்

குழு 5 - தமிழ் மொழிப் பிரயோகத்தை அடிநிலைவரை கொண்டு செல்லல்.

(இணைப்பு 'ஆ' யில் ஒவ்வொரு குழுவிலும் இடம் பெற்றோரின் பெயர்கள் தரப்பட்டுள்ளன)

இக் குழுக்கள் செய்த பரிந்துரைகள் ஒவ்வொன்றும் பொது அரங்கில் மீள எடுத்துக் கூறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. (இணைப்பு 'இ' யில் குழுக்களின் பரிந்துரைகள் உள்ளன.)

குழுநிலையிற் பரிந்துரைக்கப்பட்டனவே செயற்திட்டங்களாக அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஏறத்தாழ 1977 இன் பின்னர் இத்தகைய ஒரு சந்திப்பு நிகழவில்லையாதலால் இந்த ஆய்வரங்கிற் படிக்கப்பெற்ற கட்டுரைகளிலும், செய்யப்பட்ட பரிந்துரைகளிலும் காணப்படுகிற கருத்துக்கள், இந்த மாகாணசபை மட்டத்தில் மாத்திரமல்லாது, தேசிய மட்டத்திலும் மிக முக்கியமான கவனத்தைப்பெற வேண்டியவையாகின்றன.

எனவே இந்த அறிக்கையினையும் அதன் இணைப்புக்களையும் தமிழிற் பிரசுரிப்பது மாத்திரமல்லாது, ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து தேசிய மாகாண மட்டங்களில் இவ்விடயங்கள் சம்பந்தமாகத் தொழிற்படும் அமைச்சுக்களுக்கும், நிறுவனங்களுக்கும் அனுப்ப வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பேராசிரியர் இராமசுந்தரத்தின் ஆலோசனைகள் கலந்துரையாடல்களின் பொழுது மிகுந்த பயனைத் தந்தன. அதற்காக ஆய்வரங்கினர் அவருக்குத் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

கட்டுரை வாசித்தவர்களும், ஆய்வரங்கிற் கலந்து கொண்டவர்களும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கும் அவர் தம் உத்தியோகத்தர்களுக்கும் செய்யப்பட்டிருந்த ஒழுங்குகளுக்காக நன்றி தெரிவித்தனர்.

குழுநிலைப் பரிந்துரைகள் இக்கால கட்டத்தின் தேவைகளை உணர்த்துவனவாக உள்ளமையால் இந்த வரலாற்றுப் பொறுப்பை இவ்வமைச்சு உரிமையுடன் நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எடுத்துக் கூறப்பட்டது.

வடக்கு – கிழக்கு மாகாண சபையின் 1996ம் ஆண்டு இலக்கிய விழாவின் ஓர் அம்சமாகத் திருகோணமலையில் 1996 நவம்பர் 3,4,5 ம் திகதிகளில் நடாத்தப்பெற்ற "தமிழ் மொழிப் பிரயோகம் – கணக்கெடுப்பும் பிரச்சினைகளும்" என்ற ஆய்வரங்கு பற்றிய தொகுப்பறிக்கை

நிர்வாகத்தில் தமிழ் மொழிப்பிரயோகம்

மொழித் திட்டமிடல் நோக்கில் சில அவதானிப்புகள்

க. சண்முகலிங்கம்

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும்

ஒரு நாடு தேசிய மொழியாகவும், உத்தியோக மொழியாகவும் எந்த மொழியைத் தேர்ந்து கொள்கின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டு அதனை கீழ்வரும் மூன்று பிரிவுகளுள் ஒன்றுள் அடக்கலாம்.

01.அந்நிய மொழிவகை :- (Exoglossic Model)

இறக்குமதி செய்யப்பட்டதும், காலனியவாதிகளால் புகுத்தப்பட்டதுமான அந்நிய மொழி நாட்டில் உத்தியோக மொழியாக இருக்கும். ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஸ் ஆகியன இந்தப் பங்கை முன்னாள் காலனிகளில் நிறைவேற்றின.

02.சுதேசிய தனி மொழிவகை :- (Endoglossic Model)

நாட்டின் பெரும்பான்மை மக்களால் பேசப்படும் ஒரு மொழியினை தேசிய மொழியாகவும், உத்தியோக மொழியாகவும் உபயோகித்தல். இத்தகைய சூழ்நிலை நிலவும்போது சிறுபான்மை மொழியினரின் மொழி உரிமைகளைப் பேணுதல் என்னும் பிரச்சினையை நாடு எதிர்கொள்ளும்.

03.கலப்பு வகை :- (Mixed Model)

அந்நிய மொழி, சுதேசியப் பெரும்பான்மை மொழி என்ற இரு அந்தங்களுக்கு இடையே பல கலப்பு நிலைகள் உள்ளன. தேசிய மொழி, உத்தியோக மொழி என்னும் அந்தஸ்து வேண்டிநிற்கும் பணிகளை நாட்டின் சுதேசிய மொழிகள் பலவும் பங்கிட்டுக்கொள்ளும் போதும் அந்நிய மொழியான ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஸ் என்பவற்றுள் ஒன்று (சில சந்தர்ப்பங்களில் இரண்டு) அப்பணிகளில் சிலவற்றைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும்போதும் கலப்புவகை தோன்றும்.

மானிடவியலில் Endogamous,Exogamous என்ற இரு சொற்களில் உபயோகமாகும் Endo, Exo என்ற இரு சொற்களும் Glossic என்னும் லத்தீன் சொல்லுடன் இணைக்கப்பட்டு Exoglossic, Endoglossic என்ற சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கையின் மொழிக் கொள்கை என்னும் விடயம்பற்றி நாம் சிந்திக்கும்பொழுது, மேற்கூறிய மூன்று வகை மாதிரிகளுள் இலங்கையை எதனுள் சேர்க்கலாம் என்ற கேள்விக்குரிய விடையை முதலில் நோக்குவோம்.

1956ம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டம் இலங்கையை சுதேசியத் தனிமொழி வகைக்குள் கொண்டு வந்து நிறுத்தியது. 1956ம் ஆண்டு முதல் 1989ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தின் 16 ஆவது திருத்தக் காலம் வரையான 33 ஆண்டு காலப் பகுதிகளில் சுதேசியத் தனிமொழிவகை என்ற பிரிகோட்டின் எல்லைக்குள் இலங்கையின் மொழிக்கொள்கை அமைந்தது.

1989ம் ஆண்டின் 16வது திருத்தமும் அதற்கு முந்திய 13வது திருத்தமும், 1978ல் அரசியல் யாப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களும் இலங்கையை கலப்பு வகைக்குள் நகர்த்தியுள்ளன.

1943ம் ஆண்டில் சட்டசபையில் முன்மொழியப்பட்ட ஒரு தீர்மானத்தில் கல்வி மொழியாகவும், உத்தியோக மொழியாகவும் சிங்களம் அமைதல் வேண்டுமெனக் கூறப்பட்டது. இக் கருத்துக்கு 1956ல் சட்ட உருவம் கொடுக்கப்பட்டது. 1956க்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் மொழிக்கொள்கை இன்னோர் முனையான அந்நிய மொழிவகைக்குள் காணப்பட்டது. இக்காலத்தில் ஆங்கிலம் உத்தியோக மொழியாகவும், தேசிய மொழியாகவும் விளங்கியது.

மேற்குறித்த வகைப்பாடு இலங்கையின் மொழிக்கொள்கையின் மாற்றங்களையும் தமிழ் மொழி உபயோகம் இந்த மூன்றுவகை நிலைகளிலேயும் எதிர்கொண்ட பிரச்சனைகள் யாவை என்பதையும் புரிந்துகொள்வதற்கு எமக்கு உதவுகின்றது.

இந்த வகை மாதிரிகளுக்குள் அடங்கும் நாடுகள் யாவை? அந்நாடுகளில் பின்பற்றப்பட்ட மொழிக்கொள்கைகளின் முக்கிய இயல்புகள் யாவை? என்பன இலங்கையின் மொழிக்கொள்கை பற்றியும், இந்த நாட்டின் சிறுபான்மை மொழியான தமிழின் உபயோகம் பற்றியதுமான பிரச்சினைகளை அறிந்துகொள்ள உதவுகின்றது. தேசியமொழி, நிர்வாகமொழி, உத்தியோகமொழி, கல்விமொழி, நீதிமன்றங்களின்மொழி, தொடர்புமொழி ஆகியன மொழிக்கொள்கை தொடர்பாக அடிக்கடி உபயோகிக்கப்படும் தொடர்களாகும். இத் தொடர்கள், மொழித்திட்டமிடல் (Language Planning)-என மொழியியலாளர்களால் குறிப்பிடப்படும் விடயப் பரப்புகளில் அடங்குவனவாகும்.

மொழித் திட்டமிடல் இரு பிரிவுகளைக் கொண்டது.

01. நிலை அல்லது அந்தஸ்து பற்றிய திட்டமிடல் (Status Planning)
02. மொழியை வளப்படுத்தும் திட்டமிடல் (Corpus Planning)

கலைச் சொல்லாக்கம், அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் போன்ற கருவி நூல்களை ஆக்கல், மொழிபெயர்ப்பு எழுத்துச் சீர்திருத்தம், கணனிப் பயன்பாடு ஆகிய விடயங்களை உள்ளடக்கியதே மொழியை வளப்படுத்தும் திட்டமிடல் ஆகும்.

"தேசிய மொழி" (National Language)"உத்தியோக மொழி" (Official Language) என்னும் தொடர்களை எடுத்துக் கொள்வோம். இவை மொழித் திட்டமிடலில் முதலாவது அம்சமான நிலை அல்லது அந்தஸ்து (Status) பற்றியதாகும். பன்மொழிச் சமூகம் ஒன்றில் வெவ்வேறு மொழிகளுக்கு வழங்கப்படும் பங்கும், பணிகளும் யாவை என்பதே நிலைத் திட்டமிடலின் மையப்பிரச்சினை. ஒரு மொழி ஆற்றவேண்டிய பணிகளாக நாட்டின் சிவில் நிர்வாகம், நீதி நிர்வாகம், கல்வி, சமயம், தொடர்புசாதனம், வர்த்தகம், நிதி, தொழில் என்பன அமைகின்றன. இத் துறைகள் தொடர்பாக மொழியின் பங்கு என்ன என்பதை நிர்ணயிக்கும்போது மொழி ஒரு வளமாக (Resource) விளங்குவதைக் காணலாம். நிதி, மனிதவளம் என்பனவற்றை வெவ்வேறு மொழிகளுக்கு ஒதுக்குதலும் மொழியென்னும் வளத்தின் பேணுகை, பாதுகாப்பு, போசனை வளர்ச்சி என்பனவும் நிலைத் திட்டமிடலின் அம்சங்களாகும்.

மொழித் திட்டமிடலின் நோக்கம் யாது? யார் திட்டமிடுகின்றார்கள்? யாருக்காகத் திட்டமிடுகின்றார்கள் என்பனவும் மிக முக்கியமான கேள்விகள். யார் திட்டமிடுகிறார்கள் என்ற கேள்விக்குரிய சுருக்கமான விடை ஒரு நாட்டின் உயர்குழாம் (Elites) திட்டமிடுகின்றது என்பதே. உயர்குழாம் என்போர் யார்? ஆளும் குழுக்களின் (Ruling Classes) உறுப்பினர்களாக உள்ள தொழிலர்களே (Professionals) திட்டமிடலைச் செய்கின்றார்கள். இத்தொழிலர்கள் யாவர்? உயர் வர்த்தகர்கள், தொழில்

அதிபர்கள், முன்னணி ஆய்வறிவாளர்கள், அரசியல் தலைவர்கள், சிவில்சேவையின் உயர் அதிகாரிகள், இராணுவத்தின் தலைமைப்பீடத்தைச் சார்ந்தோர், திருச்சபையின் தலைவர்கள், சமயப் பெரியார்களும் தலைவர்களும், தொழிற்சங்கங்கள், விவசாயிகள் ஸ்தாபனங்கள் ஏனைய அமுக்கக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோரே மொழித் திட்டமிடலில் பங்குபெறும் உயர் குழாத்தினர். ஆதலால் மொழித்திட்டமிடல் சமூகத்தில் அதிகாரம்பற்றிய ஒரு விடயமாகும். அதிகாரம் (Power) என்பது இங்கு அரசியல் அதிகாரத்தை குறித்து நிற்கின்றது என்பது வெளிப்படை.

யார் திட்டமிடுகின்றனர் என்பதற்கு உயர்குழாத்தினர் திட்டமிடுகின்றனர் என விடை பகன்றோம். அடுத்ததாக ஆளும் குழுக்களின் உறுப்பினர்களாகவுள்ள உயர்குழாம் என்பதையும் குறிப்பிட்டோம். உயர்குழாம் என்னும் கருத்து மிக எளிமைப்படுத்தப்பட்டதொன்று என்பதை மட்டும் இங்கு அழுத்திக்கூறுதல் போதுமானது.

மொழிக்கொள்கை பற்றித் திட்டமிடுவோர் தம் இலக்குகளாக (Goals) எதனைக் காள்கின்றனர்? மொழித்திட்டமிடலில் இலக்குகளாக இருவிடயங்கள் அமைகின்றன.

01. அரசுயந்திரம் தடைகளின்றிச் செயல்திறன் மிக்கதாக இயங்குதல் வேண்டும். இதனை செயல்முறைத்திறன் (Operational Efficiency) எனக் கூறலாம். மொழிக்கொள்கையின் இலக்காகச் செயல்திறன் விளங்குகின்றது. தாமதம், விரயம் இன்றி அரசு செயற்பட வேண்டும். கல்வி, சுகாதார சேவைகள் மக்களுக்கு கிடைத்தல் வேண்டும். வர்த்தகம், தொழில்கள், தொடர்பாடல் என்பன தடையின்றிச் செயற்படவேண்டும்.

02. மொழிக்கொள்கையின் இரண்டாவது இலக்காக அமைவது மொழி, சாதி, இனம், மதம் என்ற பேதங்களுக்கு அப்பாற்பட்ட ஒற்றுமை உணர்வை நாட்டில் உருவாக்கல். இது "தேசியம்" (Nationalism) பற்றிய தேவையாகும். மொழியின் ஊடாக நாடு தன் Authenticity யை நிலைநாட்ட முயல்கின்றது. மூன்றாம் உலக நாடுகளில் தோன்றிய தேசியவாதம் ஒரு நாட்டின் புதல்வர்கள் நாம் என்ற ஒற்றுமையை அடைய முயன்றது.

எமது நாட்டிலும், பிறநாடுகளிலும் "தேசியமொழி", "உத்தியோகமொழி" ஆகிய பதங்கள் உபயோகிக்கப்படும்பொழுது மொழித்திட்டமிடலின் இரு இலக்குகள் அவற்றில் வெளிப்படுவதைக் காணலாம். தேசியமொழி தேசீயவாதத்துடன் தொடர்புபட்டது. உத்தியோகமொழி அரசுயந்திரத்தின் செயல்திறனுடன் தொடர்புபட்டது.

உதாரணமாக உயர்நீதிமன்றுகள் ஆங்கிலத்தின் உபயோகத்தை நீக்கி சுதேச மொழிகளை உபயோகித்தல் சாத்தியமற்றது என்று ஒருவர் கூறும்பொழுது செயல்திறன் (Operational Efficiency) பற்றியே குறிப்பிடுகின்றார்.

"தேசியமொழியின்" பணிகளையும் "உத்தியோக மொழியின்" பணிகளையும் நாட்டின் பெரும்பான்மையினரது சுதேச மொழியொன்றினால் மட்டும் ஆற்றப்படல் முடியுமாயின் அந்த நாடு சுதேசத் தனிமொழி மாதிரியின் தூய எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படலாம். ஐக்கிய இராச்சியம், யப்பான் ஆகியன இதன் தூய மாதிரிகளாகும். இலங்கை அந்நிய மொழி மாதிரியில் இருந்து சுதேசத்தனிமொழி மாதிரியை இலக்காகக்கொண்டு **1956** முதல் செயற்பட்டது.

கானா, நைஜீரியா, உகண்டா, பப்புவாநியுகினி, பிஜி ஆகிய நாடுகள் அந்நிய மொழி ஒன்றை உத்தியோக மொழியாகத் தேர்ந்தன. தேசியம், செயல்திறன் என்னும் இரு

இலக்குகளும் ஒன்றோடொன்று முரண்பட்டவை. இந்நாடுகளில் பெருமரபு (Great Tradition) என்று கூறக்கூடிய மொழிகள் இருக்கவில்லை. தரப்படுத்தப்பட்ட மொழி (Standard Language) எனக் கூறமுடியாத பல மொழிகள் இருந்தன. நாட்டினை ஐக்கியப்படுத்தவும் திறமையான நிர்வாகத்தை உருவாக்கவும் சுதேசமொழி எதுவும் பயன்படாது என்பதை அந் நாடுகளின் உயர்குழாத்தினர் உணரும்போது "தேசியம்" என்ற நோக்கைவிட "செயல்திறன்" என்னும் தேவை முதன்மை பெற்றது.

அந்நியமொழியை அடையாளமாகக்கொண்ட "தேசியம்" ஒன்றையும் இந்நாடுகளில் காணலாம். நைஜீரியா போன்ற நாடுகளில் பிரதேச மொழிகள் சில கணிப்பில் கொள்ளப்படவேண்டிய முக்கியத்துவம் உடையனவாய் இருந்தன. இதனால் "பிரதேச உத்தியோக மொழிகள்" என்ற அந்தஸ்தைச் சில மொழிகளுக்கு வழங்கும் தேவை உண்டானது.

இந்தியா கலப்பு மாதிரியின் மிகச் சிறந்த உதாரணமாகும். இங்கு 15-25 வரையான பெருமரபு மொழிகள் உள்ளன. இந்திய அரசியல் யாப்பு இப் பெருமரபுகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் தேவையை உணர்ந்தது.

வட மாநிலங்களின் மொழியாகவும் மக்கள் தொகையின் பெருந்தொகையினரின் மொழியுமான இந்தி "தேசியம்" நோக்கிய தேவைகளுக்கான மொழியாக விளங்கலாயிற்று. இந்திய அரசின் செயல்திறனை, வளர்ச்சியை உறுதிசெய்யும் பணியை ஆங்கிலம் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றது.

கலப்பு மாதிரியின் அடிப்படை பிரச்சினைகளில் ஒன்றைக் குறிப்பிடுவோம். இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் தமிழ்மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட ஒருவர் நான்கு மொழிகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

01. தாய்மொழியான தமிழைக் கற்றுத் தேர்ச்சிபெறல் ஒரு பண்பாட்டுத்தேவை

02. மாநிலத்தின் உத்தியோக மொழியான தெலுங்கு மொழியையும் அவன் கற்க வேண்டும்.

03. இந்தியைக் கற்க வேண்டும்.

04. ஆங்கிலத்திலும் தேர்ச்சி உடையவனாதல் வேண்டும்.

மொழி தொடர்பான இருவகை ஆளுமைகள் (Domains) உள்ளன. ஒன்று அதிகாரம் (Power) சார்ந்தது. மற்றது பண்பாடு (Culture) ஐக்கியம் (Solidarity) சார்ந்தது.

ஆந்திராவில் வாழும் தமிழ் மொழி பேசுவோன் குடும்பம், நண்பர்கள், சமய வழிபாடு என்ற துறைகளில் தமிழின் ஆளுகைக்கு உட்படுகின்றான். கடைத்தெரு, பொலிஸ் நிலையம், அரச அலுவலகங்கள், நீதிமன்று வர்த்தகம், தொழில் ஆகிய துறைகளில் தெலுங்கு, ஆங்கிலம், ஹிந்தி ஆகியன அதிகாரவலு அளிக்கும் மொழிகளாக (Language of Power) அவன் உணருகின்றான்.

உத்தரப்பிரதேசத்தில் வாழும் ஹிந்திமொழி பேசுவோன் ஹிந்தி, ஆங்கிலம் இரண்டிலும் தேர்ச்சி பெறுவதன் மூலம் தன்தேவைகளில் நிறைவைக் காண்கின்றான். கலப்பு மாதிரியில் எழும் இத்தகைய பிரச்சினைகள் இலங்கைக்கும் பொருந்துவனவே.

மூவகை மாதிரிகளிலும் ஒரு குறிப்பிட்ட மொழி வகிக்கும் நிலை அல்லது அந்தஸ்து பின்வரும் ஆறு படிநிலைகளைக் கொண்டிருக்கும்.

01. ஒரே ஒரு ஆட்சி மொழி (S. O) - - Sole Official Language

02 இணை ஆட்சி மொழி (J. O) - - Joint Official Language

03 பிரதேச உத்தியோக மொழி (R. O) - - Regional Offical Language

04. ஊக்கப்படுத்தி வளர்க்கப்படும் மொழி (P. L) - - Promoted Language

05. சகித்துக்கொள்ளப்படும் மொழி (T. L) - - Tolerated Language

06. ஒதுக்கப்படும் மொழி (D. L) - - Discouraged Language

ஒரு நாட்டிற்குள்ளே ஒரு குறிப்பிட்ட மொழி பிரதேசம் சார்ந்தும், துறைசார்ந்தும் வகிக்கும் நிலையையும் ஆறு கட்டங்களில் பொருத்தி ஆராய்வதும் பயனுடையது. உதாரணமாக இலங்கையின் மத்திய மாகாணத்தில் தமிழ்மொழி முதல் மூன்று வகைகளுள் ஏதேனும் ஒரு நிலையை வகிக்கின்றதா? அதனை சகித்துக் கொள்ளப்படும் அல்லது ஒதுக்கப்படும் மொழி எனக் கொள்ளுவதா? அல்லது பிரதேச உத்தியோக மொழியாகவும் ஊக்கப்படுத்தப்படும் மொழியாகவும் கொள்ளுவதா? நல்ல எதிர்காலம் உள்ள மொழி எனக் கூறலாமா என்பது சிந்திப்பதற்கு ஏற்றவை.

☐

நிர்வாகத்தில் தமிழ்மொழிப் பிரயோகம்

கொள்கை செயற்படுத்துகை நிலை

மு. இ. அ. ஜபார்
திட்டச் செயற்படுத்துகை உத்தியோகத்தர்

அறிமுகம் :

பொதுவாக நிர்வாகம் என்பது மூன்று வகை நிலைகளுக்குள் உள்ளடக்கப் படுகின்றது. அவை

1. கொள்கை உருவாக்க நிலை
2. கொள்கைச் செயற்படுத்துகை நிலை
3. களநிலை என்பவையாகும்

இக்கட்டுரை, நிர்வாகத்தின் கொள்கை செயற்படுத்துகை நிலையில் தமிழ்மொழிப் பிரயோகம் எவ்வகையில் உள்ளது என்பது பற்றி கணக்கெடுப்புச் செய்ய முயல்கிறது. இக் கணக்கெடுப்புக்கு வர முன்னர் மொழி என்பது என்ன என்றும் தமிழ் மொழி தொடர்பான சட்ட வரையறைகள் என்ன என்றும் தெரிந்து கொள்தல் ஒரு முன்நிபந்தனையாகிறது.

மொழி என்பது என்ன?

குழு அல்லது பிரிவு அல்லது இன ரீதியாக மனிதர்களைத் தனித்துவப்படுத்தி அடையாளம் காட்டும் ஊடகமாகவே மொழி காணப்படுகிறது. அதாவது தேசியம் என்பதன் முதல்வரிசைத் தேவையே மொழி. ஆகவே மொழியானது வெறுமனே தொடர்பாடல் ஊடகம் மட்டுமல்ல என்பது கவனிக்கத்தக்கது.

தமிழ் மொழி தொடர்பான சட்டவரையறை

இலங்கையில் சோழர்களின் படையெடுப்புக்காலம் தொடக்கம் ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்புக்காலம் வரை சுதேச மொழிகளின் இறைமை பாதிப்புக்குள்ளாகவில்லை. ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னர் ஆங்கிலம் நிர்வாகமொழியாக மாற்றப்பட்டது இதன் தொடக்க காலத்திலிருந்தே சுதேசமொழிகளின் இறைமை பாதிப்புக்குள்ளாகத் தொடங்கியது மிகக் குறிப்பாக கோல்புறூக் ஆணைக்குழு உருவாக்கப்பட்ட காலம் தொடக்கம் எனக்கூறலாம். இது 1833 ஆம் ஆண்டாக இருக்கவேண்டும். இதற்குப் பிற்பட்ட காலமே சுதேச மொழிகளின் இறைமை காப்பாற்றப்படுவதற்கான விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியது.

1943ஆம் ஆண்டு ஜே. ஆர் ஜெயவர்த்தனா சிங்கள மொழியை அரச-கரும மொழியாக்க வேண்டுமென ஆலோசனை தெரிவித்திருந்ததையும் அடுத்த தடவை பதவிக்கு வரும்போது சிங்களம் அரச கரும மொழியாக்கப்படும் என்ற சேர். ஜோன். கொத்தலாவலையின் 56ஆம் ஆண்டுக்கு முந்தைய ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டு வாக்குறுதியையும் இதற்கு உதாரணமாக மனங்கொள்ளலாம்.

இவ்விடயம் 1956இல் 33ஆம் இலக்க அரச கருமமொழிச் சட்டத்தின் பிரகாரம் எஸ். டபிள்யூ . ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்கள மொழியை மட்டும் அரச கரும மொழியாக்கியதன் மூலம் நிர்வாக ரீதியாக சுதேச மொழிகளான சிங்களம், தமிழ் ஆகியவற்றிற்கிடையே முரண்பாட்டுக்கான அத்திவாரக்கல்லை முதன் முதலாக நட்டு வைத்தார். இதன் தொடர்ச்சியாக ஏறக்குறைய இரண்டு வருடங்கள் தமிழ் மக்களால் வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்புணர்வுகளை சமாளிக்கும் பொருட்டு 1958இல் தமிழ் மொழி ஒழுங்கு விதிமுறைகள் சட்டத்தை பண்டாரநாயக்கா அறிமுகப்படுத்தினார். இது பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது.

வடக்கு-கிழக்கிலுள்ள மக்கள் தமது நிர்வாகத்தை தமிழ்மொழியிலேயே நடாத்தும் உரிமை பற்றிய உள்ளடக்கத்தை இச்சட்டம் கொண்டிருந்தபோதும் அன்று உருவாக்கப்பட்ட அரச கரும மொழிகள் திணைக்களம் சிங்கள மொழி பற்றி மட்டுமே அக்கறை செலுத்தியது. இதனால் தொடர்ச்சியாக தமிழ்மொழி நிர்வாகத்தின் எல்லா நிலைகளிலும் புறக்கணிக்கப்பட்டதுடன் தமிழ்மொழி பேசுவோரின் எதிர்ப்புணர்வு தீவிர வளர்ச்சியுற்று வந்ததையும் அவதானிக்கலாம். இந்நிலைமை 1987வரை அதி கூர்மையுற்றது எனலாம்.

1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திருத்தம் இருமொழிச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதற்கிணங்க தமிழும் முதன்முதலாக அரச கரும மொழியாகியது. ஆயினும் அரசியலமைப்புச் சட்டத்தின் 18ஆம் உறுப்புரையின் 1ஆவது 11ஆவது 111ஆவது சரத்துக்களும் 19ஆவது உறுப்புரையும் பல்வேறு கருத்து முரண்பாடுகளுக்கு வழிவகுத்தன.

இதனால் 1988ஆம் ஆண்டு 16ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இலங்கையின் நிர்வாகம், நீதி, கல்வி போன்ற துறைகளில் கொள்கை மாற்றத்தை ஏற்படுத்தி மொழியின் பிரயோகம், செயற்பாடு பற்றியும் வலியுறுத்தியது. இதன் பிரகாரம் அரச மொழி இருமொழிக் கொள்கையாக மாற்றமுற்றது.

அதுமட்டுமல்லாது வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் சிங்களம் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என இத்திருத்தம் வலியுறுத்துவதோடு குறிப்பிட்ட பிரிவினர் பெரும்பான்மையாக இருக்கும் ஒரு பிரிவில் அவர்களின் மொழியே நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்பதற்கு வர்த்தமானி அறிவித்தல் வழங்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என்பதையும் அழுத்துகிறது.

இவ் இறுதியான சட்டவரையறையும் அதற்கு முந்திய சாதகமான சட்டவரையறையும் நமக்கு உணர்த்தும் மொழிரீதியான சட்ட உண்மை யாதெனில்,எந்தவொரு பிரஜையும் தான் விரும்பும் மொழியில் கற்க, தொடர்பு கொள்ள, வழக்குத் தொடர மொழி தொடர்பான ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும் என்பதேயாகும்

நிர்வாகத்தில் தமிழ்மொழிப் பிரயோகம்

மேலே நாம் கிரகித்துக் கொண்ட சட்ட வரையறைகளுக்குட்பட்டு அல்லது சட்ட வரையறைகளை ஒழுகி நிர்வாகத்தின் எல்லா நிலைகளிலும் தமிழ்மொழியைப்

பிரயோகிக்க முடியும் என்பதை நம்பலாம். சிறப்பாக செயற்படுத்துகை நிலையில் தமிழ்மொழிப் பிரயோகம் பற்றியதே இக்கட்டுரை ஆகையால் நிர்வாகத்தின் மற்றிரு நிலைகளான கொள்கை உருவாக்க நிலையும், களநிலையும் தொடப்படுவது தவிர்க்கப்படுகிறது.

"தீவு அடங்கலாக" எனவும் கருத்து நிலையிலிருந்து சட்ட வரையறையில் அழுத்தம் கொடுக்கப்படும் வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகத்தின் செயற்படுத்துகை நிலையை நாம் அவதானிக்குமிடத்து தமிழ்மொழிப்பிரயோகம் என்பது குறைந்த பட்ச வீதத்தினைக் கூடத்தாண்டவில்லை; ஓர் இழிநிலையிலேயே உள்ளது எனலாம்.

அதாவது வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு நிர்வாக மட்டத்திலோ அல்லது திணைக்கள நிர்வாக மட்டத்திலோ, ஆவணங்களைத் தயாரித்தலிலோ, கடிதத் தொடர்பிலோ, கட்டளை பிறப்பித்தலிலோ, பிரமாணக் குறிப்புகளிலோ, கூட்ட அறிக்கைகளிலோ, படிவங்களிலோ, விளம்பரப்பலகைகளிலோ, கூட்டங்களிலோ, கலந்துரையாடல்களிலோ, மாநாடுகளிலோ தமிழ் மொழி முறையாகப் பிரயோகிக்கப்படவில்லையென்றே கூறலாம்.

இந்நிலைமைக்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன என்பதை நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

1. மொழிதொடர்பான நடைமுறைத்திட்டங்களிலோ, செயற்படுத்தலிலோ அக்கறையற்ற அரசியல் தலைவர்கள்
2. உயர் அதிகாரிகளின் அசிரத்தையும் பிறமொழி வித்துவமும்
3. சட்ட ரீதியான அதிகாரம், உரிமை என்பவற்றின் வீச்செல்லை பற்றிய போதிய அறிவின்மை
4. தற்துணிவின்மையும் அச்சமும்
5 சுய குழுப்பற்றும் சுய மொழி பற்றிய அக்கறையும் இன்மை
6. பதவியுயர்வுக்காகவும் நன்மதிப்புக்காகவும் ஏங்குதல், அதற்கான எவ்வகை விட்டுக்கொடுப்புக்கும் தயாராய் இருத்தல்.
7. ஒத்துழைப்பு மட்டத்தின் மீதான காழ்ப்புணர்ச்சி.
8. மரபுசார் முகாமையை அல்லது பணிக்குழு ஆட்சியை பின்பற்றுதல்
9. உலகப் போக்கிற்கேற்ப மாற்றமுறாத அறிவு.

இக்காரணிகள் ஒரு சுயநிர்வாக காலகட்டத்தில் இருந்து இன்று வரை அகற்றப்படாது தொற்றிக் கொண்டிருக்கும் குறைபாடு அல்லது தடைகளாகும். இவற்றுக்கப்பால் மிகமுக்கியமான அம்சங்களின் செல்வாக்கு அல்லது குறுக்கீடு பற்றி கவனம் கொள்வதும் அவசியமாகிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் மிகக் குறைந்தபட்ச அதிகாரங்களுடன் உருவாக்கப்பட்ட மாகாணசபை வெவ்வேறு பட்ட அரசியல் அழுத்தங்களின் காரணமாக கலைக்கப்பட்டு தற்போது வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகம் ஆளுநரின் நேரடிக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இம்மாகாணத்தில் ஒரு தேர்வு செய்யப்பட்ட அரசியல் கட்டமைப்போ அமைச்சரவையோ இல்லை. இது பகிரப்பட்ட அதிகாரங்கள் தொடர்பான சட்ட வாக்கங்களை மேற்கொள்ளும் சூழ்நிலையை இல்லாது ஒழித்துள்ளது. தற்போது மாகாண அமைச்சரவையின் பெரும்பாலான அதிகாரங்கள் ஆளுநர் வசமுள்ளது. துரதிஷ்டவசமாக ஆளுநர் ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியாகக் காணப்படுகிறார். இது மறைமுகமாக மாகாணத்தின் அதிகாரத்தை மத்திய அரசு தன்வசம் வைத்திருக்கும் தோற்றத்தையே கொண்டுள்ளது.

உண்மையில் எந்தவொரு கொள்கையினது உருவாக்கமும் செயற்படுத்தலும் வெற்றியடைவது என்பது அக்குழுவின் அல்லது அப்பிரிவின் அரசியல் அபிலாசை பூர்த்தி செய்யப்படுவது என்பதிலேயாகும். அதாவது உரிமை என்பது ஒரு தனிமனிதன் வரை எடுத்துச் செல்லப்படுவதேயாகும்.

யார் ஏற்பினும் மறுப்பினும் இன்று வரை மொழி முரணானது ஒரு பிரிநிலை அரசியல் மாற்று வரை தீவிர வளர்ச்சியுற்றுள்ளது. மொழியின் வீரியமும் தேசியத்தின் கூர்மையும் ஒரு தேசத்திற்கான அல்லது தன்னாட்சி அமைப்புக்கான தேவைக்கு நிர்ப்பந்தித்துள்ளது.

ஆகவே இம் முன்நிபந்தனை நிறைவேற்றப்படாதவிடத்து எந்தவொரு கொள்கை உருவாக்கமோ, கொள்கை செயற்படுத்தலோ மெய்யானதாக இருக்கமாட்டாது. மொழி தொடர்பான விடயமுட்பட.

☐

நிர்வாகத்தில் தமிழ் மொழிப் பிரயோகம்

களநிலை

எஸ். ஸ்கந்தராஜா
தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர்

ஒரு சமூகத்திற்கு முழுமையாக கிடைக்கின்ற நன்மைகள், அச்சமூகத்தைச் சார்ந்தோர் பங்கேற்கும் துறையின் தன்மையைப் பொறுத்தே அமைகின்றது. இவ்வகையில் தாய் மொழி நிருவாகக் கடமையில் ஈடுபடும் ஒரு பிரிவினர் அல்லது இனத்தவர் தமது சிந்தனையில் தோன்றியவற்றை வெளிப்பாடுகளாக செயலுருவில் படைக்கும் போதுதான் அதன் நன்மைகளை உண்மையாக அடைகின்றனர். இவ்வகையில் தமிழ் மொழியில் சிந்தித்து, இச்சிந்தனையில் உதித்தவற்றை பல்வேறு நிருவாக நடவடிக்கைகளில் உள்ளீடு செய்வதன் மூலம் அச்சமூகம் அளப்பரிய நன்மைகளை அடைகின்றது. நடைமுறையில் தமிழ் மொழி அமுலாக்கலின் சிக்கல் காரணமாக அரச. அரசசார்பற்ற தாபனங்கள் மூலமாக தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கின்ற நன்மைகள் பல தாமதங்களுக்கும், இடைஞ்சல்களுக்கும் மத்தியில் சென்றடைகின்றமை கவலைக்குரியது.

நமது நாட்டில் தமிழ், சிங்களம், ஆகியன அரச கருமமொழியாக அரசியல் யாப்பில் சட்ட பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் தமிழ்மொழி அமுலாக்கல் மத்திய, மாகாண, மாவட்ட, செயலகப் பிரிவு மட்டத்தில் ஆமை வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 1956ஆம் ஆண்டுக்குப் பின்பு சிங்கள இனத்தின் மத்தியில் மொழியாக்கம் தீவிரமடைந்தளவுக்கு தமிழ் மொழி பேசும் இனங்களின் மத்தியில் மொழியாக்கம் தீவிரமடையாது மந்த கதியில் இடம் பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. தமிழ்மொழி அமுலாக்கம் உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படாமைக்கு பல நடவடிக்கைகள் காரணமாக அமைகின்றன. இந் நாட்டில் நிலவுகின்ற இன,மொழிப் பிரச்சனையும், அதனையொட்டிய பேரினவாத செயற்பாடுகளும், உயர்மட்ட தமிழ் நிர்வாகிகள் தமது நிருவாகத்தினை தமிழ் மொழியில் செயற்படுத்த விருப்பத்தினை வெளிக்காட்டாமையும் அவற்றிற் சிலவாகும்.

சுயமொழியில் நிருவாக கடமைகளை ஆற்றும்போதுதான் அம்மொழி பேசுகின்ற இனத்தவர்கள் உண்மையாக நன்மை பெறுகின்றனர். இவ்வகையில் கள உத்தியோகத்தர்கள், கிராமிய அபிவிருத்தி தாபனங்கள், சபைகள், அதன் பிரதிநிதிகள் என்போரின் பங்களிப்புகள் மிக அவசியமானதொன்றாகும். மொழி நிருவாக அமுலாக்கல் மையப்பகுதியினை விட களநிலையில் தான் அதன் செயல்பாடுகள் அதிகளவுக்கு பிரதிபலிக்கின்றது. இவ்வகையில் தம்மைச்சார்ந்த திணைக்களம் அல்லது செயலகப் பிரிவிற்கும், பொது மக்களுக்கும் இணைப்புப் பாலமாகச் செயற்படும் கள உத்தியோகத்தர்கள், மாவட்ட மட்ட, கிராமிய மட்ட சபை தாபன பிரதிநிதிகள், தாபனப் பணிப்பாளர்கள் என்போர் தாய்மொழி மூலம் கல்வி கற்று கடமையில் ஈடுபட்டு வருகின்றமை ஈண்டு கவனிக்கத்தக்கது. இவ்வகையான தாபன பிரதிநிதிகள் உட்பட உத்தியோகத்தர்கள் வரை சகலரும் அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிச் செல்ல உந்தப்படும் இவ்வேளையில் தமிழ் மொழி நிருவாகத்தில் எதிர் நோக்கும் பிரச்சனைகளை பின்வருமாறு இனங்கண்டு கொள்ளலாம்.

அவையாவன :-

01 பொது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தாபனங்கள் அரச திணைக்களங்களில் தங்கியிருக்கும் தன்மை.

02. மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட அறிவுறுத்தல்களும், நிருவாகக் கொள்கைகளும் நிருவாக அமுலாக்கலில் தாமதத்தினை ஏற்படுத்தியமை.

03. சகல மட்ட கலந்துரையாடல்கள், கருத்திட்ட பயிற்சி நெறிகள், அலுவலகக் கூட்டங்கள், சிங்கள, ஆங்கில மொழியில் நடை பெறுதல்

04. விளக்கங்கள் இலகு தமிழில் இல்லாமை.

05. பிற மொழிச் சொற்கள் தமிழ்மொழியில் பாவனையில் உள்ளமை.

06. உயர்மட்ட நிருவாகிகள் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முன்வராமை.

பொது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தாபனங்கள் அரச திணைக்களங்களில் தங்கியிருக்கும் தன்மை

மாவட்ட, கிராமிய மட்டத்தில் செயல்படும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தாபனங்கள் பெருமளவுக்கு தங்கள் வழிகாட்டியாக கள உத்தியோகத்தர்களையே சார்ந்துள்ளன கள உத்தியோகத்தர்கள் அவ்வத் திணைக்களங்களின் பிரதிநிதிகளாவார்கள். இவர்களுடைய வழிகாட்டிக் குறிப்புக்கள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளுக்கு பெருமளவுக்கு இத்தாபனங்களும், நெறியாளர்களும், பணிப்பாளர்களும் கட்டுப்பட்டவர்களாகவும் எப்போதும் திணைக்களத்தினை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. இத்தாபன, சபை நிறுவனங்களின் தீர்மானங்கள் அரச திணைக்களத்தினை அடியொட்டியதாகவும், பொதுத் தாபனங்கள் எடுக்கக்கூடியதான சட்டவாக்கங்கள் கூட பிற மொழியாகிய சிங்கள மொழியில் இருந்து பிரித்தெடுத்து செயல்படுத்த வேண்டிய நிலைக்கு இத்தாபனங்கள் தள்ளப்பட்டு உள்ளன.

மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட அறிவுறுத்தல்களும், நிருவாகக் கொள்கைகளும், நிர்வாக அமுலாக்கலில் தாமதமும்

மத்திய அரசிடமிருந்து மாகாண அரசுக்கும், மாகாண அரசிலிருந்து அவ்வத் திணைக்களங்கள், செயலகப் பிரிவுகளுக்கு சென்றடைகின்ற முக்கிய அபிவிருத்தித்திட்ட,கருத்திட்ட அறிவுறுத்தல்கள்,கடிதத் தொடர்புகள், இணைப்புகள், முன்னுரிமைப்படிவங்கள் என்பன அநேகமானவை தனிச்சிங்கள மொழியிலும், ஆங்கிலத்திலும் பல தசாப்தங்களாக இருக்கின்ற நிலைமையிலேயே தொடர்ந்தும் அனுப்பப்பட்டு வருகின்றமையால் மொழி பெயர்ப்புச் செய்து கீழ் மட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைத்து உண்மையான விபரங்களை பெறுவதில் சிரமங்களையும்,தாமதங்களையும் ஏற்படுத்துகின்றமையாலும் மக்களுக்கு பல நன்மைகள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறுவதில்லை.

கலந்துரையாடல்கள், கருத்திட்டப் பயிற்சி நெறிகள், அலுவலகக் கூட்டங்கள் சிங்கள, ஆங்கில மொழியில் நடைபெறுதல்

1987 வரை மாவட்ட ரீதியில் நடைபெற்ற மாதாந்த கூட்டங்கள், பயிற்சி வகுப்புக்கள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் என்பன சிங்கள மொழியில் நடைபெற்று, அவை மொழி பெயர்க்கப்பட்ட நிலையில் அதனை விளங்கிக் கொள்ள முடியாமல் கள உத்தியோகத்தர்கள் மட்டுமல்ல பொது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர்கள், முகாமையாளர்கள் பணியாளர்கள் கூட பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளனர். மொழி பெயர்ப்புகளின் முழு விடயங்களையும், பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் திருப்தியற்று தமது கள நிலைக்கு திரும்பும் இவ்வாறான உத்தியோகத்தர்களால் எவ்வாறு அபிவிருத்திக்கான கடமைகளை ஆற்ற முடியும்.

மாகாண அமைப்பிலிருந்து மாவட்ட, செயலகப் பிரிவுகளுக்கு வழங்கப்படும் கருத்திட்ட வடிவமைப்புகள், முக்கிய விவசாய அபிவிருத்தி ஆலோசனைகள் என்பன ஆங்கில மொழியில் அமைந்துள்ளமை, ஆங்கில மொழியினை சரிவரப் புரிந்து கொள்ள முடியாத மாவட்ட மட்ட, கிராமிய மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் எவ்வாறு அபிவிருத்தியில் பங்கேற்கும் விவசாய மற்றும், ஏனைய துறையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு அபிவிருத்தி யோசனைகளை புரிய வைக்க முடியும் என்பது சந்தேகத்திற்குரியது. இந்நிலைமை அபிவிருத்தி முயற்சிகளை பின்னடையச் செய்கிறது.

விளக்கங்கள் இலகு தமிழில் இல்லாமை

மொழிமயப்படுத்தல், சுயமொழி நிர்வாகம் அமுலாக்கலின் வெற்றியை, மொழி நடையை இலகுவாகப் புரிந்து கொண்டு காரியங்கள் செயலாற்றுப்படும் போது தான் கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. தமிழ்ச் சொல்லாக்கங்கள் மொழி நடைகள் வித்தகச் சிறப்பினை கொண்டமையும் போது இவற்றினை விளங்கிக் கொள்ள நீண்ட காலமெடுப்பதோடு, பிழையான வழிமுறைகளை கள நிலையிலுள்ளோர் பின்பற்றுகின்றனர். உதாரணமாக பின்வரும் உரைப்பகுதி கிராமரீதியில் செயல்படுகின்ற தாபனங்களை வழிநடாத்தும் சட்டவாக்கபகுதியாகும். "இச்சட்டத்தினால் நீக்கப்பட்ட ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டனவாகக் கருதப்பட்ட எல்லா நியமனங்களும்,கட்டளைகளும்,வழங்கப்பட்டனவாக கருதபபட்ட எல்லா அறிவிப்புகளும், அறிவித்தல்களும் நடுத்தீர்ப்பாளர்களால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டனவாகக் கருதப்பட்ட எல்லா முடிவுகளும், தொடரப்பட்டனவாகக் கருதப்பட்ட எல்லாத் தொடர்ச்சிகளும் எல்லா குற்ற வழக்குகளும்"

இவ்வுரைப்பகுதியினை முழுமையாக வாசித்து அறிந்து கொள்வதற்குக் கள உத்தியோகத்தர்கள், ஏனைய தாபனப் பிரதிநிதிகள் அமுல் நடத்தலில் ஏனையவர்களின் துணையினை பெற வேண்டியுள்ளமை சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது.

தமிழ் மொழியில் நடைமுறையில் உள்ள பிற மொழிச் சொற்கள்

ஐரோப்பியர் ஆட்சியின் விளைவாக இந்நாட்டில் போர்த்துக்கேய, ஒல்லாந்து மொழிச் சொற்களான, "அலவாங்கு" , 'யன்னல்', 'லாச்சி', 'அலுமாரி', என்பன இன்று

கூட எழுத்திலும், பேச்சிலும் தமிழ் மொழியில் வழங்கி வருதல் போல சிங்கள மொழியில் உள்ள சொற்கள் கூட சரியான தமிழ் சொற்கள் பாவனையில் இல்லாத சந்தர்ப்பங்களில் மக்கள் மத்தியில் அச்சொற்கள் உச்சரிக்கப்பட்டு வருகின்றமை வலியுறுத்தப்பட வேண்டியுள்ளது.

இவை காலக்கிரமத்தில் தமிழ்ச் சொற்களாகவே இடம் பெறும், காலப்போக்கில் தமிழ்மொழிப் பாவனையிலிருந்து எடுத்து விடுவது என்பது இயலாததொன்றாகிவிடும். உதாரணமாக 'ஜனசவிய' தமிழில் சனசக்தி என உடன் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளன. இச்சொல் மக்கள் சக்தி என இடம் பெற்றிருக்கலாம். 'சமூர்த்தி', ' சலுசலா', 'லக்சலா', 'ஒசுசலா', 'ஜயபூ மி', 'அமா வேலைத்திட்டம்' என்ற சிங்களப்பதங்கள் அப்படியே தமிழ் மொழி நிர்வாகத்தில் பாவனையிலிருந்து வருகின்றமை தமிழ் மொழியின் மேம்பாட்டுக்கு உகந்ததல்ல என எண்ணத் தோன்றுகின்றது.

உயர்மட்ட நிருவாகிகள் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முன்வராமை

வடக்கு-கிழக்கு பகுதியிலுள்ள வளங்களைத் தகுந்த முறையில் உபயோகப்படுத்துவதற்காக விவசாய அபிவிருத்தி உபாயங்கள், கருத்திட்ட வடிவமைப்புகள் போன்ற திட்ட வரைவுகள், மற்றும் நிருவாக செயற்பாடுகள், பொறுப்பு வாய்ந்த அதிகாரப் பிரிவினரால் வரையப்பட்டுள்ளன.ஆனால் இத் திட்டங்கள், உபாயங்கள் பல வரையப்பட்ட நிலையிலேயுள்ளனவே ஒழிய, அவை தகுந்த முறையில் அமுல் நடத்தப்படவில்லை. இவை செயல்படுத்தப்படும் கீழ் மட்டப்பிரிவிலுள்ள பொதுமக்கள், அவர்களின் பிரதிநிதிகள், கள உத்தியோகத்தர்களை கலந்துரையாடி, அவர்களுடைய கருத்துக்களைப் பெற்று தயாரிக்கப்படாமை ஒரு காரணமாகும். தயாரிக்கப்பட்ட ஆங்கில மொழியிலான செயல்முறைத்திட்டங்களை, நிருவாக செயற்பாடுகளை ஆங்கில அறிவற்ற மேற்கூறிய பிரிவினர் மத்தியில் விளக்கமளிக்காது இத்தகைய திட்ட யோசனைகளை குறிப்பிட்ட வட்டத்திற்குள் வைத்துக்கொண்டு வருதல் தமிழ் மொழி மூலம் இவற்றினை அறிய முயலும் சகலரையும் பாதிக்கும் நடவடிக்கையாக அமைகின்றது.

எந்தப் பொதுமகனும் தனக்கு எவ்வகையிலும் நிருவாகப் பிரச்சனை ஏதும் இல்லை என்ற அளவுக்கு வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாக அதிகார எல்லைக்குள் மொழி நிருவாகத்தை செயல்படுத்த நாம் முனைய வேண்டும். ஆனால் எமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன் படுத்தாது நிர்வாக மட்டத்தில் தமிழ் மொழியை பெரும்பாலும் புறக்கணித்தே வந்துள்ளோம். ஆகவே, மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடுவதும், தமிழ்மொழி நிருவாகத்தை பரவலாக்குவதும், தமிழ் மொழியை வளமாக்குவதும், தமிழ் நிருவாகிகளாகிய எமது ஆர்வத்தைப் பொறுத்ததே. அதற்கேற்ற மனப்பக்குவத்தை நாம் பெற்றுக்கொண்டால் தமிழ்மொழி நிருவாக அமுலாக்கல் சுலபமாக அமைந்து விடும் என்பது எனது கருத்தாகும்.

□

தமிழ் மொழி மூலம் நிர்வாகம்

கணனிப்பயன்பாடு

இ. இரங்கராஜா

பிரதிப் பிரதம செயலாளர்- திட்டமிடல்

அறிமுகம்

தமிழ்மொழி மூலம் பொது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சியில் கணனிகளின் ஆற்றல்களை உபயோகித்தல் தொடர்பாக தற்போது எதிர்கொள்ளப்படுகின்ற நிலைமைகளைப்பற்றி பொதுவான விளக்கங்களை முன்வைப்பதும் எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய சாத்தியமான வழிவகைகளை முன்மொழிவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும். இது விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் வெளிப்பாடல்ல. "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் மிகத்துலாம்பரமாக அறியக்கூடிய விடயங்களையிட்டு ஆராய்ச்சி தேவையில்லை.

தமிழ் மொழிமூலம் நிருவாகத்தை நடாத்தல் வேண்டுமென்பது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிக்கோள் ஆகும். கணனியின் ஆற்றல்களையும், அதனைப் பொது நிர்வாகத் தேவைகளில் உபயோகிப்பதன் அவசியத்தையும் நிறுவுதற்கு எது வித ஆராய்ச்சியும் தேவையில்லை. ஆனால் தமிழ் மொழிமூலம் நிர்வாகத்தை மேற்கொள்ளும் போது கணனியின் ஆற்றல்களை உபயோகிக்கும் செயற்பாடு புதிய சூழலையும், புதிய தேவைகளையும் வேண்டிநிற்கின்றது. இவற்றினைப் பூ ர்த்தி செய்வதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கையின் திசையினையும், கருத்து நிலைப்பாடுகளையும் தெளிவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அவை கீழ்வரும் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தமிழில் பொது நிர்வாகம்.

பொது நிர்வாக நிறுவனங்களில் தமிழ்மொழியில் கோவைகள், பதிவேடுகள் என்பவற்றைப் பேணுவதையும், தமிழ் மொழியிலே பொது மக்களுடன் தொடர்பாடல் செய்தலையும் மட்டுமே தமிழ் மொழியில் நிர்வாகத்தை நடாத்துதல் என்று கூற முடியாது.

இது கொள்கை உருவாக்கல், நடைமுறை திட்டமிடல், முகாமைத்துவத் தகவல் தொகுதி (Management Information System), தரவுத்தளம் பேணல் (Data Base Management), பகுப்பாய்வுகள், முகாமைத்துவ ஆற்றல்களை வளர்த்தல், பயிற்சி

நடைமுறைகள் போன்ற மேலும் பல நடவடிக்கைகளை வேண்டி நிற்கும் ஒரு முழுமையான செயற்பாடாகும் (Total Process).

இதன் கருத்து யாதெனில், தமிழ் மொழிமூலம் பொது நிர்வாகத்தை நடாத்துதல் என்பது பொருத்தமான ஒரு வரைவிலக்கணத்தை வேண்டிநிற்கின்றது என்பதாகும்

பொது நிர்வாகத்தில் கணனி உபயோகம்

பொதுநிர்வாகத்தை மேற்கொள்ளும் போது அதிலே பங்கு பற்றுபவர்கள் இந் நடைமுறையின் மட்டம், மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் தன்மை, கணனி உபயோகத்தின் சாத்தியம் என்பவற்றினைப் பொறுத்து பின்வரும் வகையிலான ஒரு ஒழுங்கை முன்வைக்கமுடியும்.

<u>நிர்வாக நடை முறை மட்டங்களும் கணனி உபயோகத்தின் சாத்தியங்களும்</u>

நிர்வாகமட்டம்	பங்குபற்றுனர்	கையாளப்படும் செயற் பாடுகளின் தன்மை	கணனி உபயோகத்திற்கான சாத்தியம்
உயர்மட்டம்	அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள்.	கொள்கைகள் வழிகாட்டுதல்கள் உருவாக்குதல். நடைமுறைகளை வகுத்தல் (System & Procedure) பகுப்பாய்வு செய்தல்	உயர் அளவில் உள்ளது
இடைமட்டம்	கொள்கைகளுக்கு செயல் உருவம் கொடுப்போர், நடுத்தர செயற்படு முகாமை யாளர்கள், உள்ளூர் திணைக்களத் தலைவர்கள்	தரவுத்தளங்கள் பேணல், அறிக்கைகள் பகுப்பாய்வுகள் தயாரித்தல் அமுலாக்கத் திட்டங்கள் தயாரித்தல் சமமட்ட நிறுவனங்களுடனான இடைத்தொடர்பாடல், பொதுமக்களுக்கு அனுமதிப்பத்திரங்கள், ஆணைச்சீட்டுகள் போன்றவற்றினை வழங்குதல்.	உயர் அளவில் உள்ளது
களமட்டம்	களமட்ட உத்தியோகத்தர்கள் பொதுமக்கள், திட்ட இலக்காளர்கள், பயன்நுகரிகள்	பொதுமக்கள் தொடர்பு, களவிபரம் சேகரித்தல், தகவல்கள், தரவுகள் அறிக்கை செய்தல்.	குறைவு

காட்டப்பட்ட கருத்துப் புறவுருவின் அடிப்படையில் உடனடியாக கணனி உபயோகத்தினை அறிமுகப்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுள்ள வகைகளுக்கான மாதிரிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

இவை போன்ற ஏனைய நடவடிக்கைகளையும் அடையாளம் காணுதல் அவ்வத்துறை முகாமையாளர்களின் கணனி உபயோகம் பற்றிய விழிப்புணர்வினைப் பொறுத்ததாகும்.

உடனடிக் கணனி உபயோகம் சாத்தியமான- செயற்பாட்டு வகைகளின் மாதிரி.

மட்டங்கள்	செயற்பாட்டு மாதிரிகள்	மலிவான நிகழ்ச்சித்திட்ட வழிவகைகள்
உயர்மட்டம்	கட்டிடப்படவரை அமைப்பு படவரை	CAD மென் பொதிகள்
	களஞ்சிய கட்டுப்பாடு (Medical Stores)	தரவுத்தளப் பொதிகள் (Access) போன்றவை
	கணக்கு வைப்புமுறை	Excell போன்ற பரப்புத்தாள் மென்பொதிகளும்(Spread Sheets) C, COBOL, Visual Basic போன்ற உயர்நிலை மொழிகள்மூலம் தயாரிக்கக் கூடிய மென் பொதிகளும்
	புவியியல் தகவல், நிலப் பயன்பாடு	Arcinfo, Mapinfo போன்ற மென்பொதிகள்
இடைமட்டம்	அறிக்கைகள் செய்தல் தரவுத்தளங்கள், நிலப் பேரேடுகள் (Land Ledgers) வாக்காளர் இடாப்பு,வரியிறுப்பாளர் பதிவேடு பிரதேச தரவுத்தளம்	உயர்நிலை நிகழ்ச்சித்திட்ட மொழிகள் மூலம் தயாரிக்கக்கூடிய மென்னணிகள்
களமட்டம்	சுகாதாரநிலை பற்றிய கள அறிக்கைகள் கிராம மட்ட தரவுகள்	தேவையில்லை

மேற்கூறப்பட்ட மாதிரிச் செயற்பாடுகள் யாவற்றினையும் தமிழிலே செய்தல் சாத்தியமானதா? அவற்றிற்குரிய மட்டுப்பாடுகள் யாவை? அவற்றினை நிவர்த்தி செய்ய யாது செய்ய வேண்டும் போன்ற வினாக்களுக்கு உரியபதில், தமிழ்மொழி மூலம் கணனிப் பணிகளைச் செய்ய முடியுமா? என்ற கேள்விக்கு வழங்கும் பதிலாக அமையும். இதன் பொருள் யாதெனில், உயர்கல்வியை தமிழில் மேற்கொள்வது விஞ்ஞான ஆராய்ச்சி, பகுப்பாய்வு, உயர் தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றினை தமிழ்மொழியில் ஆற்றுகின்ற தன்மை சாத்தியமானதன் பின்பே அத்துறைகளிலே தமிழ்க்கணனிகளை உபயோகிக்கும் நிலமையும் உருவாகும். இத்தகைய முயற்சிகளின் சாத்தியப்பாடுகள் அல்லது ஒப்பீட்டு நன்மைகள் என்பவற்றை ஆராய்வது எமது நோக்கமல்ல. இங்கு வலியுறுத்தப்படும் விடயங்கள் யாதெனில், ஆங்கிலத்திலே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித் தயாரிப்பு மொழிகளையும், (Programming Languages), இயக்கத் தொகுதிகளையும், (Operating System) பொதுப்பாவனைக்குரிய மென்பொதிகளையும் உபயோகித்து,

பொதுநிர்வாகம் தொடர்பான சகல அலுவல்களையும் நிறைவேற்றுவது மிகவும் சாத்தியமானதே என்பதாகும். இதற்கு எம்மைப் பொறுத்தவரை ஆங்கில மொழி உபயோகம் ஒப்பீட்டு நன்மை கூடியதும், (Comparative Advantage) சந்தர்ப்பச் செலவு (Opportunity Cost) குறைந்ததுமாகும். அயல்நாடான இந்தியாவில் வங்கிகளில் அமுலிலுள்ள அடையாள இலக்க அறிவிப்புக்கள் (Tokens / Digital displays) புகையிரத பயணத்திற்கான ஆசன ஒதுக்குச் சீட்டுக்கள், பேருந்து ஒதுக்குச் சீட்டுக்கள் ஆகியன உள்ளூர் மொழிகளில் கணனிமூலம் வழங்கப்படுகின்றன என்பதும் ஏற்கனவே இந்தியாவில் கணனிகள் மூலம் பெறப்படும் தமிழ்மூலமான வெளியீடுகைகள் (Outputs) மிகவும் முன்னேற்றமான நிலையில் உள்ளன என்பதும் இங்கு ஆர்வம் தரும் செய்திகளாகும். இத்தகைய செயற்பாடுகள் யாவற்றுக்கும் ஆங்கிலமொழிமூலமான செயற்படுதொகுதிகளையும், நிகழ்ச்சித்திட்ட மொழிகளையும் மென்மொழிகளையுமே உபயோகிக்கின்றனர் என்பதும், இது பயனுகரிகளை அல்லது பொதுமக்களை பொறுத்த வரையில் எவ் வகையிலும் ஆங்கில அறிவை நிர்ப்பந்திக்கவில்லை என்பதும் நோக்குதற்பாலதாகும்.

களநிலை உத்தியோகத்தர்கள் தற்போது செய்கின்ற அறிக்கைகள், தகவல் சேகரிப்புக்கள் ஆகியவற்றையும் அவர்கள் உபயோகிக்கின்ற படிவங்களையும், தமிழ்மொழியிலே தொடர்ந்தும் மேற்கொள்ளலாம். பொதுமக்களுக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்கள், கூற்றுக்கள், அனுமதிப் பத்திரங்கள் போன்ற சகலதையும், தமிழ்மொழியிலே வழங்கலாம். மேலும் இடைத்தர மட்டத்திலுள்ள பணிகள்கூட அவை பொதுப் பாவனைக்கான மென் பொதிகளுடாகவன்றி விசேடமாகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஆற்றக்கூடிய பணிகளாயினும், அவை கூட தமிழ்மொழி மூலம் செய்யப்படலாம். இதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது உபயோகத்திலுள்ள நிகழ்ச்சித்திட்ட மொழிகளினூடாக தயாரித்துக்கொள்ளப்படமுடியும் என்பதும் கணனி இயக்குனர்களுக்கோ அல்லது தரவு நிரறப்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கோ அதுபற்றிய ஆற்றல் தேவையில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாகாணமட்ட முன் முயற்சிகள்

1990ம் ஆண்டளவில் மாகாண நிர்வாகத்தில் கணனி உபயோகத்திற்கான முன்முயற்சிகள் ஆரம்பமாயின. எனினும் 1994ம் ஆண்டு தை மாதம் உள்ளக சிறிய கணனி பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவியதுடனும் மாகாண நிர்வாகத்தில் கணனி உபயோகத்தினை நெறிப்படுத்தும் நோக்குடன் மாகாண திட்டமிடல் குழு மேற்கொண்ட தீர்மானம் ஒன்றோடும் மிகவும் தெளிவான நிலைப்பாடு ஏற்பட்டது. இன்று சகல அமைச்சுகளும் பெரும்பாலான திணைக்களங்களும் கணனிகளை உபயோகிக்கின்றன. சகல அமைச்சுகளது பிரதான கணனிகளும் திட்டமிடல் செயலகத்தின் கட்டுப்பாட்டு அறையுடன் தகவல் தொடர்புமூலம் இணைக்கப்பட்டுள்ளன. எனினும் மிகவும் குறைந்த அளவிலேயே தற்போது பயன்பாடுள்ளது. மாகாண சபை உத்தியோகத்தர்களில், தலைமையகத்திலுள்ள ஏறக்குறைய 90% மானோர் அடிப்படைப் பயிற்சி பெற்றவர்கள். தற்போது பயிற்சிச் சேவைகளை மாவட்ட மட்டங்களுக்கு விஸ்தரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அரசுசார் நிறுவனங்களான, தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ஆகியவற்றிலும் பயிற்சி நெறிகள் நடைபெற்றாலும் பொது நிர்வாகத்தின் தேவைகளை பூர்த்திசெய்வதில் இவை அதிகளவு பங்குகொள்ளவில்லை. இத்துறையில் பல்கலைக்கழகங்கள் அதிகளவு பங்கு வகித்தல் வேண்டும். தனியார் துறையைப் பொறுத்தவரை, காளான் கல்வி நிலையங்கள் பல தோன்றினாலும், அவற்றினைக் கட்டுப்படுத்தவோ வகைப்படுத்தவோ எதுவித

ஒழுங்குமில்லை. அத்துடன் பொது நிர்வாகத்திற்கு இவற்றால் எதுவித பயனுமில்லை. ஏறக்குறைய தற்பொழுது 25 சிறிய கணனிக்கல்வி நிலையங்கள் தமிழ்ப்பகுதிகளில் உள்ளன. தற்போது வடக்கு- கிழக்கு மாகாண சபை நிறுவனங்களில் ஏறக்குறைய 40க்கு மேற்பட்ட தனிநபர் கணனிகள் (PC) உபயோகத்திலுள்ளன.

தமிழ்க் கணனிகள்

தமிழ்க் கணனி உபயோகம் என்பதற்கும், கணனியில் தமிழ் உபயோகம் என்பதற்கும் வேறுபாடு உண்டு. கணனிகளின் முதன்மொழி மனிதன் பேசுகின்ற எந்தவொரு மொழியுமல்ல. ஆரம்ப கணனிக்கு தற்போதைய கணனிகள் போன்று "Syntex Error" என்றோ "Bad Command" என்றோ ஆங்கிலத்தில் செய்தியை தரமுடியாதிருந்தது. ஆரம்பத்தில் கணனிக்கு அறிமுகப்படுத்தப்பட்ட மொழி Fortran ஆகும். இது ஆங்கில வார்த்தைகளை கொண்டிருந்தது. அதன்பின்னர் உயர்நிலை மொழியாகிய C போன்ற மொழிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்குத் தெரிந்த இயந்திரமொழி 'O' அல்லது 'I' என்ற ஈருறுப்பு மொழியாகிய (Binary Code) இயந்திர மொழியே ஆகும். இன்று ஆங்கிலம் தகவல் தொழில்நுட்பத்தின் சர்வதேச மொழியாக உள்ளது.

தமிழ்மொழிக் கணனி என்பது மயக்கவைக்கும் ஒரு பதப் பிரயோகமாகும் தமிழ்மொழிக் கணனி என்று கூறினால் அது உண்மையில் தமிழ் எழுத்துத் தட்டுப்பலகையுடன் (Key Board) தமிழ்மொழி மூலமான கட்டளைகளை ஏற்கின்ற ஆற்றல் கொண்ட செயற்படு முறையையும், (Operating System) தமிழ்மொழி மூலமான காட்சிகளையும் வழங்கக்கூடிய முறையாக இருத்தல் வேண்டும். ஐரோப்பிய மொழிகளில் எழுத்துருவங்கள் ஒத்தவையாக இருந்தமையால் ஐரோப்பிய மொழிகளில் செயற்படு முறைகளிற்கான நிகழ்ச்சித்திட்டங்களை இலகுவில் உருவாக்குதல் சாத்தியமாயிற்று யப்பான், சீன மொழிகளை பொறுத்தவரை அந்நாடுகளின் விஞ்ஞான ஆற்றல், மேலைத்தேய கட்டுப்பாட்டு மொழிகளை தமக்காக மாற்றிக் கொள்வதில் வெற்றியைக் கொடுத்தன அத்தகைய கட்டுப்பாட்டு மொழிகளால் கூட ஆங்கில கட்டுப்பாட்டு மொழிகளை துப்பரவாக புறக்கணிக்க முடியவில்லை. ஆனால் பெரும்பாலான கீழைத்தேய மொழிகள் விசேடமான தனித்துவமான எழுத்துருவங்களை கொண்டவையாக உள்ளன. கோட்பாட்டின்படி தமிழில் கணனியை உருவாக்குவது சாத்தியமானது. ஆனாலும் நடைமுறையில் சாத்தியம் மிகக் குறைவானது.

தமிழ்மொழி மூலம் சொல் நிரற்படுத்தும் (Word processing) பொதிகள் சில கடந்த காலங்களில் உருவாக்கப்பட்டன. எனினும் அவற்றின் குறைவான செயற்றிறன் காரணமாக பிரபல்யம் பெற முடியவில்லை. சாளர செயற்பாட்டு முறையை (Windows) அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பொதுவான மென்பொதிகளில் எழுத்துருவங்களை இறக்குமதி செய்யும் ஆற்றல் கண்டுபிடிக்கப்பட்டதனால் தமிழ்மொழி மூலமாக சொல் நிரற்படுத்தலும் புதிய பொதிகளுக்கு தேவை ஏற்படாமல் போயிற்று. ஏனெனில், சாளரச் செயற்பாட்டு முறையினை அடிப்படையாகக் கொண்ட மென்பொதிகளின் அதி உன்னதமான செயற்திறனே இதற்குக் காரணம். இதன் மூலம் வகை வகையான தமிழ் எழுத்து வடிவங்களை உருவாக்குகின்ற தொழில் பல்கிப் பெருகியது. தற்போது ஏறக்குறைய 15 இற்கு மேற்பட்ட பிரபலமான எழுத்துருவங்கள் (Tamil Fonts) உலகளாவிய ரீதியில் உபயோகத்தில் உள்ளன. மேலை நாடுகளில் வாழும் தமிழர்கள் இதற்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். இன்று சாளர செயற்பாட்டு முறையை அடிப்படையாகக் கொண்ட சகல மென்பொதிகளின் மூலமும் தமிழில் வெளியீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும். குறிப்பாக நிர்வாக வேலைகளில் மும்மொழிகளிலும் ஒரே

நேரத்தில் சொல் நிரற்படுத்தும் வாய்ப்பையும் இது உருவாக்கித்தந்துள்ளது. ஆனால் தமிழ்மொழிமூலம் பகுப்பாய்தல் செய்தலோ தகவல் நிரற்படுத்தலோ (Data Processing) நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றது.

உதாரணமாக பின்வரும் பிரச்சினைகளைக் கூறிக்கொள்ளலாம். அகர வரிசைப்படி விடயங்களை அல்லது தகவல்களை தமிழில் ஒழுங்கு படுத்துதல், ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகும். ஆங்கிலத்தில் 26 எழுத்துக்களையும், இலகுவில் ஒழுங்கு வரிசைப்படி அமைக்கலாம். ஒரு சொல்லில் முதலாவது எழுத்திற்கு அடுத்ததாக அல்லது அதற்கு அடுத்ததாக வருகின்ற எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டும் விடயங்களை ஒழுங்குவரிசையில் நிரைப்படுத்தலாம்.

தமிழில் எமக்கு மெய் எழுத்துக்கள், உயிர் எழுத்துக்கள் ஆகியன சேர்ந்து உருவாகின்ற எழுத்துக்களினால் அதாவது ெ, ே, ா இன்னும் விசிறிகள் சுழிகள் என்பனவும் சேர்ந்து எழுத்துக்கள் உருவாவதால் தமிழ் சொற்களின் ஆரம்பம் 246 ஆக வருகிறது. 'பொன்னாலை' என்கின்ற சொல்லில் முதலாவது எழுத்துருவம் (Character) ஆங்கிலத்தில் 'P'. ஆனால் தமிழில் 'ெ' ஆகும் இங்கு முதலாவது எழுத்தின் ஒலியை உருவாக்க தமிழில் 3 எழுத்துருவங்கள் தேவைப்படுகின்றன. இதனால் தரவுகளை நிரற்படுத்தல் தமிழிலே கடினமாகின்றது. ஆங்கிலத்தில் ஓர் எழுத்துசெய்யும் பணியை தமிழிலே ஏறக்குறைய 11 (உயிர்) எழுத்துருவங்கள் (ெ, ே,ை,ா,ீ,ு, போன்றன) செய்கின்றன. இதனால் உருவாகும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சில சிக்கலான உத்திகளைக் கையாள வேண்டும். இதைவிட எழுத்துக்களை உருவாக்கும் (Character Generation) மென் பொதிகளும் உபயோகத்தில் உள்ளன.

தற்போதுள்ள உயர்நிலை மொழிகளினதும், உயர்நிலை மென் பொதிகளின் ஆற்றல்களையும் தமிழ் கட்டளைகள் மூலம் பெறுவது நடைமுறையில் அசாத்தியமானதாகும். ஆனால் இத்தகைய உயர்நிலை மென் பொதிகளையும் உபயோகித்து உருவாக்கி தமிழ்மொழிமூலம் செயற்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்துக் கொள்ளலாம்.

உதாரணமாக C மொழி மூலமாகவோ அல்லது Visual Basic மொழி மூலமோ தயாரித்து முற்றுமுழுதாக திரையிலே தமிழ்மொழி மூலமான காட்சியை உருவாக்குவதோடு அவற்றில் உள்ளிடுவதற்கான தரவுகளை தமிழ்மொழி மூலம் சேகரித்தலே மிகவும் சாத்தியமாகும்.

இங்கு நாம் வலியுறுத்துவது யாதெனில் பொது நிர்வாகத்தை செயற்திறன் மிக்கதாகச் செய்வதில் கணனிகளின் உபயோகத்தினைக் கவனிக்கின்றோமே தவிர விஞ்ஞான ஆராய்ச்சிக்கோ, கண்டுபிடிப்பிற்கோ அல்ல.

இலங்கை CINTEX நிறுவனம் ஏறக்குறைய 300 பிராந்திய கணனிப் பயிற்சி நிலையங்களை நிறுவ திட்டம் கொண்டுள்ளது. இவற்றை விட சகல உயர்நிலை பாடசாலைகளிலும் கொம்பியூட்டர் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலதிகமான தேசிய நிறுவனங்கள் பலவும் கொம்பியூட்டர் கல்விக்கான நிலையங்களை பல்வேறு துறைகளிலும் நிறுவி வருகின்றன. இதிலிருந்து கிடைக்கக்கூடிய நன்மை யாதெனில் சிங்கள மொழி மூலம் கணனி உபயோகத்தின் பொருட்டு செய்யப்படுகின்ற முயற்சிகள் பலவும் தமிழ்மொழிமூலமான கணனி உபயோகத்திற்கும் திறவுகோலாக அமையும் என்பதாகும்.

பொது நிர்வாகத்தை தமிழில் ஆற்றும்போது கணனியின் ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வதில் பின்வரும் விடயங்கள் தடைகளாகவுள்ளன.

01. தமிழ்மொழி மூலமான மென்பொதிகளின் பற்றாக்குறை.

இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தமிழ்மொழிமூலம் செயற்படக்கூடிய மென்பொதிகளின் தயாரிப்பிற்கான முன்முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் இதன் நன்மைகள் பரவும் வரை காத்திருக்க வேண்டிய தேவை இல்லை.

02. கணனி உபயோகத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கான பிரதேசத்தின் பொதுவான சூழல்.

பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக மின்சார வளங்களில் உள்ள மட்டுப்பாடுகள், பயிற்சி நிறுவனங்கள் கிடைப்பதில் உள்ள கஷ்டங்கள், வள ஆளணியினரின் அசைவு ஆகியன பெரிதும் கட்டுப்பட்ட நிலையில் உள்ளது.

03. அரச பணியகங்களிலுள்ள முதுநிலை உத்தியோகத்தர்களின் ஆர்வமின்மை.

பல்வேறு காரணங்களுக்காக முதுநிலை உத்தியோகத்தர்கள் கணனி உபயோகத்தை தீவிரமாக ஆதரிப்பவர்களாக இல்லை. அதற்கான சூழ்நிலை படிப்படியாக மாறுதல் வேண்டும்.

04. கல்வித்துறையிலுள்ள தேக்கம்

கணனி உபயோகத்தின் பொருட்டு தனியார் துறை காட்டுகின்ற தீவிரத்திற்கு இணையான முயற்சி கல்வித் திணைக்களத்திலிருந்தும், பாடசாலைகளிலிருந்தும் கிடைப்பதில்லை. இது கணனி அறிவு தொடர்பில் இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தை ஒரு குறைவிருத்தித் தீவாக உருவாக்கும் (Enclave of Computer Illiteracy) சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

05. தொழில் நுட்ப ரீதியானவை :-

ஆங்கில மொழிபோல் அன்றி தமிழில் எழுத்து தட்டுப்பலகைகள்(Key Board) ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்பில் உள்ளன. இது தட்டச்சு இயந்திரம் போலன்றி கணனி உபயோகத்தில் மிகுந்த சிக்கல்களை ஏற்படுத்தவல்லன. இவை ஒரு தன்மையானவையாக்கப்படல் வேண்டும்.

06. கலைச் சொல் தொடர்பானவை :-

கணனி விஞ்ஞானம் பற்றிய ஆங்கிலப் பதங்களில் பிரயோக ரீதியில் 1% மான சொற்களெனினும் தமிழில் உபயோகத்தில் இல்லை. தற்போது குறிப்பிட்ட கலைச் சொற்களை ஆங்கிலத்திலேயே உபயோகித்து விடுகிறார்கள். கலைச் சொற்களும் ஒரு தன்மையானவையாக இல்லை. பல வேளைகளில் கருத்தைப் பிரதிபலிக்காத சொற்களும் உபயோகத்தில் உள்ளன.

விதப்புரைகள் :

01. கொள்கைப் பிரகடனம் :-

தமிழ்மொழி மூலமான பொது நிர்வாகத்தில் கணனியின் உபயோகம் என்பது வெறுமனே நிர்வாக இயந்திரத்துடன் தொடர்புடையதல்ல. இது தனியார் துறை, கல்வித்துறை, பொதுமக்கள், எதிர்கால அபிவிருத்திக்கொள்கைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையது. ஆகவே, இவை சகலவற்றையும் கவனத்திற்கெடுத்து ஒரு கொள்கைப் பத்திரம் ஒன்று வெளியிடல் வேண்டும்.

02. ஆற்றல்களை வளர்ப்பதற்கான திட்டம் :-

பொதுத்துறை நிறுவனங்களின் கணனி உபயோகத்திற்கான ஆற்றல்களை வளர்ப்பதற்கு குறிப்பாக அது புறச்சூழ்நிலையின் தேவைகளிற்கும், மாற்றங்களிற்கும் ஈடு கொடுக்கக்கூடிய வகையில் உருவாக்குவதற்கான மனித வளத்தை அபிவிருத்திசெய்ய நிகழ்ச்சித்திட்டமொன்று அமுலாக்க வேண்டும்

03. கலைச்சொல் ஆக்கம் :-

அதிகார பூ ர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கணனி தொடர்பான கலைச்சொல் ஆக்க முயற்சி உடனடியாகத் தேவைப்படுகின்றது. இந்தியாவில் இருந்து வெளிவரும் பொதுநூல்களும் பாடப்புத்தகங்களும் ஏற்கனவே சிறப்பானவையாக உள்ளனவேயாயினும். இவற்றை சேகரித்தல், பயன்படுத்தல் பற்றிக் கவனம் செலுத்தப்படல் வேண்டும். கலைச்சொற்கள் கருத்துக்களை இலகுவில் புரியவைக்கும் வகையில் ஆக்கம் செய்யப்படல் வேண்டும்.

04. எழுத்துத் தட்டுப்பலகை :-

பல எழுத்துருவங்களின் தோற்றம் (Fonts) எழுத்துத் தட்டுப்பலகையின் (Key Board) அமைப்பை ஒழுங்குபடுத்தும் பணியினை மேலும் சிக்கலாக்கியுள்ளது உலகளாவிய ரீதியில் இதனை ஒழுங்குபடுத்தவேண்டிய பணியினை முன்னின்று செயற்படுத்த ஒரு நிறுவனம் முன்வரவேண்டும். ஆனால் இது ஒரு நிபந்தனையல்ல.

□

இலங்கை ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைக் கல்வியில்

தமிழ் மொழிப்பிரயோகம்

கு. சோமசுந்தரம்
ஆலோசகர் தேசிய கல்வி நிறுவகம்

அறிமுகம் :

சகல துறைகளின் அபிவிருத்திக்கும் கல்வியே ஆதாரம் ஆகும். கல்வியின் தேவை இன்று நன்கு உணரப்பட்ட நிலையில், அதன் தத்துவம், நோக்கங்கள், எல்லைகள், பரிமாணம், உள்ளடக்கம், பணிகள், முகாமைத்துவம், கல்வியை வழங்குதல் என்பன கடந்த காலங்களிலும் பார்க்க இன்று மிகவும் பரந்தும் விரிந்தும் செல்கின்ற போக்கினை அவதானிக்க முடிகிறது கல்வியின்பால் கவனம் ஈர்க்கப்படாத எவரும் இல்லை என்றே கூறி விடலாம் கல்விச் செலவு மனிதவளத்தை மேம்படுத்துவதற்கு இடப்படும் மூலதனமாகக் கொள்ளப்படுகிறது. கல்வியே அதி சிறந்த பாதுகாப்பையும் வழங்குகிறது

கல்வியின் விரிவாக்கம் பல்முனைப்பட்டதாக விளங்கும்போது பிரச்சினைகள், சிக்கல்கள், முரண்பாடுகள் என்பன உருவாதல் இயல்பானதே. அவற்றை முகங்கொண்டு பகுத்து ஆய்ந்து, சனநாயக வழியில் அவற்றிற்கு தீர்வு காண்பதே முறையாகும். பிரச்சனைகளை வளரவிட்டால் மேலும் பல பிரச்சினைகளை அவை பிறப்பிக்கும்.

கல்விக் கோட்பாடுகளில் ஒத்த தன்மைகள் இல்லை. கல்விப்பரிபாலனம் அரசியல் சார்ந்த விடயமாகிவிட்டது. அரசியல் சித்தாந்தங்களும் வேறுபட்ட தன்மையன. எனவே கல்விப் போக்குகள் உறுதியற்றனவாய் உள்ளன. அதனால் கல்விப்பிரச்சினைகள் தோன்றுகின்றன நாட்டில் அரசாங்கங்கள் மாறும் போதெல்லாம் கல்வி முறைமையும் மாற்றத்திற்குள்ளாகின்றது கல்வி முறைமை அடிக்கடி மாற்றப்படும்போது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் பாதிப்பிற்குள்ளாகிறது மாற்றங்கள் வேண்டாம் என்பதல்ல. அவை வளர்ச்சிக்குத் தேவை. அரசியல் நோக்கங்களுக்காக கல்வியைப் பாதிப்பிற்குள்ளாக்கும் மாற்றங்களினால் கல்விக் கொள்கையில் இந்நாட்டில் தொடர்ச்சி இல்லை அதனால் கல்வியில் வளர்ச்சி இல்லை என்று விமர்சிக்கப்படுகிறது.

சனநாயக நாடொன்றில் கட்சி அரசியலும், கல்வியும் பின்னிப்பிணைந்து இறுக்கமாக இருக்கும்வரை அரசியல் கட்சியொன்று அதிகாரத்தில் அமர்ந்ததும் கல்விக்கொள்கை பரிபாலனம், உள்ளடக்கம் என்பவற்றில் அதற்குச் சார்பான மாற்றங்களை உடனடியாகச் செய்ய விரும்பும். அது தவிர்க்க முடியாததும் ஆகும். மக்கள் ஒப்புதல் தந்து விட்டார்கள் என்ற போர்வையில் மாற்றங்கள் நிகழும். இம்மாற்றங்கள் பெரும்பாலும் ஒரு பகுதியினர் சார்ந்ததாகவும், அவர்களுக்கே நலம் பயப்பனவாகவும் அமையும். ஆனால் அவை எல்லோருக்கும் நன்மை தரும் தேசிய நலன் வாய்க்கப் பெற்றவையா? என்பது விமர்சனத்திற்குரியது. பெரும்பாலும் தேசிய நலன் வாய்ந்து சகல சமூகத்தினருக்கும் நன்மை தருவனவாய் மாற்றங்கள் இருப்பதில்லை என்பது அனுபவ உண்மையாகும். ஒரு சனநாயக நாட்டில் சகல அரசியல் கட்சிகளுக்கும் இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளுக்குமிடையே கல்விக் கொள்கை, பரிபாலனம், உள்ளடக்கம் முதலிய கல்வி விடயங்கள் தொடர்பான ஏகோபித்த இணக்கம் அடையப்பட்டால் மாத்திரமே இந் நிலைமையை நீக்கிக் கொள்ள முடியும். தேசிய கல்வி

முறைமையில் ஒரு தொடர்ச்சியையும், வளர்ச்சியையும் அதன் பின்னரே காணமுடியும். தேசிய அபிவிருத்தியின் பிரதான காரணியாக கல்வி அப்போதுதான் விளங்கும்.

கட்சி அரசியலுக்கு மேலானதாக "தேசியம்" விளங்குகிறது என்பது உணர்தற்பாலது. இலங்கை பல்லினங்களையும், மொழிகளையும், சமயங்களையும் சேர்ந்த மக்களைக் கொண்ட தேசம். இங்கு வழங்கப்படுகின்ற கல்வி, தேசியத்தை வளர்ப்பதாக அமைய வேண்டும். தேசியத்தை குலைப்பதாக இருத்தல் ஆகாது. ஒவ்வொரு பிள்ளையும் தனது கலாச்சார, பண்பாட்டு மரபுரிமையைப் பேணுவதற்கு உரியவாறும், அதன் ஆளுமையை ஆகக்கூடிய அளவிற்கு வளர்த்துக்கொள்ள உதவக் கூடியவாறும், பயனுள்ள உறுப்பினராக வாழும் சமூகத்தில் அதன் இடத்தையும் கடமைகளையும் உணர்ந்து கொள்ளக் கூடியவாறும், எல்லா மக்களுடனும் இணங்கியும் இசைந்தும் வாழக்கூடியவாறும், உதவக்கூடியதாக தேசியகல்வி முறைமை அமைய வேண்டும். சமூகத்தின் பொருளாதார அபிவிருத்திக்கான அதன் தேவைகளையும் எவ்வாறு அவற்றை நிறைவு செய்யலாம் என்பதையும் தேசிய கல்வி முறைமையை திட்டமிடும் போது கருத்திற் கொள்ளல் அவசியமானது. கிடைக்கின்ற மனித வளத்தை எவ்வாறு பயிற்சி அபிவிருத்தியில் ஈடுபடுத்தலாம் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

தேசிய ஒற்றுமையையும், தேசத்தின் அபிவிருத்தியையும் தேசியகல்வி முறைமையின் தன்மையையும் பொறுத்தே அடையப்படக் கூடியதாகவும், அடையப்பட முடியாததாயும் இருக்கும். எனவே தேசியகல்வி முறைமையானது நாட்டின் எல்லா இனத்தவர்களின் அபிலாஷைகள், எதிர்பார்ப்புகள் என்பனவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலும் எவ்வித வேறுபாடுமின்றிச் சமூகத்தின் சகல பிரிவினருக்கும் கிடைக்கக்கூடிய முறையிலும் விளங்குதல் அவசியம். இத்தகைய தேசியம் தழுவிய கல்வி முறைமை ஐரோப்பியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இருக்கவில்லை. குறிப்பாக நூற்றிஐம்பது ஆண்டுகால ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஏற்றத்தாழ்வு கொண்ட இருவேறு கல்விமுறைமைகள் இருந்தன. ஆங்கிலப் பாடசாலைகள் முறைமை செல்வந்த உயர் வகுப்பினருக்கு உரியதாகவும் தாய் மொழி மூலப் பாடசாலைகள் முறைமை வறிய வகுப்பினருக்கு உரியதாகவும் இருந்தன. ஆங்கிலப் பாடசாலைகள் கட்டணம்அறவிட்டு குடியேற்ற நிர்வாகத்திலும், உயர் கண்ணியத் தொழில்சந்தையிலும், தங்களது சமூக பொருளாதார நிலைகளை உயர்த்திக்கொள்ளக்கூடிய உத்தியோகங்களிலும், பதவிகளிலும் அமர்வதற்குத் தேவையான கல்வியை வழங்கின. தாய் மொழிப் பாடசாலைகள் இலவசக் கல்வியைத் தாய் மொழியில் வழங்கிய போதிலும் அக் கல்வியால், குடியேற்ற நிர்வாகத்தில் உத்தியோகம் பெற்று, சமூக பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்வற்கான வாய்ப்புக்களை வழங்க முடியவில்லை.

இந்தநிலைமையினையே பிரித்தானியர் ஆட்சியானது இருவித்தியாசமான பாடசாலை முறைமைகளினால் சேவை பெற்ற இலங்கையில் இருதேசங்களை உருவாக்கியிருந்தது எனக் கன்னங்கரா விசேட குழுவின் கல்விச் சீர்திருத்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றும் போதனா மொழியின் அடிப்படையில் வேறு வடிவத்தில் இத்தகைய ஒரு நிலை உருவாகி விட்டதோ என எண்ண வேண்டியுள்ளது.

கன்னங்கரா விசேட குழுவின் சீர்திருத்தங்களில் குறிப்பாக இலவசக்கல்வி, போதனாமொழியாக ஆங்கிலத்திற்குப்பதில் தாய்மொழியைப் பாடசாலைகளில் பயன்படுத்துதல், கிராமங்களில் மத்திய பாடசாலைகளை நிறுவுதல் என்பன 1945ம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தன. அவற்றோடு இலங்கை முழுவதற்குமான பொதுவான தேசியகல்வி முறைமை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்று கருதப்படலாயிற்று. எனினும் கன்னங்கரா விசேட குழுவினர் எதிர்பார்த்தபடி இச்சீர்திருத்தங்கள் பயன்களை விளைவித்துள்ளனவா என்பதை அரை நூற்றாண்டின்

பின்னர் இன்று ஆய்வு செய்யவேண்டியது அவசியமாகின்றது. குறிப்பாக தமிழை தாய் மொழியாகக் கொண்ட தமிழர்கள், முஸ்லீம்களை பொறுத்த வரையில் அவர்களின் ஆரம்ப, இடைநிலை பாடசாலை, கல்வியில் தமிழ்மொழிப்பிரயோகம்- போதனா மொழியாக பயன்படுத்தியமை உட்பட- எந்த அளவிற்கு அவர்களுக்கு உதவியுள்ளது அல்லது பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது என்பதுபற்றி கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். இக்கட்டுரை சுருக்கமாக அது பற்றி ஆராய்ந்து மதிப்பீடு செய்ய முயலுகிறது. மேலும் ஆய்வுகளுக்கு இத்திசையில் தூண்டுவதற்கு கட்டுரையில் தரப்பட்டுள்ள கருத்துக்கள் துணை செய்தால் அதுவே கட்டுரையின் நோக்கம் அடையப்பெற்றமைக்கு அறிகுறி ஆகும்.

கன்னங்கர அவர்கள் சகல பாடசாலைகளையும் அரசிடம் ஒப்படைத்து அதன் மூலம் அர்த்தமுள்ள தேசிய கல்விமுறைமையை நிலைகொள்ளச்செய்ய விரும்பினார். எனினும், அப்போது அவரின் விருப்பம் கைகூடவில்லை. அக் காலகட்டத்தில் கன்னங்கராவின் இச்சிந்தனை முற்போக்கான அபிப்பிராயமாக இருந்தமையே அதற்குக் காரணம். 1960ம் ஆண்டில் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகள், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள் (விசேட நிபந்தனைகள்) சட்ட இலக்கம் 5/1960 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் மிகப் பெரும்பாலான ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகள் அரச பாடசாலைகள் ஆகின. அதன் பின்னர், உதவி நன்கொடை பெறும் தனியார் பாடசாலைகள் இல்லாமல் போயின. அத்துடன் அரசு தவிர வேறு எந்தத் தனியாரும் ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகளை ஆரம்பித்து நடத்த முடியாத நிலையும் ஏற்பட்டது.

1962இல் பேராசிரியர் ஜெ. ஈ. ஜயசூரியாவின் தலைமையிலான தேசிய கல்வி ஆணைக்குழு தனியார் முகாமையின்கீழ் இயங்கிவந்த 63 தனியார் பாடசாலைகளையும், சனநாயகம் யதார்த்தமாக வேண்டுமானால், அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற அதன் நிலைப்பாட்டினைத் தெரிவித்தது. அவற்றுள் 15 கட்டணம் அறவிடும் பாடசாலைகள். எஞ்சிய 48 கட்டணம் அறவிடாமல் இயங்கிவந்த தனியார் பாடசாலைகள். ஆனால் 1964 இல் அப்போதைய அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய கல்விமுறைமையில் அதற்குரிய நடவடிக்கைகள் இடம் பெறவில்லை.

1945 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட இலவசக்கல்வி, தேசிய மொழிகள் போதனா மொழியாக ஆக்கப் பெற்றமை, கிராமங்களில் திறக்கப்பட்ட "மத்திய வித்தியாலயம்" என்னும் ஒழுங்கமைப்பு என்பவற்றுடன் 1960இல் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டமை காரணமாக இலங்கையில் ஆரம்ப. இடை நிலைக்கல்விவிரிவாக்கம் 1950,60 களில் துரிதமாக நிகழ்ந்தன துரிதப்படுத்தப்பட்ட கல்வி விரிவாக்கத்தை தேசிய ரீதியாக பின்வரும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

ஆண்டு	பாடசாலைகளின் தொகை	ஆசிரியர்களின் தொகை	மாணவர்களின் தொகை
1947	5915	28,210	1,025,836
1970	9646	94,583	2,550,150

கல்வி விரிவாக்கம், தேசிய வாதத்தில் புதிய திருப்புமுனைகளையும், இன மொழிக் குழுவினரிடையே சிங்களத்தேசியம், தமிழ்த்தேசியம் என இலங்கைத் தேசியம் பங்குபட்டு நிற்கும் நிலையினையும் ஏற்படுத்தும் வகையில், முனைப்புக் கொள்ளச் செய்தது

தேசிய மொழிகளான சிங்களமும் தமிழும் போதனாமொழியாக்கப் பெற்றமை இலங்கையின் கல்வி விரிவாக்கத்திற்கு முதன்மைக் காரணியாக விளங்குகின்ற அதே

வேளை,சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டு, தமிழுக்கு அந்த அந்தஸ்தைக் கொடுக்காமல் விட்டதால் தமிழ்மொழி மூலம் கற்றவர்களுக்கு அரசதுறைகளில் தொழில்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும், அதனால் தமது சமூக, பொருளாதார நிலையினை உயர்த்திக் கொள்ளும் சந்தர்ப்பமும் அருகிக்கொண்டே வந்தது. 1973 இல் பல்கலைக்கழக நுழைவில் "தரப்படுத்தல்" மொழியின் அடிப்படையில் புகுத்தப்பட்டதும் தமிழ்மொழி மூலம் கற்றவர்களின் உயர்கல்விவாய்ப்பும் குன்றியது. இந்த நிலையில் தமிழ் மொழி போதனாமொழியாக்கப்பட்டமையால் தமிழ்மாணவர்கள், ஆரம்ப, இடைநிலைக் கல்வியில் பங்கு பற்றும் தொகை அதிகரித்தது. ஆயினும் அதன் பயனை அனுபவிக்க முடியாமல் விரக்திநிலைக்கு தள்ளப்பட்டோர் எண்ணிக்கையும் அதிகரித்தது. தொழில் வாய்ப்புகளிலும், பல்கலைக்கழக உயர்கல்விவாய்ப்புகளிலும் தமிழ் மொழி மூலம் கற்றோருக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டமையே இதற்குக் காரணம் ஆகும்.

யாழ்ப்பாணப்பகுதியில் ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகள் சிறப்பாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தமையாலும், கல்வித்தரம் உயர்ந்திருந்தமையாலும் கல்வி கற்றோர் எண்ணிக்கை நன்கு அதிகரித்தமையாலும், தமிழ்மொழிமூலம் கல்வி கற்றவர்களிடையே மேற்குறித்த தடைகள் பெரும்பாதிப்பையும், எதிர்காலம் பற்றிய அச்ச உணர்வையும் ஏற்படுத்தின. படித்த தமிழ் இளைஞர்களிடையே அமைதியின்மையும் கிளர்ச்சி உணர்வும் தோன்ற காரணமாயின. தமிழும் நிருவாகத்தில் சிங்கள மொழியின் அந்தஸ்தைப் பெற்றால் தான் தமிழ்மொழி போதனாமொழியாகத் தொடர்ந்திருப்பதில் அர்த்தம் உண்டு, பயனுண்டு என்னும் எண்ணம் வலுப்பட்டது.

1953 ஆம் ஆண்டுக்குப் பின் இனக்குழுக்களுக்குரிய தொழில்வாய்ப்புக்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஏனைய இனக்குழுக்கள் கூடிய வாய்ப்புகள் அனுபவிக்கத் தொடங்கிய வேளை, தமிழர்களுக்குரிய தொழில் வாய்ப்புகள் வீழ்ச்சியுறத் தொடங்கின. (A. J. WLLSON POLITICS IN SRI LANKA 1947 - 1973. PUBLISHED IN 1974.) (கலாநிதி சபா, ஜெயராஜாவின் "சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

1973 இலிருந்து தமிழ்மாணவர்களின் பல்கலைக்கழக கல்விவாய்ப்பும் தரப்படுத்தல் கல்வியில் புகுத்தப்பட்டமையால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது 1969 ஆம்ஆண்டில் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானத்துறை சார்ந்த கல்விப்புலங்களில் தமிழ் மாணவர்கள் 27.5 வீதம் வரையில் இருந்தார்கள். தரப்படுத்தலுக்குப் பின்னர் 1974 இல் அவர்கள் இடம் பெறல் 07 சத வீதமாக குறைந்து விட்டது.

மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புகளும், தமிழ்மொழிமூலம் கற்பதற்கு மிகவும் குறைவாகவே இருந்து வருகின்றது.

1972 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்ட கலைத்திட்ட மாற்றங்களும் தமிழ்மாணவர்கள் அதுவரை அடைந்து வந்த கல்வித்தரத்தினைக் குறைத்து ஏனையோருக்குச் சலுகை வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒன்றாக கல்வியாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். "தாய் மொழி" என்பதற்குப் பதிலாக "முதல் மொழி" என்னும் பதம் பயன்படுத்தியமையும் தமிழ்க் கல்வியாளர்களின் கண்டனத்திற்கு உள்ளாகியது. போதனா மொழி சம்பந்தமான தெளிவற்ற நிலையும் உணரப் பெற்றது. 1981ம் ஆண்டு வெளியிடப்பட்ட "கல்விச் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகள்" என்ற அரசின் வெள்ளையறிக்கையிலும் தமிழ்மக்களின் கல்விப்போதனாமொழி தாய்மொழியான தமிழ் மொழியே என்ற உறுதி வழங்கப்படவில்லை. அதிலும் "முதல் மொழி" என்ற வார்த்தைப் பிரயோகம் இடம் பெற்று இருந்தது.

1972 இலிருந்து பொதுக்கலைத்திட்டம் ஒன்று சிங்களமொழிமூலம் கற்றோருக்கும். தமிழ்மொழிமூலம் கற்றோருக்கும் நாடளாவிய முறையில் ஆரம்ப,

இடைநிலைப் பாடசாலைகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது. க. பொ. த.(சா/தரப்பத்திர) பரீட்சைகளும் ஒன்றாகவே உள்ளன. எனினும் பிரச்சினைகளும் இல்லாமல் இல்லை.

1995 யாப்புச் சீர்திருத்தப் பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, உத்தேச யாப்பின் மொழிமீதான நகல் அத்தியாயத்தில், போதனாமொழி தொடர்பாக பின்வரும் நிபந்தனைகள் காணப்படுகின்றன.

"ஒருவர் சிங்களம் அல்லது தமிழ்மூலம் கல்வியூ ட்டப்பட்டு பரீட்சிக்கப்படுவதற்கு உரிமையுடையவராவர். வசதிகள் கிடைக்கப் பெறுமெனின் வேறெந்தத் தேசியமொழியின் மூலமும் ஒருவர் கல்வியூ ட்டப்பட்டு சோதிக்கப்படுவது சட்ட ரீதியானதாகும்."

"ஒருவர் உயர்கல்விநிறுவனம் ஒன்றில் எந்த தேசியமொழியிலும் கல்வி ஊட்டப்படுவதற்கு உரிமையுடையவராவர்" (DAILY NEWS, 1995,JUNE 23, P.13) பேராசிரியர். டபிள்யூ .ஆரியதாச சில்வா, 17, ஒக்டோபர் 1995 அன்று ஆற்றிய கன்னங்கர ஞாபகார்த்த பேருரையிலிருந்து எடுக்கப்பெற்றது.)

இன்றுள்ள பாடசாலை முறைமை கடந்த 50 ஆண்டு காலத்தில் புகுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் மொத்தப்பெறுபேறே ஆகும். நன்மைக்கும் நலிவிற்கும் சீர்திருத்தங்களே காரணம். மேற்கண்ட பகைப்புலத்திலேயே, இலங்கையின், ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைக் கல்வியில் தமிழ்மொழிப் பிரயோகம் தொடர்பான கணக்கெடுப்பும் பிரச்சனைகளும் ஆராயப்பட வேண்டியுள்ளது

2. 00 ஆரம்ப இடைநிலைப் பாடசாலைக்கல்வி :

இலங்கையின் கல்வி முறைமை பிரதானமாக மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன

(1) பாடசாலை முறைமை
(2) பல்கலைக்கழக முறைமை
(3) மூன்றாம் நிலைக்கல்வி முறைமை.

2. 01 பாடசாலை முறைமை :-

இவற்றுள் பாடசாலை முறைமையே மிகப் பெரியதாகும். 10,081 பாடசாலைகள் உள்ளன. 1988 ஆம் ஆண்டில்.

(1) அரசாங்க பாடசாலைகள்	9714
(2) ஏனைய தனியார் பாடசாலைகள்	72
(3) பிரிவேனாக்கள்	295
	10,081

அரசாங்க பாடசாலைகளில்

(1) சிங்கள மொழி மூலப் பாடசாலைகள்	7168
(2) தமிழ் மொழி மூலப் பாடசாலைகள்	2546
	9714

ஏறத்தாழ 43 இலட்சம் மாணவர்கள் பாடசாலை முறைமையில் கல்வி பயில்கின்றனர். இவர்களில் 75% சிங்கள மொழி மூலம் கற்பவர்கள், 25% தமிழ் மொழி மூலம் கற்பவர்கள்.

சகலருக்கும் உரிய பொதுக்கல்வியின் அகற்சி பின்வருமாறு.

(1) ஆரம்பக்கல்வி : ஆண்டு 1-5 வரை (5 ஆண்டுகள்)

(2) இடைநிலைக்கல்வி: கனிஷ்ட இடைநிலை ஆண்டு 6-8 வரை (3 ஆண்டுகள்)
சிரேஷ்ட இடைநிலை ஆண்டு 9-11வரை(3 ஆண்டுகள்)
கல்லூரிசார் மட்டம் : ஆண்டு 12-13 வரை (2ஆண்டுகள்)
(பொதுக்கல்விக்கு வெளியானசிறப்புத்துறைக் கல்வி)

பொதுக்கல்வி 11 ஆண்டுகள் அகற்சியை உடையது. (5+3+3) சிறப்புத்துறைக் கல்வி 02 ஆண்டுகள் அகற்சியை உடையது. பாடசாலைக் கல்வியின் மொத்தக்காலம் 13 ஆண்டுகள் (5+3+3+2)

1991 இல் 170,000 ஆசிரியர்கள் அரசாங்க பாடசாலைகளில் கல்வி கற்பித்தனர். இவ்வாண்டு ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 185,210 என்று கூறப்படுகிறது. தற்பொழுது மொத்தம் 10,832 பாடசாலைகள் உள்ளன.

தமிழ்மொழிப்பாடசாலைகளில் பெருந்தொகையில் ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாக கணிப்புகள் கூறுகின்றன. தாம் கல்வி அமைச்சராகப் பதவி ஏற்ற போது 9,500 ஆசிரியர் வெற்றிடங்கள் தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் இருந்ததாக மாண்புமிகு கல்வி உயர்கல்வி அமைச்சர் கூறியுள்ளார். (வீரகேசரி 11.09.96. பக்: 4)

பிள்ளையின் ஆளுமையினைப் பயனுறுதிவாய்ந்ததாக வளர்ச்சியடையச் செய்தல், பிள்ளை எதிர்காலத்தில் பொருத்தப்பாட்டுடன் சமூகத்தில் இணங்கி வாழவும் தொழில் புரியவும் ஏற்றவாறு பிள்ளையை விருத்தி செய்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டது பொதுக்கல்வி. இதற்கேற்பவே பொதுவான கலைத்திட்டம், பாடநூல்கள் ஏனைய கற்றல், கற்பித்தல் சாதனங்கள் அமையும்.

பொதுக்கல்வியைத்தொடர்ந்து ஆண்டு 12-13 கல்லூரிசார் மட்டக்கல்வி சிறப்புத்துறைகளில் அறிவுத்தேட்டவகையான உயர்கல்வியைத் தொடர விரும்புவோர்க்குரியது.

பொதுக்கல்வி முடிவில் (ஆண்டு 11 முடிவில்) தேசிய மட்டத்திலான கல்விப் பொதுத்தராதரப் பரீட்சை (சாதாரண தரம்) நடத்தப்படுகின்றது.

2. 02 ஆரம்பக்கல்வி

ஐந்துவயது பூர்த்தி முதல் பத்துவயது பூர்த்தி வரை ஐந்து ஆண்டுக்காலம் கொண்டது ஆரம்பக்கல்வி. இது ஒரு பிள்ளையின் அபிவிருத்தியில் ஒரு முக்கியபாகமாகும்.

ஆரம்பக்கல்விப் பாடத்திட்டம் சூழலுக்கு ஏற்பப் பிள்ளைகள் தம்மை இசைவு படுத்திக் கொள்வதற்கும் மேலும் அனுபவங்களை விரிவாக்குவதற்கும் உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தாம்வாழும் சுற்றாடலில் மாணவர் பெறுகின்ற அனுபவங்கள்மூலம் அவர்களின் கற்றல் நடைபெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையினால் கற்றல்-கற்பித்தல்

ஊடகமாகத் தாய்மொழி அமைகின்றது. பிள்ளை பாடசாலைக்கு வரும்போது முதல் ஐந்தாண்டுகளிலும் பெற்ற அனுபவங்களுக்குத் துணையாக தாய் மொழியே விளங்கிற்று. தொடர்ந்து பாடசாலைக் கல்வியையும் தாய்மொழியில் பெறுவது பிள்ளைக்கு இலகுவாக இருக்கும். பிள்ளை தனது ஆளுமையை விருத்தி செய்வதற்கும் அனுபவங்களைப் பெறுவதற்கும், தொடர்பாடலுக்கும் ஆளுமையை வெளிப்படுத்துவதற்கும் தாய் மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இருக்க மாட்டாது என்பது கல்வி உளவியல் அறிஞர்களின் கருத்து.

"தாய்மொழி" என்னும் பதம் கல்வி ஆவணங்களில் இடம்பெறவில்லை. முதல் மொழி, கல்விமொழி என்னும் சொற்களே பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதனால் தாய் மொழியின் இடம் சரியாக வரையறுக்கப்படவில்லை என்பது தெளிவு. முதல்மொழி, கல்விமொழி என்னும் பதங்கள் தாய்மொழியைத்தான் குறிக்கின்றன என்று கொள்ள முடியாது.

கற்றல் என்பது அனுபவம் பெறல். அதற்கு நன்குபழக்கப்பட்ட சுற்றாடல், மொழி என்பன உதவுகின்றன. பிள்ளைக்கு நன்கு பழக்கப்பட்ட மொழி அதன் தாய் மொழியேயாகும்.

1993 இலிருந்து நடைமுறைக்கு வந்துள்ள ஆரம்பக்கல்விப்பாடத்திட்டத்தில் தாய்மொழி என்னும்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளமை ஆறுதலைத் தருகிறது. கருத்துக்களையும் எண்ணங்களையும் தெளிவாகப் பரிமாறுவதற்கும் பிள்ளையின் தாய் மொழியே மிகப்பொருத்தமானது. அதுவும் ஆரம்பக்கல்வியில் இது மிக இன்றியமையாதது. ஆண்டு 1, 2, 3 வகுப்புகளின் (1993 இலிருந்து)

<u>பாடத்திட்ட உள்ளடக்கம்</u>

01. தாய் மொழி
02. கணிதம்
03. நாமும் சுற்றாடலும்
04. ஆக்கத்திறன் செயற்பாடுகள்
05. உடற் கல்வி
06. அழகியற் கல்விச் செயற்பாடுகள்.

எல்லாப்பாடங்களும் வெவ்வேறாகத் திட்டமிடப்பட்டிருப்பினும், கற்பித்தல் நடவடிக்கைகளின் போது, பாடங்களுக்கிடையிலான தொடர்பு பேணப்பட வேண்டுமெனவும், ஒன்றிணைத்துக் கற்பிக்கக்கூடிய சந்தர்ப்பங்களிலெல்லாம் அது கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆண்டு 4,5 வகுப்புகளில் மேற்கூறிய பாடங்களுடன் ஆங்கிலமும், ஆரம்ப விஞ்ஞானமும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆரம்பக்கல்வி தொடர்பான பிரச்சனைகளாக இடை விலகல், ஒரேவகுப்பில் மீளக்கற்றல், குறைந்தஅடைவு மற்றும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் தொடர்பான பிரச்சனைகள், பயிற்சி பெற்ற ஆசிரியர் பற்றாக்குறை, வரவு ஒழுங்கீனம்(மாணவர்), ஓராசிரியர் பாடசாலை முதலியவற்றை இனங்காணலாம்.

மொழி விருத்திக்குறைவே ஏனைய பாடங்களில் எதிர்பார்த்தஅடைவினை எய்தாமைக்குப் பிரதான காரணமாகக் கூறப்படுகிறது. மேற்கூறிய காரணங்களினால் கல்விவிரயம் ஆரம்பக் கல்விப் பாகத்தில் ஆகக்கூடுதலாக உள்ளது.

2. 03 இடை நிலைக்கல்வி.

ஆரம்பமட்டத்தில் பிள்ளை முயன்றுபெற்ற அடிப்படை அறிவினையும், தேர்ச்சித்திறன்களையும், மனப்பாங்கு விழுமியங்களையும் வலுப்படுத்திக்கொள்ள உதவுவதோடு, மேற்கல்விக்கு அத்திவாரம் இடுவதாயும் இடைநிலைக்கல்வி அமையும். அத்துடன் ஒரு சில தொழில்தொகுதிக்கு ஏற்புடைய இலகுவான தேர்ச்சித்திறன்களை தெரிந்துகொள்வதன்மூலம் படிப்படியாக வேலைஉலகிற்கு அறிமுகம்செய்ய வழிகோலுவதாகவும் இக்கல்வி ஒழுங்கு செய்யப்படும். மேலும் சமூக பொருளாதார அபிவிருத்திநோக்கில், பாடசாலை மட்ட நிலையிலிருந்து புரிந்துகொள்ளத் தொடங்கி, தேசிய தேவைகளை உணர்ந்து கொள்ளவும் தூண்டுதல் அளிக்கும். மாணவன் பெறும் குடியியற்பயிற்சி தேசிய ஒருமைப்பாட்டுநோக்கினை வலியுறுத்துவதாய் விளங்கும். (கல்விச் சீர்திருத்தத்துக்கான ஆலோசனைகள் -1981)

1. கனிஷ்ட இடைநிலைக்கல்வி

பாடங்கள்

01. முதல் மொழி
02. சமயம்
03. கணிதம்
04. ஆங்கிலம்
05. விஞ்ஞானம்
06. சமூகக்கல்வி
07. அழகியற் கல்வி
08. வாழ்க்கைத் தொழிற்றிறன்கள்
09. உடனலவியலும்,உடலியற்கல்வியும்

2. சிரேஷ்ட இடைநிலைக்கல்வி

பாடங்கள்

01. முதல் மொழி
02. சமயம்
03. கணிதம்
04. ஆங்கிலம்
05. விஞ்ஞானம்
06. சமூகக்கல்வி
07. அழகியற் கல்வி
08. தொழில்நுணுக்கப் பாடங்கள்
09. உடனலவியலும் உடற்கல்வியும்

கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை, பொதுக்கல்விஅகற்சியின் இறுதியில் இடம் பெறும் தேசியச் சான்றிதழ் பரீட்சையாகும்.

இடைநிலைக்கல்வியின் மேல்கூறு ஆண்டு 12 - 13

இங்கு சிரேஷ்ட இடைநிலைக்கல்வியினை பொதுக்கல்வியை நிறைவுசெய்து தேவையான தகைகமைகளைப் பெறுவோர் கல்வியின் அடுத்தகட்டத்தைத் தொடருவர். ஒரு சிறப்புத்துறையைத் தெரிந்து கொள்வர். இறுதியில் நடத்தப்படும் க. பொ. த (உயர்தரம்) பத்திரப்பரீட்சையில்பெற்ற திறமை பல்கலைக்கழகம் புகுவதற்கு அடிப்படை அளவு கோலாக அமையும்.

இடைநிலைக்கல்வி பாடத்திட்டத்திலும் "தாய்மொழி" என்பதற்குப் பதிலாக" "முதல்மொழி" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. இடைநிலைக் கல்வி விரிவாக்கம் தொகை ரீதியாக இடம்பெற்றுள்ளது. ஆனால் பண்புரீதியாக/ தரரீதியாக முன்னேற்றம் குறிப்பிடத்தக்களவு இல்லை. க பொ. த. (சா / த) பத்திரப் பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம்,ஆங்கிலப் பாடங்களில் சித்தியடையாதோர் சத வீதம் பின்வருமாறு.

ஆண்டு	விஞ்ஞானம்	கணிதம்	ஆங்கிலம்
1983	45.63%	67.47%	74.28%
1984	66.05%	67.88%	79.28%
1985	56.12%	69.68%	78.37%
1986	57.60%	68.10%	60.40%
1987	52.52%	67.25%	63.37%

மொழிவிருத்திக்குறைவு பாடங்களில் சித்தியெய்தாமைக்கு ஒரு முக்கிய, காரணமாகும். அவ்வப் பாடங்களுக்குரிய ஆசிரியர் பற்றாக்குறை மற்றொருகாரணம்.

தமிழ்மொழி, தமிழ், முஸ்லீம் பிள்ளைகளின் போதனாமொழியாக உள்ளது. தமிழ்மொழி ஒரு பாடமாகவும் கற்பிக்கப்படுகிறது. எனினும் தமிழ்மொழி கற்பிப்பதற்கு வேண்டிய ஆசிரியர்களை நியமித்தல், பயிற்றுவித்தல், சேவைக்காலப்பயிற்சி வழங்குதல், ஊக்குவித்தல் என்பவற்றில் அதிகசிரத்தை எடுக்கப்படுவதில்லை. தமிழ்மொழிப் பாடத்திட்ட ஆக்கம், பாடநூல்கள் தயாரித்தல் என்பன ஒரு தசாப்தத்திற்கு முன்னர் நடைபெற்றன. அவையே இன்றும் நடைமுறையில் உள்ளன. ஏனைய பாடங்களை மேற்பார்வை செய்து உதவ கல்விஅதிகாரிகள் பாடரீதியாக நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் மொழி பாடத்திற்கென அவ்வாறான கல்வியதிகாரிகள் கிடையாது. போதனா மொழியான தமிழ்மொழியில் உரிய அடைவினை பெறாத மாணவர்கள் மற்றைய பாடங்களில் சித்தியெய்தத் தவறுவதில் ஆச்சரியமில்லை.

1990 ஆம் ஆண்டு க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றியோரில் தேசிய மட்டத்தில் 10 சதவீதத்திற்கு சற்று அதிகமானோர் எடுத்த எல்லாப் பாடங்களிலுமே சித்தி பெறவில்லை. விஞ்ஞானத்தில் 30 சதவீதத்தினரும் கணிதத்தில் 20 சத வீதத்தினருமே சித்தியெய்தினர்.

63 சதவீதமான மாணவர் இடைநிலைக் கல்வி கற்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் இடையில் பாடசாலையை விட்டு விலகுகின்றனர். அல்லது இறுதிப்பரீட்சையில் சித்திபெறத் தவறுகின்றனர். ஆண்டு 12, 13 வகுப்புகளுக்கு 30 சத வீதமான மாணவர்களே செல்கின்றனர் 10 சதவீதத்தினரே க. பொ த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தி பெறுகின்றனர். இவற்றோடு தொடர்பு பட்டவையாகவே இடைநிலைக் கல்விப்பிரச்சனைகள் உள்ளன.

கலைத்திட்ட மறுபரிசீலனை அவசியமாகின்றது. அதற்கேற்ப ஆசிரிய விருத்தியும், பயிற்சியும் முக்கியமாகின்றது. பரீட்சை முறைகளில் மாற்றம் தேவை. பாடநூல்கள், ஆசிரியர் கைநூல்கள் என்பன மீளாய்வு செய்யப்பட வேண்டும். யாவற்றிற்கும் மேலாக தமிழ் மொழித் திறன், போதனாமொழி, தொடர்பாடல் திறன் என்பன வளர்க்கப்படல் வேண்டும். பண்புசார் விருத்திக்கு இடை நிலைக்கல்வியில் முதன்மை கொடுக்கப்பட வேண்டிய தேவையும் அவசியமும் உணர்தற்பாலது மொழித்திறனில் வலிமையிருந்தாலே பண்புசார் விருத்தி சாத்தியப்படும்.

தமிழ்மொழித்திறனில் பெரும்பாலான மாணவர்கள் பின்தங்கியிருத்தலே, ஏனைய பாடங்களிலும் அவற்றின் பரீட்சைப் பெறுபேற்றிலும் பின்தங்கியுள்ளமைக்கு முதன்மைக் காரணமாகும்.

3. 00 தாய் மொழியே கல்விப் போதனா மொழியாகவும் இருத்தல் வேண்டும் என்பது பற்றிய கல்விச்சிந்தனையாளர் கருத்துக்கள்.

பண்டைய கீழைத்தேய, மேலைத்தேயத் தத்துவஞானிகள் பல்வேறு கல்வி விடயங்கள், தத்துவம், செயற்பாடுகள், பிரச்சனைகள் பற்றி ஆராய்ந்துள்ளனர். எவரும் கல்விப்போதனா மொழிபற்றி எதனையும் கூறியிருப்பதாகத் தெரியவில்லை. காரணம் அது ஒரு பிரச்சினையாக இருந்திருக்கவில்லை. அவரவர் தாய் மொழியில் கல்வி கற்றல் - கற்பித்தல் நடைபெற்றன.

வேறு மொழி பேசுபவர்கள் ஆக்கிரமிப்புச் செய்த பின்னர் தம் மொழியையும் ஆக்கிரமிக்கப்பட்டவர்கள்மீது வலிந்து திணித்தபோதே மொழிப்பிரச்சினை தோன்றியது.

எனவே தாய்மொழி அல்லாத பிறிதொரு மொழி கல்விப்போதனா மொழியாக வந்தமை ஓர் அரசியல் சார்ந்த விடயமாகும்.

கல்வியியல், உளவியல், சமூகவியல் பண்பாட்டியல் அடிப்படையில் போதனா மொழி கற்போரின் தாய்மொழியாகவே இருத்தல் வேண்டும் என்பது துறை சார்ந்த அறிஞர் கருத்தாகும். அரசியல் தீர்மானங்கள் ஆள்வோர்களினாலேயே பெரும்பாலும் எடுக்கப்படுகின்றன. அதனால் அவை அவர்களுக்கு சாதகமாகவே அமையும் என்பதில் வியப்பில்லை. போதனாமொழியைத் தீர்மானிப்பதிலும், அரசியல்ரீதியாக மட்டும் நோக்கும் போது, குறிப்பாக பல்லின, பல மொழிச்சமூகங்கள் வாழும் நாட்டில் பிரச்சனைகள் எழுகின்றன.

இலங்கைப் பாடசாலைகளில் தற்போது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் போதனாமொழிகளாக உள்ளன. அதேவேளை "நமது நாட்டின் வரலாற்றின் கல்வி முறையில் தாய் மொழி பெறவேண்டிய இடம் இது வரை வரையறுக்கப்படவில்லை" என்னும் கல்வியியலாளர்களின் கூற்று நோக்கற்பாலது. முதல்மொழி, கல்விமொழி என்னும் பதங்கள் தாய்மொழி என்னும் பதத்திற்கு ஒத்தகருத்துள்ளவை அல்ல.

ரூசோ :

தலைசிறந்த இயற்கைவாதியும், கல்விச்சிந்தனைப் புரட்சியாளரும் ஆகிய ரூசோ கலைத்திட்டத்தில் மொழிக்கு இடமளிக்கவில்லை. "பிள்ளையின் இயல்பும் விருத்தியும் அதன் கல்வியில் முக்கிய அம்சமாகும்", " பிள்ளையின் வாழ்விலும், அதன் அனுபவங்களிலுமே அதன் கல்வியடங்கியுள்ளது". என்னும் கருத்துக்களை முன்வைத்த ரூசோ பிள்ளைக்கு வெற்றுரைகள் மூலம் கற்பிக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டார் மேலும் "நேரடி அனுபவங்களே சிறந்த கல்வியாகும்; குழந்தைகள் தாமே சிந்தித்து அறிவு வளத்தைப் பெருக்க வேண்டும்" என்றும் கூறியுள்ளார். சிந்தனைக்கு மொழி அவசியம்; அதுவும் தாய்மொழியே சிந்தனைக்குப் பெரிதும் உதவும் என்பது உளவியல் சார்ந்தகருத்து. அந்த வகையில் ரூசோவும் தாய்மொழியே போதனாமொழி, சிந்திக்கும் மொழி, அனுபவம்பெறும் மொழியாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுள்ளார் என்று கூறலாம். இயல்பான பிள்ளை வளர்ச்சியைப் போஷிப்பது தாய் மொழியே. கல்வியின் ஊடக மொழியாகத் தாய்மொழி அமைவதே இயற்கையானதும் இயல்பானதும் என்பதை மொழியொன்று தேவையென்பதைக்கருதும் பட்சத்தில் ரூசோ தாய்மொழிக் கல்விக்கே சார்பாக இருந்திருப்பார் என்பது வெளிப்படை.

ஜோன் டியூ யி :

"வாழ்க்கையே கல்வி, கல்வியே வாழ்க்கை" என்ற கருத்தை எடுத்துக்கூறிய டியூ யி அமெரிக்காவின் சிறந்த கல்வித்தத்துவ ஞானி ஆவர். தாய் மொழியே கல்வி போதிக்கும் ஊடக மொழியாக இருக்க வேண்டும் என்பது அவரது கருத்து. சமூகத்தின் குறித்த சாரத்தையும் நுகர்வையும் பெற்றுக்கொள்ளும் ஆற்றலைப் பிள்ளைக்கு வழங்குவது தாய்மொழி. மொழியானது கருத்துப் பரிமாற்றச் சாதனம் மட்டுமன்றி பிள்ளையின் அகக்காட்சி, மனவெழுச்சி, ஆக்குந்திறன், ஆராயுந்திறன் என்பவற்றையும் வளர்க்கும்திறன் தாய்மொழிக்கே உண்டு. முழுமையான ஆளுமையை, தாய்மொழி மூலக்கல்வியினாலேயே மலரச்செய்ய முடியும் என்கிறார் டியூ யி. வாழும்

சமூகத்தின் திரண்ட அறிவையும், அனுபவங்களையும் தாய் மொழியூ டாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

இக்கருத்தையொட்டியே ஐக்கியநாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார நிலையம் (யுனெஸ்கோ) போதனாமொழி தாய்மொழியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. இதனை அங்கத்துவ நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. "எல்லோர்க்கும் கல்வி" என்ற தத்துவம் செயற்பாடு ஆகவேண்டுமென்றால் தாய்மொழிமூலக் கல்வியினாலேயே அது சாத்தியமாகும். பாடசாலையானது சமூகத்திலிருந்தும், சமூக வாழ்க்கையிலிருந்தும் அந்நியப்படுத்தப்படலாகாது என்பது டியூ யின் கல்விக்கருத்து. அங்கு தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் தொக்கி நிற்கிறது. சமூகவியல் கண்ணோட்டத்தில் டியூ யின் தாய்மொழிக் கல்விக்கருத்தை முன்வைத்தார்.

மகாத்மாகாந்தி :

தாய்மொழிக் கல்வியல்லாத மற்றையகல்வி அடிமைத்தனத்தை வளர்க்கும்; மனித சுதந்திரத்தை நலிவிக்கும் கருவியாகவே அமையும் என்பது காந்தியடிகளின் ஆணித்தரமான கருத்து. "மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்து ஆளுமையை அடைதலே கல்வியின் பயன்" என்பது அவரின் தத்துவ விளக்கம். இதுவே காந்தியின் ஆதாரக் கல்வித்திட்டம். இந்த தத்துவ அடிப்படையில் உருவானது. தாய் மொழிக் கல்வியே இதன் ஆதார சுருதி.

சமூகம் அனுபவங்களைச் சேகரித்து களஞ்சியப்படுத்தும் ஒரு நிறுவனம். பாடசாலை அதன் புறச் சமூகத்துடன் தொடர்புறுதல் வேண்டும். தாய்மொழியே இதற்கு உதவுகிறது. அந்நிய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கல்விமூலம் இந்திய மக்கள்மீது ஆங்கில மொழியைத் திணித்திருந்தவேளை அந்நிய ஆட்சியை அகற்ற முயன்ற காந்தியடிகளின் கல்வித் திட்டம், அதற்கு மக்களைத் தயார்செய்யும் வகையில் தாய் மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது. தாய்மொழி, போதனாமொழியாதல் மூலமே நாட்டு மக்கள் விழித்தெழுவதற்கு வாய்ப்புண்டாகும் என்றார். நம்நாட்டில், கௌரவ கன்னங்கர விசேட கல்விக்குழுவும் தாய்மொழிக் கல்வியை வற்புறுத்தியமை இந்த அடிப்படையிலேயேயாகும். ஆனால் பின்னர் வந்தவர்களின் வியாக்கியானங்கள், போதனா மொழி விஷயத்தில் தெளிவை ஏற்படுத்தவில்லை.

கார்ல்மார்க்ஸ் :

சமுதாய பொருளாதார மாற்றத்தின் விளைவாக ஏற்படக்கூடிய ஒரு வகுப்பு வேற்றுமையற்றதும் அடிமைத்தளை நீங்கப்பெற்றதும், சமத்துவம் உள்ளதும், உழைப்பின் மேன்மை உணரப்பெற்றதும், மனிதத்துவம் பேணப்படுவதுமான சமூகத்தை உருவாக்கும் கல்விமுறையையே கார்ல்மார்க்ஸ் முன்வைத்தார். புதிய கல்வி விழுமியங்கள் உதயமாயின. அத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான கல்வி தாய் மொழியில் அமைய வேண்டும் என்று கூறினார்.

கார்ல் மார்க்ஸ் மொழியை "செயல் முறை ஞானம்" என்று குறிப்பிட்டார். மொழி ஓர் இன்றியமையாத தொடர்பாடல் சாதனம். சிந்தனைக்கு மொழி அவசியம். குழந்தைப் பருவம் முதல் ஒருவருக்கு பரிச்சயமானமொழி, தாய்மொழியேயாகும். ஒருவர் வாழ்ந்து வருகின்ற சூழலிலே பயன்படுத்தப்படுவது தாய்மொழியே.

பாடசாலையில் மாத்திரம் வேற்று மொழியில் கல்வி வழங்குவது இயற்கைக்கு மாறானது. சிந்தித்தல், தெளிதல், கற்றல், தொடர்பாடல் என்பன பழக்கப்பட்ட தாய்மொழியில் நடைபெற்றால் முழுமையான விளக்கத்தையும், பயனையும் அடைய முடியும் என்பதால் தாய் மொழிக் கல்வியை வலியுறுத்தினார்.

தாய் மொழிக்கல்வி :- இலங்கை

இலங்கையில், ஆங்கிலம் போதனாமொழியாகவும், நிருவாகமொழியாகவும் இருந்த காலப்பகுதியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர். பொன்னம்பலம் இராமநாதன், ஏ.கனகரத்தினம், சி. டபிள்யூ டபிள்யூ . கன்னங்கர ஆகியோர் தாய்மொழி மூலக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வந்தனர்.

இலங்கை சட்ட சபையில் 1926இல் கௌரவ. ஏ. கனகரத்தினம், சட்டசபை உறுப்பினர் இலங்கையின் கல்வி நிலையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஓர் ஆணைக்குழு நியமிக்குமாறு முன்மொழிந்தார். அதன் பெறுபேறாக மக்றே (MACRAE) ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அக்குழு தெரிவித்த முக்கிய விதப்புரைகளில் ஒன்றாக எல்லாப் பாடசாலைகளிலும், மாணவர்களுக்கு அவரவர் தாய் மொழியில் கல்வியைப் பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

1926 இலிருந்தே கௌரவ கன்னங்கர தாய்மொழி மூலக் கல்வியின் தேவையையும், முக்கியத்துவத்தையும் உணர்த்தி வந்துள்ளார். "ஒவ்வொரு மாணவருக்கும் அவனது தாய்மொழியில் கல்வி வழங்கப்படவேண்டியது அரசின் பொறுப்பு" என்று மொழிந்தார். "மொழி அழியின் தேசமும் அழியும் " (No Language No Nation), என்பதே கன்னங்கரவின் கோஷமாக இருந்தது.

" ஒரு பிள்ளையின் பல்துறை வளர்ச்சிக்கு உரிய இயல்பான மொழி அதன் தாய்மொழியேயாகும். பிள்ளையின் தாயின் மொழியே, அந்தப் பிள்ளையின் பருவ உணர்வு விருத்திக்கு ஆதாரம். அதன் விவேக வளர்ச்சிக்கும் தாய் மொழியே பயன் படுகிறது". இவ்வாறு கன்னங்கர அவர்கள், 1945 இல் வெளியிட்ட "கல்வியில் தாய் மொழியின் பங்கு" என்னும் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். "மனிதனும் அவனின் நிழலும் போன்று ஒருவரின் தாய்மொழியும் ஆளுமையும் இணைபிரியாதவை" என்று (SADLER) ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்மொழி மக்களின் ஆளுமையை வளர்க்கின்றது. படைப்பாற்றலையும் விருத்தி செய்கின்றது.

பாடசாலையில் ஆசிரியரின் கருத்துக்களுடன் மாணவர்களின் உணர்வுகளும் இணைகின்றன. தாய்மொழியில் போதிப்பதனாலேயே இத்தகைய விளக்கம் கிடைக்கிறது. எப்பாடத்தையும் ஆசிரியர் கற்பிக்கும்போது போதனாமொழியிலேயே விளக்கம், அறிவுறுத்தல், செயற்பாடுகள் என்பவற்றைத் தருகிறார். போதனாமொழி தாய்மொழியாக இருப்பின் அநுகூலங்கள் அதிகம்.

"மொழியென்பது நாகரிகம், கலாசாரம், பாரம்பரியம், கலைஎழுச்சி, மொழி உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் கருவி மட்டுமன்று. அது ஓர் இனமக்களின் முழுமையான பிரதிபலிப்பு. உளவியலாளர் கருத்துப்படி மொழி அகக்காட்சி, மன எழுச்சி, ஆராயும்திறன், ஆக்குந்திறன் ஆகியவற்றை வளர்க்கும் சக்தி கொண்டது. அதிலும் இவற்றைத் தாய்மொழியே சிறப்பாக வளர்க்கும் இயல்பான மொழி

குழந்தைக்கு தாய் மொழி. குழந்தைகள் தாய்மொழி மூலமே தமது உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் தெளிவாக வெளியிட முடியும். அவர்களது படைப்பாற்றல் தாய் மொழி மூலமே வளரும். ஓர்இனமக்களின் தாய்மொழி சிதையின் அம்மக்களின் பண்பாடும் உயர் நிலையும் அழியும் நிலை உண்டாகும். தாய் மொழியே மக்களின் ஆளுமையை வளரச் செய்யும். எனவே தாய்மொழியே போதனாமொழியாக இருக்க வேண்டும். (பேராசிரியர் ப சந்திரசேகரம் - "கல்வித்தத்துவம்" 1975)

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ், முஸ்லீம் பிள்ளைகள், தமிழ்அல்லாத வேறுமொழியைப் போதனாமொழியாகக்கொள்வதற்கு "முதல்மொழி", "கல்விமொழி","வீட்டுமொழி" என்னும் பதங்கள், கல்விஅறிக்கைகள், சுற்று நிருபங்கள், கலைத்திட்டம் ஆகியவற்றில் பயன்படுத்துவதன்மூலம் வழி செய்யப்படுகின்றது. தமிழ் மொழி மூலம் கற்பதனால் தொழில், உத்தியோக வாய்ப்புக்கள், மற்றும் உயர்கல்வி. தொழிற்பயிற்சி வாய்ப்புக்கள் மிகக்குறைவு என்பதனால் வேறு அனுகூலமான மொழிகளில் ஒன்றைக் கல்விமொழியாகக் கொள்ள அவர்கள் உந்தப்படுவர்.

இந்தநாட்டின் கல்வியைவழங்குவது அரசு ஆகும். கல்விக்கொள்கை, கல்வித்திட்டமிடல், கலைத்திட்டஆக்கம், போதனாமொழியைத் தீர்மானித்தல் போன்ற கல்விவிடயங்கள் அரசின்பொறுப்பிலே இருக்கின்றன. அரசினால் நியமிக்கப்பட்ட குழுக்களே இவற்றைத்தீர்மானித்து அரசுக்குவிதப்புரைகள் வழங்குகின்றன. இக் குழுக்களில் சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதித்துவமும், பங்களிப்பும் மிகச் சொற்பம் என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பான்மையினர் எடுக்கும் கல்வித்தீர்மானங்களை, அவை தமக்குப் பாதகமாய் இருப்பினும். ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாகச் சிறுபான்மையினரின் நிலை இருந்து வருகின்றமையை சுதந்திரத்திற்கு பிந்திய கல்வி வரலாறு எடுத்துக் காட்டும்.

இவ்வேளையில் கல்வியறிஞர் கே. எச். எம். சுமதிபால - "இலங்கையின் கல்வி வரலாறு" (1796-1965) என்னும் தமது நூலில் குறிப்பிட்டுள்ள பின்வரும் பந்தியிலுள்ள கருத்தை நோக்குதல் பொருத்தமாக இருக்கும்.

"ஒரு நாட்டின் நிருவாகமொழியும் உயர்கல்விப் (நூல் சார்ந்த, தொழில் முறை சார்ந்த) போதனாமொழியும் ஆங்கிலம் ஆக இருக்க பொதுக்கல்வியை இலவசமாகத் தாய்மொழிமூலம்வழங்குதல் என்பதானது தென்னாபிரிக்க கொள்கை போன்றது" எனச் சிறப்பாக விபரிக்கலாம். இதன்பேறாக இருக்கப்போவது என்னவெனில் ஆங்கிலம் பேசும் ஒருசிறுபான்மையினர் எல்லா உயர் நிருவாக உத்தியோகங்களையும் உயர் தொழில் சார் பதவிகளையும் பெற்று வீற்றிருக்க ஏனையோர் தாய்மொழியில் கல்விகற்றதனால் குருட்டுப்பாதையில் தள்ளப்பட்டவர்களாகப் பதவிகளைப் பெற முடியாமல் தவிப்பவர்களாக கஷ்டப்படும் நிலைமையேயாகும்.

இப் பொருள்பொதிந்தகருத்துக்களை இன்றையநிலைமைகளுடன் பொருத்திப் பார்த்தால் பலஉண்மைகள் தெளிவாகும் நாட்டின் யாப்பிலும் நடை முறையிலும் ஒருமொழி, நிருவாகமொழியாக, உத்தியோகமொழியாக, வணிக மொழியாக, தொடர்பாடல்மொழியாக அந்தஸ்துப்பெற்றிருக்க வேறொருமொழி நாட்டின் ஒரு பகுதியினரின் கல்விப்போதனாமொழியாக இருப்பதனால் குறித்த அம் மொழியில் கல்வி கற்றவர்கள் உத்தியோக, தொழில் வாய்ப்புக்களில் பின்னடைவு எய்துதல் தவிர்க்க முடியாததாகும் தமிழ்மொழியில் கல்விகற்றோர் வேலைவாய்ப்புக்கள் இன்றிக் கஷ்டப்படுவதுடன் பல்வேறுநெருக்குதல்கள், அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப் படுகின்றனர்.

5.00 சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் தமிழ்மொழிமூலம் கல்வி

சுதந்திரத்திற்குப் பின்னர், ஆங்கிலத்திற்குப் பதில் தேசியமொழிகளான சிங்களமும், தமிழும் கல்விப் போதனாமொழிகளாக விளங்கி வருகின்றன.

1956 இல் சிங்களமொழி மட்டும் அரசகரும மொழியானது. முன்னர் நிருவாகத்தில் ஆங்கிலம் பெற்றிருந்த இடத்தைச் சிங்களம் பெற்றது. தமிழ் பெறவில்லை.

நாட்டின் அரசநிருவாக கருமமொழி எதுவோ அந்த மொழிமூலம் கல்வி கற்றவர்களுக்கே தொழில் வாய்ப்புகள் அதிகம்.

எழுபதுகளிலிருந்து பல்கலைக்கழக அனுமதி முறையில், மொழிரீதியான தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டது. அதனால் தமிழ்மொழிமூலம் கற்று பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவோர்களின் தொகை கணிசமான அளவு குறைக்கப்பட்டது.

இலங்கையில் தொழில், உத்தியோகம் பார்ப்பதானாலும் சிங்களமொழியைக் கற்கவேண்டியதாயுள்ளது. தமிழ்மொழிமூலம் கற்றவர்களுக்கு இது ஒரு மேலதிக முயற்சி. ஆனால் சிங்களமொழிமூலம் கற்றிருந்தால் மேலதிக மொழிகள் தெரிந்திருக்க வேண்டியதில்லை.

தமிழ்மொழிமூலம் கற்றதனால் என்ன பயன்? தாம்பெற்ற திறன்கள், அறிவு, ஆற்றல்களுக்கேற்ப வேலைவாய்ப்புக்களோ, உயர்கல்வியோ பெற்றுக்கொள்ள முடிவதில்லையே. கல்விகற்றும் சமூகபொருளாதார உயர்வினை அடைய முடிவதில்லையே? இவ்வாறான ஆதங்கம் தமிழ்மூலம் கல்வி கற்றவர்களிடையே ஏற்பட்டது.

ஆங்கில மொழிமூலம் சர்வதேசப் பாடசாலைகள், பணம்படைத்த குடும்பங்களின் பிள்ளைகளை ஈர்க்கத் தொடங்கி விட்டன.

1988 இல் தமிழ்மொழிக்கு உத்தியோகமொழி அந்தஸ்து வழங்கப்பட்டும், நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல், தாமதம் என்பன காரணமாக முன்னர் இருந்து வந்த நிலைமையில் மாற்றம் ஏதும் காணப்படவில்லை.

எந்த மொழிமூலம் கல்விகற்றால் உத்தியோக உயர்வுரீதியாக கல்வி வாய்ப்புகள் பெரிதும் உறுதி செய்யப்படுமோ அந்தமொழியில் கல்விகற்க விரும்புதல் மனித இயல்பே. தமிழ் மக்கள் இதற்கு விதிவிலக்கல்ல.

"பசிவந்திடப் பத்தும்பறந்திடும்" என்பர். அந்தப் பத்தினுள் தமிழ் மொழியுணர்வு, கலாசாரம் உள்ளிட்ட தமிழ்க் கல்வியும் அடங்கும் என்பது தெரியவரும்.

வேலைவாய்ப்புக்கும் கல்விமொழிக்கும் தொடர்பு உண்டு. தனியார்துறை வேலைவாய்ப்புக்கள் பெருகியுள்ளன. ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கே அவை கிடைக்கின்றன. அரசதுறை வேலைகள், உத்தியோகங்களே சுயமொழி கற்றவர்களுக்கு கிடைக்கின்றன. அரசதுறையில் தற்பொழுது மட்டுப்படுத்தப்பட்ட தொழில்வாய்ப்புகளே உள்ளன

சர்வதேசத் தொடர்புகள் கணனி மயப்படுதல் என்பது காரணமாகத் தனியார் துறை ஆங்கில மயப்படுத்தப்பட்டு வருகிறது. " தனியார் மயமாக்கல்," திறந்த சந்தைப் பொருளாதாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை, வெளியார் முதலீட்டை ஊக்குவித்தல் என்பன

காரணமாக அரசாங்க, கூட்டுத்தாபன வேலைவாய்ப்புகள் குறைந்து கொண்டே போகின்றன.

ஆரம்ப, இடைநிலைக் கல்வியைத் தாய்மொழியிலும், உயர்கல்வி , தொழில்சார் கல்வி, மற்றும் தொழில்நுணுக்கப் பயிற்சிகள் என்பவற்றை வேறுமொழியிலும் கற்பதே தமிழ் மாணவர்களின் தற்போதைய நிலையாக மாறி வருகின்றது. மேலும் தொழில் செய்யும் மொழியும் பெரும்பாலும் ஆங்கிலம் / சிங்களம் ஆக உள்ளது.

இந்நிலையில் ஆரம்ப, இடைநிலை வகுப்புகளில் தமிழ்மொழி தொடர்ந்தும் போதனாமொழியாக இருக்கத்தான் வேண்டுமா? என்பது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டியகட்டம் வந்துவிட்டது. ஆட்சிமொழி அந்தஸ்தை, யாப்பிலும், நடைமுறையிலும்; கல்விப்போதனாமொழி பெற்றிருக்க வேண்டும் என்ற உண்மையை அறிந்துகொள்ளுதல் அவசியம்.

குடியேற்றவாதக் கல்விமுறைமை, ஆட்சியாளரின் மத்திய கட்டுப்பாட்டைக் கொண்டிருந்ததுடன், கல்வி தொடர்பான சகல தீர்மானங்களும் பிரித்தானிய ஆட்சியாளரினாலேயே எடுக்கப்பட்டன. இக்கல்விமுறைமை குடியேற்ற ஆட்சியாளரின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், குடியேற்றவாதத்தை நிலை நாட்டுவதற்கும் பயன்பட்டது. நாட்டுமக்களின் தேவைகளையோ, அபிலாஷகளையோ நிறைவேற்றுதலைக் கவனத்திற் கொள்ளவில்லை.

தற்பொழுது தேசிய கல்விமுறைமை ஒன்று நடைமுறையில் உள்ளது. அதில் "தேசியம்" எந்த அளவிற்குப் பேணப்படுகிறது என்பது பரிசீலனைக்குரியது. தேசியம் என்பது மானுடம் நிறைந்த ஒழுக்கம். அதில் இனம், மொழி, மதம் என்ற வேறுபாடுகளுக்கு இடமில்லை.

தேசியக்கல்விமுறைமை, தேசம் முழுவதற்கும் உரியது. அது ஒவ்வொரு பிரஜையின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் எவ்வித பாகுபாடுமின்றி வழி செய்ய வேண்டும்.

தேசிய கல்விமுறைமையில் தேசியம் அல்லாதவை புகுத்தப்பட்டமையினால் கல்விப்பிரச்சனைகள் தோன்றியுள்ளன. "தேசியம்" என்பது ஒருதலைப்பட்சமான எதற்கும் எதிர்ப்பானது. பல இனங்களையும், பலமொழிகளையும் கொண்ட ஒரு நாட்டில் "தேசியம்" என்பது ஒரு போர்வையாக அமைந்துவிடல் ஆகாது.

குறிப்பிட்ட ஓர் இனமக்களினதும், மொழியினதும் கலாசார, சமய பண்பாட்டினதும் நலனிலும், வளர்ச்சியிலும் மாத்திரம் சிரத்தை கொண்டு அவற்றை பேணி வருதல் என்றில்லாமல் நீதி, சமத்துவம், நடுநிலைமை, ஐக்கியம், புரிந்துணர்வு என்னும் அடிப்படையில் எல்லோரினதும் மேம்பாட்டிற்கும்/விருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படும் பட்சத்திலே உண்மையான "தேசியம்" கல்வியில் ஒளிரும்; மக்களிடையே தேசிய ஒருமைப்பாட்டினை அக்கல்வி ஏற்படுத்தும்.

நடைமுறையிலுள்ள தேசியக் கல்விமுறைமை உண்மையில் தேசீயத்தன்மைகளைக் கொண்டுள்ளனவா? அல்லது வெறுமனே ஒரு தோற்றப்பாடா? என்பது விமர்சிக்கப்படவேண்டியது. தேசியக் கல்விமுறைமை ஒன்று அதன் உரிய கருத்தினை உணர்ந்து செயற்பட்டால் தேசத்தின் கல்விப் பிரச்சனைகள் மட்டுமல்ல தேசியப் பிரச்சனைகளும் தோன்றுவதற்கு இடமிருக்காது.

தேசிய கல்விமுறைமையில் கடந்த 45 ஆண்டுகாலப் பகுதியில் ஒரு தொடர்ச்சிப் போக்கினைக் காணமுடியாதுள்ளது. பதவிக்கு வரும் ஒவ்வொரு

அரசாங்கமும் கல்விமுறைமையில் மாற்றங்களை ஏற்படுத்தும்போது தொடர்ச்சிப் போக்கு எப்படி பேணப்பட முடியும்? உண்மையான தேசியம் எவ்வாறு மிளிரும்?

தேசியகல்வி முறைமை எவ்வாறு அமைய வேண்டுமென்பதை சகல அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும், சகல இனங்களையும்சேர்ந்த கல்விமான்களும், அறிஞர்களும் இணைந்து கலந்துரையாடி, கருத்தொருமித்து தீர்மானிக்க வேண்டும். சனநாயக நாட்டில் கல்வியை அரசியலிலிருந்து பிரித்தெடுக்க முடியாது. கல்வி சம்பந்தமான விடயங்களில் அரசியல் பங்களிப்பு (Involvement) தேவையே. ஆனால் தலையீடு (Interference) தவிர்க்கப்பட வேண்டும். அரசியலுக்காகக் கல்வியைக் கருவியாக்கி விடக்கூடாது.

மனிதபொருளாதார விருத்திகளுக்காகக் கல்வியில் முதலீடு செய்வதற்கான உதவி வழங்கும் உலகவங்கி வெளிப்படுத்தியுள்ள பின்வரும் கல்விபற்றிய கருத்து தேசிய கல்வி முறைமை ஒன்றின் முக்கிய அம்சத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

"கல்வி வாய்ப்புக்கள் பால், இனப்பின்னணி சமூக பொருளாதார அந்தஸ்து என்ற வேறுபாடுகள் இல்லாது உற்பத்தித்தன்மைகளையும் சமூக சமத்துவத்தையும் அதிகரிக்கக் கூடியவாறு வழங்கப்படல் வேண்டும்"

இக்கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்படும்வரை ஓர் உண்மையான, சகலருக்கும் நன்மை தரக்கூடிய தேசிய கல்விமுறைமை இடம்பெற முடியாது அவ்வாறாயின் தேசத்தின் ஒருமைப்பாடு, இனங்களுக்கிடையே ஐக்கியம், புரிந்துணர்வு என்பன அடையப் பெறுதலுக்குக் காலம் குறிக்க முடியாமல் போய்விடும்.

தேசிய கல்விமுறைமை, அதன் தொடர்ச்சி தொடர்பாக தேசியமட்டத்தில் இரண்டு நிறுவனங்கள் உள்ளன. ஒன்று தேசியகல்வி நிறுவகம் - 1986 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவருகிறது. மற்றையது தேசிய கல்விஆணைக்குழு - 1991 இலிருந்து செயல் பட்டு வருகிறது.

தேசிய கல்வி நிறுவகம் :

இலங்கையில் கல்வியைப் பொறுத்தவரையில், கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக இடம்பெற்று வந்தது தொகைசார்ந்த கல்விவிரிவாக்கம் ஆகும். பாடசாலைகளின் எண்ணிக்கை, மாணவர் தொகை, ஆசிரியர் தொகை, கட்டிடங்கள், தளபாடங்கள் என்பன நன்கு பல்கிப் பெருகியுள்ளன. ஆனால் கல்வித்தரம், கலைத்திட்ட விருத்தி, பாடநூல்களின் தரம், மாணவர் அடைவு, வழங்கப்படும் கல்வியின் பொருத்தப்பாடு, ஆசிரிய விருத்தி, மதிப்பீட்டு முறைகள் உள்ளிட்ட பண்புசார் விருத்தி (Quality and Relevance of Education) ஆரம்ப, இடைநிலைக் கல்வியில் அத்துணை திருப்திகரமாக ஏற்படவில்லை அதனால் கல்வியின் பண்புசார் விருத்திக்கான தேவையும், அதனை நிறைவு செய்ய உதவக் கூடிய நிறுவனம் ஒன்றின் முக்கியத்துவமும் உணரப்பட்டது. அதன் பயனாகவே 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கப் பாராளுமன்றக் கட்டளைச் சட்டத்தின்படி தேசிய கல்விநிறுவகம் நிறுவப்பட்டது. கல்விஅபிவிருத்தி - அதிலும் கல்வியின்பண்புசார் அபிவிருத்தியில் கவனம் செலுத்தி, அதனை அடைய வைப்பதே தேசிய கல்விநிறுவகத்தின் இலக்கு ஆகும். 01.01.1986 இலிருந்து, தேசியக்கல்வி நிறுவகம் ஆரம்பித்து இயங்கி வருகிறது.

அதன் குறிக்கோள்கள்:

01. இலங்கையின் கல்வி அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள், செயற்கூறுகள், நடவடிக்கைகள் என்பவைபற்றி கல்வியமைச்சருக்கு ஆலோசனை கூறல்.

02. கல்வியின் பல்வேறு துறைகளில் பட்டப்பின் கல்விக்கற்கை நெறிகளை வழங்குதல்.

03. கல்விக் குறிக்கோள்கள், அடைவுகள், அமைப்புகள், உள்ளடக்கம், கல்வி முறையியல் மற்றும் கல்வியின் சமூக பொருளாதர அம்சங்கள் உள்ளிட்ட கல்வி முறைமைபற்றி ஆய்வு செய்தல்.

04. கல்வி முறைமையில் புதியனவற்றை புகுத்தலும், கல்வி தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்துதலும்.

05. கல்வி ஆளணியினரின் தொழில்சார் அபிவிருத்தியையும், முகாமைத்துவத் திறமையை வளர்த்தலும்

06. அரசாங்கத்திற்கும் மற்றும் அங்கீகரிக்கப் பெற்ற நிறுவனங்களுக்கும். கல்வி சம்பந்தமான நிபுணத்துவ சேவையை வழங்கல்.

07 கல்வியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைதுறைப்படுத்துதல்

இந்தவகையில் கல்வி அமைச்சின் கல்விஅபிவிருத்திப் பணிகளுக்கு இந்த நிறுவகம் பொறுப்பாக இருக்கின்றது ஆரம்ப. இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்ட ஆக்கம், கற்றல் - கற்பித்தல் சாதனங்கள் கல்வித்தொழில்நுட்பம், விசேடகல்வி, ஆசிரியர்கல்வி, கல்வி முகாமைத்துவ அபிவிருத்தியும், பயிற்சியும், முறைசாராக்கல்வி, அழகியற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, தொலைக்கல்வி, ஆங்கிலக்கல்வி கணனிக்கல்வி, கல்வி ஆய்வு என்பன தொடர்பான பணிகள் இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன இவையனைத்தும் ஆரம்ப, இடை நிலைக்கல்வி அபிவிருத்தி நோக்கிலானவை.

தமிழ்மொழி, சைவநெறி, இஸ்லாம், கர்நாடக சங்கீதம், பரதம் தவிர்ந்த ஏனைய ஆரம்ப, இடைநிலைக் கல்விக்குரிய பாடநெறிகள் தொடர்பான கலைத்திட்டம், விரிவான பாடத்திட்டம், பாடநூல்கள், ஆசிரியர் கைநூல்கள் மற்றும் கற்றல் - கற்பித்தல் சாதனங்கள் என்பவற்றின் மூலப்பிரதிகள் சிங்கள மொழியில் தயாரிக்கப்படுகின்றன.பின்னர் அவை தமிழில்மொழி பெயர்ப்பு செய்யப்படுகின்றன தமிழ்மொழி பெயர்ப்புக்கள் சரியான கருத்துத் தெளிவை, மூலப் பிரதி போன்று தரக்கூடியனவாய் அமைவதில்லை. அத்துடன் பாடத்திட்டங்கள் மற்றும் கல்விச்சாதனங்கள், பாடநூல்கள் என்பவற்றின் உருவாக்கத்திலும், அவற்றைத் தயாரிப்பதிலும் தமிழ்க் கல்விமான்கள், அறிஞர்கள் ஆகியோரின் பங்குபற்றலும் ஆலோசனை வழங்கலும் மிக அரிதாக உள்ளது. மொழி பெயர்த்து அச்சிட்டு பாடசாலைகளுக்கு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

கலைத்திட்டங்களை மீளாய்வு செய்தல், உருவாக்கல், பாடநூல்களை மீளாய்வு செய்தல், புதிதாக எழுதுதல், மற்றும் கற்றல் - கற்பித்தல் சாதனங்களைத் தயாரித்தல் தொடர்பான ஆலோசனைக்குழுக்கள், எழுத்தாளர்குழுக்கள், மீளாய்வுக்குழுக்கள் என்பவற்றில் தமிழ்ப்பிரதிநிதித்துவம் மிகக் குறைவாக இருப்பதை அவதானிக் கூடியதாக உள்ளது. அதனால் தமிழ்மொழி மூலம் கற்கும் பிள்ளைகளின் தேவைகள் விருப்பங்கள் வெறுப்புக்கள், சமூகமரபு, கலாசார விழுமியங்கள் என்பவற்றை இக்குழுக்களினால் அறிந்து கொள்ள முடிவதில்லை. பல்வேறு ஆய்வு முயற்சிகள் கற்றல், கற்பித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் அத்தகைய ஆய்வுகள் நடாத்தப்படுவதற்கு வேண்டிய முயற்சிகள் மிக அரிதாகவே

எடுக்கப்படுகின்றன. அதனால் தமிழ்மொழிமூலப் பாடசாலைகளின் கல்விநிலைமைகள், சரிவர ஆய்வு செய்யப்படுவதில்லை. மதிப்பீடுகள் நடாத்தப்படுவதும் இல்லை. பாடநூல்கள் ஒவ்வொருதரத்திற்கும் எழுதப்படும் போது ஆய்வு முடிவுகள், தரவுகள் தேவைப்படுகின்றன. தமிழ்மொழிப் பாடசாலைகளில் இருந்து பின்னூட்டல்களும் பெறப்படுவதில்லை.

தேசியமட்டத்தில் நடைபெறும்கருத்தரங்குகள், செயலமர்வுகள், சேவைக் காலப் பயிற்சிகள், கூட்டங்கள் மகாநாடுகள் என்பவற்றில் மொழி காரணமாக, அவற்றில் கலந்து கொள்கின்ற தமிழ்மொழி மாத்திரம் தெரிந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கு அங்கு நடை பெறுகின்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு கருத்துப் பரிமாற்றங்கள் செய்வதிலும் நடைபெறுவனவற்றை கிரகித்துக் கொள்வதிலும் பிரச்சினைகள், சிரமங்கள் உண்டு. அதனால் பெரும்பாலான தமிழ் ஆசிரியர்கள் மௌனம் சாதித்துவிட்டு, பயன்பெறாமல் போவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தமிழ்மொழிபெயர்ப்புக்கள் பெரும்பாலும் தெளிவான கருத்துக்களைத் தருவனவாக அமைவதில்லை. பயன்படுத்தப்படுகின்ற கலைச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறாக இருக்கின்றன. மாணவர்களும் ஆசிரியர்களும் கலைச்சொற்களைப் புரிந்து கொள்வதில் சிரமப்படுகின்றனர். வினாத்தாள்களில், பாடநூல்களில் பயிற்சிகளில் ஒரு சொல்லுக்கு வெவ்வேறு கலைச்சொற் பிரயோகங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பாளர்கள், பாடநெறி சம்பந்தமான அறிவையும் பெற்றிருக்க வேண்டியது அவசியம். ஆனால் அவ்வாறு அமைவது அரிதாக உள்ளமையினால் தமிழ்மொழி பெயர்ப்புக்களில் மயக்கநிலை, தொடர்பின்மை, பாடம் சம்பந்தமான தெளிவின்மை என்பன ஏற்படுகின்றன. மூலத்தைப் போன்று மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட பிரதி இருக்கமாட்டாது என்பது எதிர்பார்க்கப்படவேண்டியதே. தமிழ்மொழி மூலம் கல்வி கற்பதில் இவ்வாறாக ஏற்படுகின்ற பிரச்சனைகள், தேசிய ரீதியில், தவிர்க்க முடியாதன போல் தோன்றுகின்றன.

அரசியல் அமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் -பின்னிணைப்பு 111 - கல்வி எனும் தலைப்பில் வரும் பகுதிகள் 8,15,19,23 என்பன மாகாணரீதியில் நிறைவேற்றக்கூடிய கல்வி அபிவிருத்திக் கருமங்கள் சிலவற்றைக்குறிப்பிடுகின்றன. அவற்றை மாகாண அதிகார சபை மேற்கொள்ளுமேயானால், முன்னர் கூறப்பட்ட சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்

08. ஆசிரியர்களுக்கும் ஏனைய கல்விசார் ஆளணியினருக்கும் பயிற்சியளித்தல் தேசிய கல்வி நிறுவகத்தின் நோக்கெல்லைக்குள் அடங்கும், மாகாண அதிகார சபைகள் தங்கள் தேவைகளை தேசிய கல்வி நிறுவகத்திற்கு அறிவிக்கும்.

15. தேசிய கல்வி நிறுவனத்தின் முன்னங்கீகாரம் கிடைக்கப்பெற்றனவான சேவைக் காலப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

19. முதனிலை பாடவிதானத்திலும், இரண்டாந்தர பாடவிதானத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடங்களிலும் உள்ளக வேறுபாடுகளுக்கு தேசியகல்வி நிறுவகத்தின் அங்கீகாரத்தைப் பெறுதல்.

23. பாடசாலைப் புத்தகங்களை அமைச்சின் அங்கீகாரத்தின் பின்னர் தயாரித்தலும் பகிர்ந்தளித்தலும்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்படி அதிகாரங்களை எந்த அளவிற்கு அவை பயன்படுத்துகின்றன என்பது ஆய்விற்குரியது. மாகாண சபைக்கு வழங்கப் பெற்ற அதிகாரங்களையாதல் பூ ரணமாகப் பயன்படுத்தி, உரிய

நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பட்சத்தில் இதுவரை எதிர் நோக்கி வந்த கல்வி தொடர்பான சில பிரச்சனைகளேனும் மறைய வாய்ப்புண்டு.

தேசிய கல்வி ஆணைக்குழு

1991 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் இவ்வாணைக்குழு நிறுவப்பெற்றது. கல்விமுறைமையின் தொடர்ச்சி ஒன்றினை ஏற்படுத்தும் வகையில் தேசிய கல்விக் கொள்கையை உருவாக்குதல் தொடர்பான விதப்புரைகளை மேன்மை தகு ஜனாதிபதிக்கு வழங்குதல் அதன் முக்கிய பணியாகும். இந்த வகையில் கலைத்திட்டங்களில், கற்பித்தல் முறைகளில், பாட உள்ளடக்கங்களில் பொருத்தமான மாற்றங்களை இவ்வாணைக்குழு சிபார்சு செய்யும். தற்பொழுது புதிய கல்விக்கொள்கையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. போதனாமொழி பற்றியும் சிபார்சு செய்யும். இந்த வகையில், தமிழ்மக்களின் பிரதிநிதித்துவம் தேவை என்பது உணரப்படவேண்டியது அவசியம். சகல இன மக்களினதும் சமூக, கலாசார, சமய விழுமியங்களையும், மரபுகளையும் பேணக்கூடிய வகையில் கல்விக்கொள்கை, கலைத்திட்டம் என்பன அமைய வேண்டியது அவசியம் ஆகும்.

பொதுப் பரீட்சைகள் :-

இலங்கைப் பரீட்சைத்திணைக்களம் ஆரம்ப, இடைநிலைக்கல்வி மாணவர்களுக்கான பொதுப்பரீட்சைகளை நடாத்துகின்றது. ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த. (சாதாரணம்), க.பொ.த.(உயர்தரம்) பரீட்சைகள் என்பன இவற்றுள் அடங்கும். தமிழ்மொழி, சைவநெறி, இஸ்லாம், ஆங்கிலம், தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கான வினாத்தாள்கள், விடைகள், புள்ளியிடும் திட்டம் என்பன சிங்கள மொழியில் தயாரிக்கப்படுகின்றன. அவை பின்னர் தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன மொழிபெயர்ப்புக்களில் உள்ள வழமையான பிரச்சனைகள் இங்கும் இருப்பதால் தமிழ்மொழி மூலப் பரீட்சார்த்திகள் பலத்த இடர்பாடுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். வினாக்கள் விளங்கா விட்டால், விடை எழுதுவது சிரமமாகும். விடயம் தெரிந்திருந்தும் வினாக்கள் தெளிவின்மையால் மாணவர்கள் பாதிக்கப்படுகினறனர். தமிழைப் போதனாமொழியாகக் கொண்டவர்கள் இறுதிப்பரீட்சைகளிலும் நல்ல பெறுபேறுகளை அடைய முடியாதுள்ளனர். வினாப்பத்திரங்களைத் தயாரிக்கும் போது தமிழ்க்கல்விமான்களும் பங்குபற்றினால் இந்த இடர்ப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

தமிழ் மொழி கற்பித்தல்

ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகளில் தமிழ் மொழி போதனா மொழியாக இருப்பதால் மாணவர்கள், தமிழ்மொழித்திறன் அடையப் பெற்றவராய் இருத்தல் வேண்டும். ஏனைய பாடங்களைக் கற்றல், கற்பித்தல், மதிப்பிடுதல் போன்ற கல்விசார் செயற்பாடுகள் தமிழ் மொழி மூலமே நடைபெறுகின்றன. தமிழ்மொழியறிவிலும் திறன்களிலும் மாணவர் நன்கு தேர்ச்சியடைந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஆளுமைவளர்ச்சி, நுண்மதிவளர்ச்சி, சிந்தனைவளர்ச்சி, கற்குந்திறன்வளர்ச்சி,

வெளிப்படுத்தும்திறன்வளர்ச்சி என்பனவற்றிற்கு ஒருவனின் மொழித்திறன் விருத்தி துணை செய்கின்றது.

தமிழ்மொழியை முறையாகக் கற்பிக்கின்ற நிறுவனம் பாடசாலையேயாகும். இன்றைய மாணவர்களின் மொழித்திறன் விருத்தி எதிர்பார்க்கும் அளவிற்கு இல்லை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழைப் பிழையின்றியும் தெளிவாகவும் பயன்படுத்தத் தெரியாதோர் தொகை கூடிக்கொண்டு செல்கின்றது. பதினொரு ஆண்டுகள் தமிழ் மொழி கற்றபின்னும் அம்மொழியில் தமது கருத்துக்களையும், எண்ணங்களையும் சரிவரத் தெளிவாக பிழைகளின்றி எழுத்து மொழியில் வெளிப்படுத்த முடியாதவர்களாகப் பலர் உள்ளமை, எமது தமிழ் மொழி கற்பித்தலில் பிழைகள் நேர்ந்துள்ளன என்பதைப் புலப்படுத்துகின்றது. இப்பிழைகள், தமிழ் மொழிப் பாடத்திட்டம், பாட உள்ளடக்கம், பாடநூல்கள், கற்பித்தல்முறைகள், கற்ற, அனுபவங்கள் ஆசிரியர்களின் தகைமைகள், மாணவர்களின் சூழல், பாடசாலை ஒழுங்காக்கம், மேற்பார்வை என்பவற்றில் ஒன்றிலோ பலவற்றிலோ ஏற்பட்டிருக்கலாம். இவற்றைக் கண்டு பிடித்து உரிய பரிகாரம் செய்யப்படுதல் வேண்டும். அல்லாவிட்டால் ஏனைய பாடங்களிலும் மொழித்திறன் குறைந்த மாணவர்களின் பெறுபேறுகள் பாதிப்புக்குள்ளாகும். கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி போன்ற பாடங்களில் மாணவர்கள் சித்தியெய்தத் தவறியமைக்கு அவர்களின் மொழித்திறன் இன்மையே பெரிதும் காரணமாகும் என்று ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன.

- தமிழ்மொழிப் பாடத்தின் ஊடாக மாணவரின் மொழித்திறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டும். அடிப்படை இலக்கணத்தை பிரயோகிக்கும் திறன் மாணவரில் வளர்க்கப்பட வேண்டும். இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் மாணவர்களைப் பங்குபற்ற வைப்பதன் மூலமும் மொழித் திறனை விருத்தி செய்யலாம்.

தமிழ்மொழிப் பாடத்திட்ட உருவாக்கத்திலும், பாடநூல் ஆக்கங்களிலும் கற்பித்தல்-கற்றல் முறைகளைத் தீர்மானித்தலிலும் பழமை பேணுபவர்கள், புதுமையாளர்கள் ஆகியோருக்கிடையில் இணக்கப்பாடின்மை, கருத்துத்திணிப்பு என்பவற்றினால் தமிழ்மொழி கற்றல்-கற்பித்தலில் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. தகைமைகள், பயிற்சிகள் பெற்ற தகுதியான தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைவாக உள்ளனர்.வேறு துறைகள் சார்ந்த ஆசிரியர்களும் தமிழாசிரியர் பற்றாக்குறைகாரணமாகத் தமிழ் கற்பிக்கின்றனர். தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களை மேற்பார்வை செய்து அவர்களுக்கு உதவுவதற்கு வேண்டிய ஆளணியினர் இல்லை. விசேட பாடங்களுக்கென கல்வியதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். தமிழ்மொழிக்கு என்று கல்வி அதிகாரிகள் கிடையாது. சேவைக் காலப் பயிற்சிகள் மற்றும் ஆசிரிய விருத்தி வாய்ப்புகளும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஏனைய பாட ஆசிரியர்களுக்கு இருப்பது போல், இல்லை. தமிழ் மொழி தெரிந்திருந்தால் யாரும் தமிழைக் கற்பிக்கலாம் என்ற பொதுவான நிலைப்பாடும் நிலைமையைப் பாதிக்கின்றது.

இன்று கற்பித்தலில், தொழில்நுட்பச் சாதனங்கள், புதிய அணுகு முறைகள், மொழி ஆய்வு கூடம், கணனியின் பயன்பாடு மற்றும் தொலைக் காட்சி, வானொலி சாதனங்கள் என்பன உலகில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.தமிழ் மொழி கற்பித்தலில், எமது ஆசிரியர்கள் எவ்வளவிற்கு இவற்றைப் பயன்படுத்துகிறார்கள் அல்லது பயன்படுத்தும் தகைமை பெற்றிருக்கிறார்கள் அல்லது ஆசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய உதவிகளைப் பெறுகிறார்கள் என்பது விமர்சனத்திற்குரியது. மாணவரின் தமிழ்மொழியறிவு, திறன்கள் என்பன நன்கு விருத்தி செய்யப்பட வேண்டும். அது போதனா மொழியாக அமைவதால் என்னும் கருத்து ஆசிரியர், மாணவரால் நன்கு உணரப்படுதல் வேண்டும்.

□

தமிழ்மொழிமூலம் கல்வி

பேராசிரியர். சோ. சந்திரசேகரன் - விரிவுரையாளர் மா. கருணாநிதி

கல்விப் போதனாபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

தமிழ்மொழியில் கல்வியைப் பூ ரணமாக அனுபவிக்கின்ற நாடுகளுள் இலங்கை முக்கிய இடம் வகிக்கிறது தமிழ்மக்கள் செறிவாக வாழும் ஏனைய நாடுகளான இந்தியா, மலேசியா, சிங்கப்பூ ர் போன்ற நாடுகளில் தமிழை கல்விமொழியாகக் கொள்வதில் சில தடைகளும் கட்டுப்பாடுகளும் உண்டு. தாய்மொழி கல்விமொழியாக இருத்தல் பற்றிய தத்துவம் மற்றும் உளவியல்பின்னணிகள் பலவாக இருப்பினும் சமூகநீதியொன்றை நிலைநாட்டுவதில் தமிழ்மொழிமூலம் கல்வி இலங்கையில் உரியஅந்தஸ்தைப் பெற்றுள்ளது. இலங்கையிலே தமிழ்மொழி அரசகருமமொழியாக அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னரே எமது கல்வியமைப்பின் சகலநிலைகளிலும் அது கல்விமொழியாக அங்கீகரிக்கப்பட்டு விட்டது ஆரம்பவகுப்புத்தொடக்கம் பல்கலைக்கழகம் வரையுள்ள கற்கைநெறிகள் எவற்றையும் தமிழ்மொழியிலே கற்பதற்கு உரிமையுண்டு. புதிதாக அறிமுகமாகிவரும் சில புதியதுறைகளை வேறு சிலமொழிகளில் கற்கவிரும்புதல் தமிழ் மொழியில் அத்துறைகளைக் கற்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்ற பொருளைத் தராது.

இலங்கையில் தமிழ்மொழிமூலம் கல்வி- வரலாற்றுப் பின்னணி

இலங்கையிலே பிரித்தானியரின் ஆட்சி உறுதிபெறத் தொடங்கியதுமுதல் ஆங்கிலமொழி அரசகருமமொழியான போது சுதேசமொழிகள் தமது முக்கியத்துவத்தை இழந்து கொண்டன. கல்விமொழியும் ஆங்கிலமொழியாகவே இருக்கவேண்டுமென 1833இல் கோல்புறூக் ஆணைக்குழுவினர் விதந்துரை செய்தனர். இதன் விளைவாக பிரித்தானிய அரசாங்கம் ஆங்கிலப்பாடசாலைகளை உருவாக்குவதில் முன்னரை விட உற்சாகம் காட்டியதுடன் பாடசாலைகளில் ஆசிரியர்களாவதற்கு ஆங்கிலமொழியிலே தேர்ச்சியும் ஆங்கிலமொழியிலே கற்பிக்கக் கூடியவர்களாக இருத்தலும் தகைமைகளாகக் கருதப்பட்டன.

ஆங்கிலமொழி அரசகருமமொழியானபோது இலங்கையிலே ஆங்கிலக்கல்வி முறைமையொன்று உருவாகி செல்வாக்குப் பெற்றிருந்தமை தவிர்க்கமுடியாததாயிற்று அந்நிருவாகத்தை நடத்துவதற்கு ஆங்கிலமொழியில் அறிவு உள்ளவர்களை உள்ளூரிலேயே திரட்டுதல் ஆட்சியாளரின் நோக்கமாய் இருந்தமையால் ஆங்கிலப் பாடசாலை முறைமையும் துரித வளர்ச்சியடைந்தது.

1867 இல் மோர்கன் ஆணைக்குழுவினர் பிரதான கல்விமொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டும் என்றும் அதேவேளையில் சிங்கள, தமிழ் மொழிகளிலும் கல்வி வழங்கப்பட வேண்டும் என விதந்துரை செய்த போது கல்வி மொழிக் கொள்கையில் இரட்டைத்தன்மை தோன்றலாயிற்று. இக் கொள்கையின் விளைவாக

சுயமொழிப்பாடசாலைகளைவிட ஆங்கிலமொழிப் பாடசாலைகளும், இருமொழிப் பாடசாலைகளும் விரைவிலே அதிகரித்துக் கொண்டன. இருமொழிப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் சுயமொழிக்கல்வியும் உயர்நிலையில் படிப்படியாக ஆங்கிலமொழியிலும் போதனை இடம்பெறலாயிற்று.

சுயமொழிகள் போதனாமொழியாக அறிமுகம் செய்யப்பட்ட போதும் தமிழ்மக்களும் சிங்களமக்களும் தமது சமூக பொருளாதார நன்மைகருதி ஆங்கிலமொழியிலேயே கல்விகற்க விரும்பினர் என்றும், பொருளாதார நன்மைகள் உத்தியோக அந்தஸ்து என்பவற்றையும் பெறும் போராட்டத்தில் இந்நாட்டு மக்கள் தமது தனித்துவத்தையும் சுயகௌரவத்தையும் நீண்ட காலமாகப் பேணிவந்த பாரம்பரியத்தையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1945 ஆம் ஆண்டளவில் இலங்கையின் கல்விநிறுவனங்களை நிருவகிக்கும்பொறுப்பு பெரும்பாலும் மிஷனரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த வேளையில் ஆங்கிலப் பாடசாலைகளுக்கு நன்கொடைகளையும் வழங்கிவந்தது. இந்நிலைமையில் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. ஆயினும் அக்கால கட்டத்தில் கல்விகற்போர் தொகையில் 11சதவீதத்தினர் மட்டுமே ஆங்கில மொழியிலும் ஏனைய 89 சதவீதத்தினர் சுயமொழிகளில் கற்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சுயமொழிக் கல்வி இலவசமாகவும், எண், எழுத்து, வாசிப்பு ஆகிய அம்சங்களில் அடிப்படை அறிவை மட்டும் வழங்கியமையாலும், சுயமொழிக்கல்வியைப் பெற்றவர்களின் சமூக அந்தஸ்து குறைவாகவே இருந்தது.

கல்விமொழி தொடர்பாக நிலவிய வேறுபாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டன. 1943 இல் விஷேட கல்வி ஆணைக்குழு இலவசக்கல்வித் திட்டத்தை விதந்துரை செய்த காலகட்டத்தில் ஆரம்பப் பாடசாலைகளின் கல்விமொழி தாய்மொழியாக இருக்க வேண்டும் என்றும் ஆங்கிலம் கல்விமொழியாக இருக்க வேண்டும் என்றும் ஆங்கிலம் கல்விமொழியாக இல்லாதபாடசாலைகளில் ஆங்கிலமொழியைக் கற்பிக்கவேண்டும் என்றும் தெரிவித்தனர். இலவசக்கல்வி, தாய்மொழிக்கல்வி என்பவற்றின் அறிமுகம் கல்வித்துறையில் நிலவிய சமவாய்ப்பின்மையைப் போக்கவும், சமூக, வகுப்பு வேறுபாடின்றி எல்லோரும் உயர்கல்வியைப்பயிலும் வாய்ப்புகளை உண்டாக்கும் நோக்கைக் கொண்டிருந்தன.

1950 களில் படிப்படியாக ஆரம்பவகுப்புகள் இடைநிலை வகுப்புகளில் தமிழ் சிங்கள மொழி மூலம் போதனை ஆரம்பமாயிற்று. 1957 ஆம் ஆண்டில் க பொ. த. (சா/த) வகுப்பிலும் 1959இல் க.பொ.த (உ/த) வகுப்பிலும் சுயமொழிப்போதனை ஆரம்பிக்கப்பட்டது பல்கலைக்கழக மட்டத்தில் கலைத்துறைப் பாடங்கள் 1960 இல் தமிழ், சிங்களமொழிகளில் கற்பிக்கப்படத் தொடங்கின 1970 களில் பாடசாலை உயர்நிலைக் கல்விநிலையில் விஞ்ஞானம் சுயமொழிகளில் கற்பிக்கப்படலாயிற்று. இன்று பல்கலைக்கழக அனுமதி பெறும் கலை, விஞ்ஞானம் மற்றும் சகலதுறை மாணவர்களும் தமது பாடசாலைக்கல்வியைச் சுய மொழிகளில் பயில்பவர்களாவர்.

தமிழ்மொழியில் உயர்கல்வி

பொதுவாகப் பல்கலைக்கழகக் கல்வியும் ஏனைய மூன்றாம்நிலைக் கல்வியும் உயர்கல்வி என்றவகையில் அடக்கப்படுகின்றன. ஆயினும் இக்கட்டுரையில் கல்லூரி நிலைக்கல்வி பல்கலைக்கழககல்வி ஆகியன விஷேடகவனத்துக்கு உட்படுகின்றன.

1921இல் இலங்கையில் ஆரம்பித்துவைக்கப்பட்ட பல்கலைக்கழகக்கல்லூரி இலண்டன் பல்கலைக்கழகக் கலை மற்றும் விஞ்ஞானமாணிப்பட்ட இறுதிப் பரீட்சைக்கு

மாணவர்களை ஆயத்தம் செய்தது. இலங்கையின் முதல் பல்கலைக்கழகம் 1942 இல் பேராதனையில் கீழைத்தேயக் கற்கைநெறிகள், கலை, விஞ்ஞானம் மற்றும் மருத்துவப் பீடங்களுடன் ஆரம்பித்துவைக்கப்பட்டது. பின்னர் காலத்துக்கு காலம் உருவாக்கப்பட்ட உயர்கல்விச் சட்டங்கள் பல்கலைக்கழகக்கட்டளைச் சட்டங்கள் மூலம் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படலாயின. இப் பல்கலைக்கழகங்கள் யாவும்பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளையும் வளர்ச்சியடைந்துவரும் பல்வேறு புதியதுறைகளையும் போதிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

உயர்கல்வி நிறுவனங்களிலும் போதனாமொழி தொடக்ககாலத்தில் ஆங்கிலமாகவே இருந்தது. ஆரம்ப இடைநிலைப்பாடசாலைகளில் போதனாமொழி தாய்மொழியாக அறிமுகம் செய்யப்பட்ட பின்னர், அதன் தொடர்ச்சி உயர்கல்வியிலும் நிலவும்போதுதான் இலவசக்கல்வியின் முழுமையானபயனும்; சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் உயர்கல்வியைக் கற்பிக்கக் கூடியவர்களும் அரசகருமங்களை ஆற்றக் கூடியவர்களும் உருவாக்கப்படுவர் என்றகருத்துகள் 1940 களிலும் 1950 களிலும் பல அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டன. இலங்கையிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் "ஆங்கிலம்" கட்டாயபாடம் என்ற வகையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் கல்வியை மீண்டும் உயர்சமுதாய அந்தஸ்துடையோரின், பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்தோரின் ஏகபோக உரிமையாக மாற்றும் என்பதே அவ்வாதமாக இருந்தது.

- 1960 களில் பல்கலைக்கழகத்தில் கலைத்துறைக்கல்வி, சுயமொழியில் விஞ்ஞானம், மருத்துவம். தொழில்நுட்பம் போன்ற துறைகளைத் தமிழில் கற்றல்/கற்பித்தலில் உள்ள பிரச்சினைகள்

தமிழ்மொழியில் உயர்கல்வி - இரண்டு பிரச்சினைகள்

(1) உயர்கல்வித்துறையில் இடம்பெறும் சகல விடயங்களையும் தமிழ்மொழியில் கற்றல்.
(2) உயர்கல்வியில் தமிழ்மொழியைக் கற்றல்.

இதில் இரண்டாவது அம்சம் ஒரு சில எல்லைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது விடயத்தைச் சற்று விரிவாகஆராயலாம். பல்கலைக்கழகங்களில் இன்று தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், மொழியியல் போன்ற பாடங்களைக் கற்போர் தொகை அருகிவிட்டது. கலைத்துறையில் பொருளியல்,புவியியல் போன்ற பாடங்களும் மற்றும் வர்த்தகவியல், முகாமைத்துவம் போன்ற கற்கைநெறிகளினையும் அதிகமான மாணவர்கள் கற்கின்றனர். இந்நிலையில் தமிழ் மொழிக்கல்வி சகல தமிழ் பேசும் மாணவர்களைப் பொறுத்தவரையில் க. பொ. த. (சா/த) நிலையுடன் முடிவடைகிறது எனலாம். இத்தகைய மொழித்தகுதியை உடையோரே இன்று அரச துறையில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவோராக உள்ளனர்.

க. பொ. த (சா/த) விற்குப் பின்னருள்ள உயர்நிலைகளில் தமிழ்மொழிக்கல்வி விரிவாக இல்லாமை மொழிச்சட்ட விதிகளை அமுலாக்குவதற்குப் போதிய மனிதவளத்தைப் பெறுவதைத் தடுக்கின்றது. அத்துடன் க. பொ. த (சா/த) பாடஏற்பாட்டு நோக்கங்கள் மாணவர்கள் தமிழை அரசகரும மொழியாக நடைமுறைப்படுத்துவர் என்பதைக் கருத்தில்கொள்ளவில்லை. இச்சட்ட ஏற்பாடுகள் புதியன. தமிழ் மொழிக்கான அரசகருமமொழி அந்தஸ்தும் புதியது. இந்நிலையில் தமிழை ஒருநிருவாகமொழி என்ற நோக்குடன் பாடசாலைகளில் கற்பிப்பது ஒரு பாட ஏற்பாட்டுக் குறிக்கோளாக அமைதல் வேண்டும். அவ்வாறே க. பொ. த உயர்நிலைக்

கற்கைநெறி, பல்கலைக்கழகத் தமிழ்மொழிப் பாடஏற்பாடு என்பன இந்நோக்கினையும் கொண்டதாய் அமைதல் வேண்டும். இந்நோக்கிற்கேற்பப் பாடவிடயமும் மாணவர்கள் பெறுகின்ற தமிழ்மொழிப் பயிற்சியும் மாற்றங்களை காணுதல் வேண்டும். இத்தகைய பாடஏற்பாட்டு ஒழுங்குகள் நிருவாகமொழி என்ற முறையில் ஒரு புதியபாரம்பரியத்தை உருவாக்குவதற்கு உதவும். காலப்போக்கில் தமிழ்மொழி ஒரு நிருவாகமொழியாக உருவாகும் என்பதைவிட, உயர்கல்வித்துறையினூடான பயிற்சியின்மூலம் தமிழ்மொழியைத் துரிதமாக ஒரு நிருவாகமொழியாக ஆக்கிவிட முடியும் என்பது எமது கருத்து.

மற்றொரு முக்கிய விதந்துரை இந்தியா,ஐக்கியஅமெரிக்கா போன்ற நாடுகளைப் போன்று தமிழ்மொழிப் பாடம் ஒரு கலைத்துறைத் தெரிவுப்பாடமாக மட்டுமன்றிச் சகல போதனாபீடங்களிலும் சகல மாணவர்களுக்குமுரிய ஓர் இணைப்பாட ஏற்பாட்டு அம்சமாகக் கொள்ளப்படல் வேண்டும்.அரசாங்கத்தின் புதிய கல்வி ஆலோசனைகளின்படி மொழிப்பாடம் சகல க. பொ. த (உ/த) மாணவர்களுக்கும் பொதுப்பாடமாக கற்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. க. பொ. த (உ/த) பல்கலைக்கழகநிலை ஆகியவற்றின் மொழிப்பாட ஏற்பாட்டின் நிருவாகமொழிக்குரிய அம்சங்கள் (சொற்கள், சொற்தொடர்கள் போன்றன) இடம் பெறுவதும் விரும்பத்தக்கது.

மேலும் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய மூன்றாம்நிலைக்கல்வி நிலையங்களிலும் (தொழில்நுட்பக்கல்லூரி, தொழிற்கல்வி நிலையங்கள்) இத்தகைய ஏற்பாட்டை பின்பற்றுதல் பயன் தரும். பல்கலைக்கழக நிலையில் தமிழ்மொழிமூலக் கல்வியைப் பொறுத்தவரையில் சில குறைபாடுகளை எடுத்துக் கூறல்வேண்டும்.

1. தமிழ்மொழி மூலம் பயிற்சி நெறிகள் (கலை, முகாமைத்துவம், வர்த்தகவியல், சட்டம்) செம்மையாகவும் உயர்ந்த தராதரங்களுடனும் நடாத்தப்பட்டால் மட்டுமே தமிழ் மொழியில் நிருவாகத்தைத் திறம்பட நடத்தக்கூடிய மனிதவளத்தைப் பெற முடியும். ஆயினும் இன்று பல்கலைக்கழகத் தமிழ்மொழி மூலக்கல்வியில் இச்சிறப்பு அம்சங்கள் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன.

2. இப்போதனா பீடங்களில் பாடத்துறைகள் ஏராளமாக உண்டு. அப்பாடத்துறைகளுக்குப் பல துணைப் பிரிவுகளும் உண்டு. எடுத்துக்காட்டாகக் கல்வியியலை நோக்கினால் அதில் 10 பாடப்பிரிவுகளையாவது இனங்காணமுடியும் அவ்வாறே பொருளியலில் பலதுறைகளை இனங்காணமுடியும். (1) இவ் அறிவுத்துறைகள் இன்று மிகவும் விரிந்துசெல்வதால் புதிய துணைப்பாடப் பிரிவுகளும் உருவாக இடமுண்டு. ஆனால் வெவ்வேறு பாடத்துறைகளைக்கற்பிக்க ஒவ்வொரு பாடத்துறைக்கும் சிறப்புத்தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவதில்லை. ஆளணிவிதிகளின் படி 15 மாணவர்களுக்கு ஒரு விரிவுரையாளர் மட்டுமே என்பதால் 30 மாணவர்களுக்கும் பத்துக்கு மேற்பட்ட பாடங்களைக் கற்பிக்க இரு ஆசிரியர்களே நியமிக்கப்படலாம். இதனால் தமிழ்மொழி மூல மாணவர்கள் போதிய ஆசிரியர்களைப் பெறுவதில்லை.

3 பல்கலைக்கழகத் தமிழ்மொழிமூல விரிவுரையாளர்களைப் பதவி அந்தஸ்து அடிப்படையில் நோக்குமிடத்துக் கனிஷ்டநிலையிலுள்ள விரிவுரையாளர்களே 75 சதவீதமான கற்பித்தலைச் செய்யவேண்டிய கட்டாய நிலையுண்டு. சிரேஷ்டநிலையிலுள்ள விரிவுரையாளர்களின் தொகை மிகக்குறைவு. இவ்விடத்துத் தமிழில் பொருளாதாரம், சமூகவியல்,மானிடவியல், கல்வியியல், போன்ற துறைகளை ஆராயவும் கற்பிக்கவும் ஒரு சிலரேயுள்ளனர். சிலதுறைகளில் ஓரிரு சிறப்பறிஞர்களைக்கூட இனங்காண முடிவதில்லை. எடுத்துக்காட்டாக சமூகவியல்,மானுடவியல்.

1.கல்வியியல்; ஒப்பீட்டுக்கல்வி, கல்விஉளவியல், அளவீடு, தத்துவம், நிருவாகம், திட்டமிடல், முறையியல், சனத்தொகைக்கல்வி, கல்விச்சமூகவியல், சுற்றாடல்கல்வி, கல்வி வழிகாட்டல், ஆரம்பக்கல்வி

இலங்கையின் பல்கலைக்கழக அமைப்பில் ஒரு முக்கியபோக்கினைக் காண முடிகின்றது. ஒரு காலத்தில் சகல வளங்களும் நிறைந்த தேசியபல்கலைக்கழகங்களில் கணிசமான அளவில்பயின்று அவ்வளங்களைப் பயன்படுத்தி நன்மையடைந்தனர். ஆனால் இன்று தமிழ்ப்பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள் வளம் குன்றியனவாய் செயல்பாடற்றனவாய்க் காணப்படுகின்றன. மொத்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களில் 90 சதவீதமானவர்கள் இப்பல்கலைக்கழகங்களில் பயிலுகின்ற நிலையில் அவர்களுடைய உயர்கல்வி வீழ்ச்சியுற்ற நிலையிலேயேயுள்ளது. சிறந்தகல்வி வளங்களையும் கல்விப்பாரம்பரியத்தையும் கொண்ட தேசியப்பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி மூல மாணவர்கள் தொகை மிகவும் குறைவு. அங்கும் கூட தமிழ் மொழி மூலப் பயிற்சிநெறிகள் பிறர் தயவிலேயே நடைபெற வேண்டியுள்ளது. வளங்களையும் வசதிகளையும் கேட்டுப்பெறுவதிலும் பிரச்சினைகள் உண்டு. இந்நிலையில் தமிழ்மொழிமூலம் பயிற்சிநெறிகள் நாடளாவியரீதியில் வீழ்ச்சியடைந்தமைக்கான அறிகுறிகளே தென்படுகின்றன. இத்தகைய உயர்கல்விமுறையிலிருந்து வினைத்திறன் மிக்க நிருவாகிகளைப் பெறமுடியும் என்பது சந்தேகத்துக்குரியது. நிருவாகமொழியாகத் தமிழை நடைமுறைப்படுத்த தேர்ச்சியுடைய மனிதவளத்தை இன்றைய பல்கலைக்கழக முறை வழங்குவதில்லை இது முக்கிய தடையென்பதே எமதுகருத்து.

இன்று தமிழ்மொழி நிருவாகமொழியாகியுள்ள நிலையில் இக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மனிதவளத்தைக் கல்விமுறையே வழங்குதல் வேண்டும். ஆயினும் இம்மனிதவளத்தைச் சிறப்புறப்பயிற்றுவோரைப் பயிற்றத்தேவையான கல்விக்கொள்கைகளையும் ஏற்பாடுகளையும் பற்றித்தீர்மானம் மேற்கொள்கின்ற அதிகார பீடங்களில் போதிய தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லை என்பதை மனங்கொளல் வேண்டும் இப்பணியைச் செய்கின்ற ஒரு சில தமிழ்மொழிபேசும் பிரதிநிதிகள் இவ் அம்சத்தில் கூடிய அக்கறை செலுத்துதல் வேண்டும் பிராந்திய ரீதியான கல்விக்கொள்கை உருவாக்கத்தில் வினைத்திறனுடன் பணியாற்றக் கூடியவர்களை உயர் கல்விமுறையே உருவாக்கவேண்டும்

இன்று தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் பல நவீனதுறைகளில் உயர்மட்டப் பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன இவை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் வழங்கப்பட்டால் மட்டுமே தமிழ் பேசுவோர் பயனடைய முடியும்; அவர்களால் தமிழ்மொழி அமுலாக்கத்தினால் நன்மை பெறமுடியும். ஆயினும் இவை ஒரு மொழியில் மட்டுமே நடாத்தப்படுவதைச் சுட்டிக்காட்ட வேண்டும் எடுத்துக் காட்டாக சமுதாய அபிவிருத்திப்பட்டப்பின்படிப்பு, கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும், உளவியல் பரீட்சைமுறைகள், பட்டப்பின்படிப்பு முதலியவற்றைக் கூறலாம்

சகல பல்கலைக்கழகங்களிலும் பயிலும் மாணவர் தொகை ஏறக்குறைய 30,000 பேர். இவர்களில் தமிழ்பேசும் மாணவர்தொகை எறக்குறைய 7500 ஆக இருத்தல் வேண்டும் (முஸ்லீம்மாணவர் உட்பட 25 சதவீதம்) ஆயினும் எமது கணிப்பீட்டின்படி சகல பல்கலைக்கழகங்களிலும் உள்ள தமிழ்மொழிமூலம் மாணவர்தொகை ஏறக்குறைய 4500-5000 பேர் உள்ளனர். இனவிகிதாசாரத்துக்கு மிகக்குறைவான இத்தொகை தமிழ்பேசும் பட்டதாரிகள் அதிக அளவில் நிருவாகசேவையில் சேர்வதைத் தடை செய்கின்றன.

தற்போது மீண்டும் உயர்கல்விநிலையில் குறிப்பாக கலை, வர்த்தகவியல் துறைகளில் புதிதாக ஆங்கிலமொழி பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றை பயிலும் மாணவர்கள் அரசநிருவாகத்துறையில் சேரும்போது தமிழ்மொழி அமுலாக்கம் பின்னடையும் வாய்ப்புண்டு. இவ்வாறு பயில்வோருக்கும் தமிழ்மொழியை இணைப்பாடவிதானப் பாடமாக சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

மானிய. ஆணை குழு இவ்வாறான புள்ளிவிபரத்தை விபரமாகத் தருவதில்லை.

இவ்விடத்து மற்றொரு முக்கியகருத்தைக் கூற வேண்டும். இன்றிருக்கின்ற பல்கலைக்கழக அமைப்புக்குள் கணிசமான தமிழ்மொழிமூல மாணவர்கள் அனுமதி பெறவேண்டும் என்பது எமது தமிழ் மொழிமூல நிருவாகசேவை வளர்ச்சிக்கான ஒரு முக்கிய நிபந்தனை. தமிழ்மாணவர் அனுமதி விபரங்களை நோக்குமிடத்து அனுமதி பெறும் மாணவரில் கணிசமானவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தவராவர். இன்று தமிழ் மாணவர் அனுமதியில் ஏற்பட்டுள்ள படிப்படியான வீழ்ச்சிக்குக்காரணம் யாழ்மாவட்ட மாணவர்களின் பெறுபேறுகளில் ஏற்பட்டு வருகின்ற வீழ்ச்சியாகும்.

எமதுநோக்கில், இலங்கையின் சகல பல்கலைக்கழக வளங்களைத் தமிழ் மக்கள் குறைந்தளவிலான வீதத்தையேனும் அடிப்படையில் பயன்படுத்திப்பயனடைய யாழ்மாணவர்களின் பெறுபேறுகளே முக்கியமானவை. அவர்களுடையசிறந்த சித்தி இல்லையேல் தமிழர்களின் பல்கலைக்கழகப்பிரதிநித்துவம் மிகவும் கீழ் நிலைக்கு வர வாய்ப்புண்டு.

21 ஆம் நூற்றாண்டை எதிர் கொள்வதற்கான ஆலோசனைகள்:

- பல புதிய துறைகள் அறிமுகம் செய்யப்படல் வேண்டும்.
- நவீன அறிவுத்துறையைப் போதிக்கக்கூடிய அளவுக்கு புதியசொல்லாக்கம் பயன்பாடு துரிதப்படல் வேண்டும்.
- வேற்றுமொழி நூல்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும். Eg . Japan Translation Culture.
- தமிழ்மொழியுடன் ஏனைய மொழிகளிலும் பாண்டித்தியம் பெறக்கூடிய நிலை உருவாதல் வேண்டும்.
- அறிவுத்துறையில் உண்டாகும் புதியபரிமாணங்களுக்கு ஏற்ப தமிழ்மொழி மூலக் கல்வியமைப்பு மாறவேண்டும்.

தமிழ் மொழிப் பிரயோகம்

தொழிற் கல்வித்துறை

வெ. சுந்தரலிங்கம்
பகுதித்தலைவர், தொழில் நுட்பக்கல்லூரி, திருகோணமலை

இன்று இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் மொழிப்பிரயோகம் தொழில் நுட்பக்கல்வியில் ஒரு பின்னடைவினை எய்தியிருப்பது பெரிதும் மனம் வருந்தத்தக்கதொன்றாகும். தொழிற்கல்வியானது தமிழ்பேசும் மக்களிடையே பல்வேறு மட்டத்தில் விருத்தியடையாமல் இருப்பதற்கு தொழில்நுட்பம்சார் தமிழ்சொல் வழக்குகளும் தேவையான தமிழில் எழுதப்பட்ட தொழில்நுட்பக் கல்விக்கான புத்தகங்களும் அரிதாக இருப்பதுடன் தமிழ்மொழிப்பிரயோகமானது தொழிற்கல்வி நிறுவனங்களிலும், வேலைத்தளங்களிலும் பிரயோகம் செய்யப்படாமையும் முக்கிய காரணங்களாகும்.

இன்றைய நவீன உலகில் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளும், தொழில்நுட்பத்தில மிகுந்த நாட்டம் காட்டி வருகின்றன. புதியதொழில்நுட்பங்களை கண்டுபிடித்தலும் ஏற்கனவே கண்டுபிடித்த தொழில்நுட்பங்களை நவீனமயப்படுத்தலும் இதில் அடங்குகின்றன. இந்தவகையில் இலங்கையும் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏனைய நாடுகளுக்கு இணைவாக போட்டியில் வளர வேண்டிய கடப்பாடு பெற்றிருக்கின்றன

இதனை அடிப்படையாகக்கொண்டு தற்போது ஆட்சியில் இருக்கும் இலங்கை அரசாங்கம் 2000ம் ஆண்டுகளுக்கு முன் கைத்தொழில் துரித வளர்ச்சி -அதனுடன் கூடிய தொழில்நுட்ப வளர்ச்சி -இதன் பிரகாரம் வேலை வாய்ப்பினை வழங்கி வேலையில்லா ஆட்படையினரைக் குறைத்தல் என்ற கொள்கையினைக் கொண்டு முழு மூச்சுடன் செயற்பட்டு வருகின்றது.

இலங்கையில் கைத்தொழில் வளர்ச்சிக்கு தொழில் நுட்பக்கல்வியானது மிகவும் அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது. இத் தொழிற் கல்வியைப் புகட்டுவதற்கு பல்வேறு பட்ட நிறுவனங்கள் இலங்கையில் காணப்படுகின்றன.

- தொழில்பயிற்சித் திணைக்களம், இதன்கீழ் தொழில்நுட்பக்கல்லூரிகள் இயங்குகின்றன
- உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.
- தொழில்பயிற்சி அதிகாரசபை
- தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (N. A. I. T. A)
- நிர்மாணப் பயிற்சியளிப்பு , அபிவிருத்திக்கான நிறுவனம் (I. C. T. A. T)

இவற்றைவிட வெளிநாட்டுநிறுவனங்களும் தொழில்நுட்பப் பயிற்சியை இலங்கையில் வழங்கி வருகின்றன (உ ம்) கனடிய உலகபல்கலைக்கழக சேவை (டபிள்யூ யூ எஸ். சீ) இன் நிறுவனம் பல்வேறுபட்ட தொழில் பயிற்சிகளை குறிப்பாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நடாத்தி வருகின்றது.

- பொறியியல்துறை (ENGINEERING)
- வணிகத்துறை (COMMERCE)
- தொழில்துறை (TRADE)

மேற்கூறப்பட்ட துறைகளாவன சிங்களமொழி, தமிழ்மொழி போன்ற மொழிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சிங்களமொழியைப் பொறுத்தவரையில் போதிய அளவு தொழில்நுட்பக் கலைச் சொற்கள் அடங்கிய அகராதி காணப்படுவதுடன் தொழில்நுட்பக் கல்விக்கான புத்தகங்களும் உள்ளன. ஆனால் தமிழில் அவ்வாறு காணப்படுவதாக இல்லை. மிகக் குறைவாகவே தொழில் நுட்பச் சொல் வளங்கள் அடங்கிய கலைச்சொற்கள் அகராதி (GLOSSARY OF TECHNICAL TERMS) காணப்படுகின்றது. இவ்வாறு காணப்படுவதற்கு கடந்தகாலங்களின் தொழில் நுட்பக்கல்வி வளர்ச்சியானது மிக மந்தமாக இருந்து வந்துள்ளது. காரணம் யாதெனில் நீண்ட காலமாக இலங்கை ஓர் விவசாய நாடாக இருந்தமையேயாகும். காலப்போக்கில் பெருந்தோட்ட விவசாய துறை வீழ்ச்சியடையத் தொடங்கியதும் அதனை ஈடுசெய்வதற்கு கைத்தொழில்துறையானது வளர்ச்சியடைய வேண்டிய நிலை ஏற்படத்தொடங்கியது. இதன் பிரகாரம் தொழில்நுட்பக் கல்விக்கு புத்துயிர் அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் ஏற்படலாயிற்று. இந்த வகையில் தமிழ் மொழியில் தொழில் கல்வியானது வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஒரு சில தொழில் நுட்பக்கல்லூரிகளிலே ஆரம்பிக்கப்பட்டது.

- தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம் (1958)
- தொழில்நுட்பக் கல்லூரி சம்மாந்துறை (1974)
- தொழில்நுட்பக் கல்லூரி மட்டக்களப்பு (1983)
- தொழில்நுட்பக் கல்லூரி திருகோணமலை (1993)

இலங்கையின் தொழில்நுட்பக் கல்வியானது முதன் முதலாக 1893ல் கொழும்பில் இலங்கையின் தொழில்நுட்பக் கல்லூரியோடு ஆரம்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இரத்மலானை போன்றபல்வேறு பட்ட சிங்களப் பகுதிகளில் தொழில் நுட்பக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு அங்கு சிங்கள மொழியில் போதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் தொழில்நுட்பக் கல்வியானது இலங்கையில் தொழில் நுட்பக் கல்வி ஆரம்பிக்கப்பட்டு 65 ஆண்டுகளுக்கு பின்னர் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரியில் 1958 ஆம் ஆண்டு தான் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இன்று தொழில்நுட்பக் கல்லூரிகளில் தமிழ்மொழிப்பிரயோகம் பின்னடைவில் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இது தமிழில் தொழிற்கல்வி கற்கும் மாணவர்களுக்கு தற்போது பெரும் சிரமத்தை ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்று அனேகமாக தொழிற்கல்விக்குப் பாவிக்கப்படும் புத்தகங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இருப்பதுடன் அவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய்ப்படுகின்றது. மாணவர்களைப் பொறுத்தவரையில் ஆங்கில அறிவு பற்றாக்குறையினால் இப்புத்தங்களை வாசித்து விளங்கிக் கொள்வதும், விளங்கிய விடயங்களைத் தமிழில் மொழிப்படுத்துவதும் சிரமமாக இருக்கின்றது. காரணம் என்னவெனில் தமிழில் போதிய தொழில் நுட்பக்கலைச் சொற்கள் அடங்கிய அகராதி காணப்படாமையேயாகும். இதன் விளைவாக தமிழில் தொழிற்கல்வி கற்கும் மாணவர்களின் திறமைகளை முன்கொணர்வது பெரும் சிரமத்தை ஏற்படுத்துகின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள தொழில் நுட்ப கலைச்சொற்கள் அகராதிகள் தேசிய மொழித் திணைக்களத்தினால் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. ஆனால் தற்சமயம் அவை கிடைப்பதில்லை காரணம்.

- மீள் பதிப்புக்கள் செய்யாமை
- பிரயோகப் பற்றாக்குறை.

இப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு தொழிலநுட்பக் கலைச் சொல் அகராதிகள் மீள் பதிப்பு செய்யப்பட்டு அவற்றின் அறிமுகம் பரவலாக்கப்பட வேண்டும்.

இன்று தொழிற்கல்வியை கற்பதற்கு ஒருசில நூல்கள் மாத்திரம் தனிப்பட்ட சிலரினாலும், அரசாங்கத்தினாலும் தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றன. அரசாங்க வெளியீடானது மாணவர்களுக்கு தொழிற்கல்வியின் அடிப்படை அறிவினை மட்டும் புகட்டுவதற்கு உகந்ததாகும். இதேவேளை இப்புத்தகங்கள் ஆசிரியருக்கு ஒரு வழிகாட்டியாக அமைகின்றதே தவிர அவர்களின் தொழிற் கல்வி வளர்ச்சிக்கு போதுமான அறிவினை வளர்த்துக் கொள்ளுவதற்கு விரிவானதாகவில்லை. எனவே இப்புத்தகங்களின் தரத்தை மேன் மேலும் உயர்த்துவதற்கும் புதிய கண்டுபிடிப்புக்களை தொழிற் கல்வியில் புகுத்துவதற்கும் தமிழ்மொழி ஆக்கத்துக்கு தொழில்நுட்பக் கலைச்சொற்கள், அகராதிகள் விரிவடைய வேண்டும். இதன்மூலம் தொழில்நுட்பக் கலைச்சொற் களஞ்சியமும் உயர்வடைய ஏகப்பட்ட புத்தகங்களை தொழில் நுட்பத்தில் ஆர்வங்கொண்ட தமிழ் விற்பன்னர்கள் எழுத முன் வருவர். இதன் காரணமாக தமிழில் போதுமான தொழில்நுட்பக்கல்விக்கான நூல்களை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். தமிழில் தொழிற் கல்வி கற்கும் மாணவர்கள் தாமாகவே தமது அறிவினை பிறரின் உதவியின்றி பெற்றுக் கொள்வதற்கு இப்புத்தகங்கள் வழி வகுக்கும்.

இது இலத்திரனியல் உலகமாகும் (ELECTRONIC WORLD) பெரும்பாலான விடயங்களில் இலத்திரனியல் பாவிக்கப்படுகின்றது இதனை கற்க விரும்பும் ஆர்வமுள்ள மாணவர்கள், இலத்திரனியல் தொடர்பானபுத்தகங்கள் யாவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருப்பதனாலும் அவற்றிற்கு தமிழ்ஆக்கம் இல்லாதகாரணத்தினாலும் கற்பதற்கு முன்வருவதில்லை ஆனால் அதேவேளை ஆங்கிலத்தில் இலத்திரனியல் சம்பந்தப்பட்ட விடயங்களை கற்றமாணவர்கள் தாம்படித்தவற்றை தமிழில் நடைமுறைப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றனர் காரணம் இதற்கு போதிய தொழில் நுட்பச் சொற்களஞ்சியம் தமிழில் காணப்படுவதில்லை. குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நவீன தொழில்நுட்பவளர்ச்சி பற்றிய எல்லாவிடயங்களும் ஆங்கிலத்திலேயே வெளியிடப்பட்டு வருகின்றன அவற்றின் தமிழ்மொழிப் பிரதியாக்கங்கள் உடனுக்குடன் வெளியிடப்பட வேண்டும் இவற்றிற்கு தொழில் நுட்பக் கலைச் சொற்கள் அகராதிகள் இன்றியமையாது தேவைப்படுகின்றன

தமிழ்மொழிமூலம் தொழிற்கல்வி, பயிற்சிநெறிகள் நடைமுறைப்படுத்தப்படும் போது அவற்றுடன் சொற்பஅளவிலாவது ஆங்கிலதொழில்நுட்ப கலைச் சொற்களைப் பயன்படுத்தினால் அவ்வாறான மொழிப்பிரயோகம் பயிலுனர்களுக்கு நன்மையாக அமையும் என்பதில் ஐயமில்லை

ஜப்பான், சீனா, ஜேர்மனி, பிரான்ஸ், போன்ற பல்வேறு நாடுகள் தமது தாய் மொழி மூலமே தொழில் கல்வியினை அந் நாடுகளில் மக்களுக்கு புகட்டுகின்றன. இவை இன்றும் தொழில்நுட்பக்கல்வி வளர்ச்சியில் உன்னத நிலையை அடையவில்லையா? எனவே இலங்கையிலும் எமது தாய்மொழியான தமிழ்மொழிமூலம் தொழில் நுட்பக் கல்வியை வழங்குவதனால் ஒரு நிறைவான கைத்தொழில் வளர்ச்சியை எமது நாடு எய்த முடியும் அதே வேளை ஆங்கில தொழில்நுட்பப் பதங்கள் முற்றாக பாவனையில் இருந்து நீக்கப்படாமல் தேவைப்படும் இடத்தில் பாவிப்பதுடன் அதற்கு இணைவாக தமிழ் மொழிப்பதங்களையும் பயன்படுத்துதல் வேண்டும். இவை நீண்ட காலப் போக்கில் இலங்கையில் குறிப்பாக வடக்கு-கிழக்கு பகுதியில் தொழில் நுட்பக் கல்வியின்

வளர்ச்சியில் தமிழ்மொழிப் பிரயோகம் உச்சநிலையை அடைவதற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மொழிப் பயன்பாடு தற்போது தொழிற்கல்வியில் பாதிப்படைவதற்கு ஆங்கிலமொழியைக் கூடுதலாகப் பயன்படுத்துவதும் ஒரு காரணமாகும். அலுவலகங்களிலும் வேலைத் தளங்களிலும் கூடுதலாக ஆங்கிலப்பிரயோகம் காணப்படுவதனால் அதற்கான தமிழ் ஆக்கம் குறிப்பிட்டளவு இருந்தும் காலப் போக்கில் பாவனை இன்றி அழிந்து போயுள்ளன. எனவே நடைமுறையிலுள்ள ஏனைய தொழில் நுட்பக் தமிழ் பதங்கள் பேணப்படுவதாயின் கூடியளவு ஆங்கில பாவனையை குறைத்து தமிழ் பதங்களை அவற்றிற்குப் பதிலாக பாவித்தல் வரவேற்கத்தக்கதாகும்.

தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் பாவிக்கப்படும் இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் போன்றவற்றிற்கு பெயர்குறிப்பிடப்படும் போது ஆங்கிலமொழியுடன் தமிழ் மொழியும் இணைவாக பயன்படுத்தப்படல் வேண்டும் இதன் மூலம் மாணவர்கள் இப் பொருட்களை சந்தையில் அல்லது சுற்றாடல்களில் காணும்போது அவற்றினை இனம் காணக்கூடியதாக இருக்கும். அத்துடன் அவற்றின் உபயோகத்தில் சமூகத்தில் உள்ள மரபு ரீதியான தொழிலை ஆற்றி வரும் ஏனையோருக்கு எடுத்துக் கூறக்கூடியதாக இருக்கும். இது தொழிற் துறையில் தமிழ் பிரயோக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்

தமிழ்மொழி பெயர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்த மொழி பெயர்ப்பாளர்களை இனம் கண்டு அவர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்கு ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இவர்களுக்கு ஊக்குவிப்புகள் வழங்குவதுடன் வெளிநாட்டுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கி குறிப்பாக தமிழ் நாட்டில் இயங்கும் தொழிற் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பி அங்கு நடைமுறையில் உள்ள தமிழ்தொழில்நுட்பச் சொற் பிரயோகங்களை ஆய்வு செய்து அதனை எமது நாட்டிற்கு வரவழைப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

தமிழ்மொழிப் பிரயோகம் தொழில்நுட்பத் துறையில் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமாயின், வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி,மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றின் மூலம் தொழில்நுட்ப கலைச் சொற்களை வெளியிடுவதன் மூலம் இவை மூலைமுடுக்குகளில் வாழும் தமிழ்பேசும் சமூகங்களை இலகுவாக போய் சேரக்கூடியதாக இருக்கும் இது தமிழ்மொழிப் பிரயோகத்திற்கு இலகுவாக வழி கோலும்.

ஒவ்வொரு தொழில்நிறுவனங்களிலும் காணப்படுகின்ற நூல்நிலையங்களில் உசாத் துணைக்காக தமிழ் கலைச்சொல் அகராதிகள் கிடைக்க கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் தமிழ் கலைச்சொல் பிரயோகம் பற்றிய கருத்தரங்குகள் பாடசாலை மட்டத்திலும் தொழிற்கல்வி நிலையங்கள் மட்டத்திலும் நடாத்தப்படுதல் வேண்டும்

பல்கலைக்கழகத்திலும் தமிழ்மொழி தொழில் நுட்பச் சொற் பிரயோகத்துக்கான ஓர் ஆய்வு நிறுவனம் அமைக்கப்படுதல் வேண்டும்

எல்லாவற்றிற்கும் மேலாக மாணவர்களுக்கு உந்துவிப்பும் , ஆர்வமும் தமிழ் தொழில்நுட்பக் சொற்பிரயோகத்தில் ஏற்படுவதற்கு கவர்ச்சிகரமான வழி வகைகள் தொழில் நுட்ப நிலையங்கள் ஊடாகவும், பாடசாலைகள் ஊடாகவும் ஆவன செய்தல் வேண்டும். அத்துடன் குறிப்பாக தமிழ்மொழி போதிக்கப்படும் பாடசாலைகளில் தொழில் முன்னிலைப் பாடம் கற்பிக்கும் பொழுது இவ்வாறான புதிய தொழில்நுட்பப் கலைச் சொற்கள் புகுத்தப்படுதல் வேண்டும்

தொழிற் கல்வியை வழங்கும் பெரும்பாலான நிலையங்கள் மத்திய அரசின்கீழ் தொழிற்படுகின்றன. இந்நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களில் தொழிற்கல்வி தமிழ் மொழிப் பிரயோகத்திற்கான தனியான ஒரு பிரிவினை ஏற்படுத்தி அதனூடாக பொறுப்பு

வாய்ந்த அதிகாரிகள் மூலம் தமிழ்மொழிப் பிரயோகத்தினை நடை முறைப்படுத்தல் வேண்டும்.

எனவே மேற்கூறப்பட்ட பிரச்சனைகளான தொழில்நுட்பக் கல்விக்கான தமிழ் சொல் அகராதிகள் பற்றாக்குறை, தொழில்நுட்பக் கல்விக்கான நூல்கள் பற்றாக்குறை மற்றும் தமிழ் மொழிப் பிரயோகம் தொழிற்கல்வி நிறுவனங்களிலும் வேலைத்தளங்களிலும் குறைவாக நடை முறையில் உள்ளமை, தமிழ்பேசுபவர்கள் ஆங்கிலமொழியில் கூடுதலான நாட்டம் கொண்டமை, தமிழ்மொழிப் பிரயோகத்தை மேற்கொள்ளுவதற்காக ஒரு பிரிவு திணைக்களங்களில் காணப்படாமை போன்ற காரணங்களை மையமாகக் கொள்வதுடன் ஏனைய நடைமுறைப் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு இவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் விடா முயற்சி எடுத்து துரித கதியில் செயற்படுவாராயின் தொழிற்கல்வியில் தமிழ்மொழி பிரயோகமானது ஒரு குறுகிய காலத்தில் வெற்றியை ஈட்டுவதுடன், சிங்கள மொழி வளர்ச்சிக்கு இணைவாக தமிழ் மொழி வளர்ச்சியையும் வளர்த்து எடுக்கலாம் என்பதில் ஐயமில்லை. இதன் பிரகாரம் 21 ஆம் நூற்றாண்டில் தொழில் கல்வி முறையானது ஒரு புதிய பரிமாணத்தினை தமிழ் பேசும் மக்களிடையே ஈட்டித்தரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

❑

கல்விக்கான வளங்களும், ஆய்வுகளும்

திரு. ந. சிதம்பரநாதன்
பணிப்பாளர், தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

அறிமுகம் :

எந்தவொரு நாட்டிலும் ஒவ்வொரு துறையினதும் வளர்ச்சிக்கான ஊற்று அந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் கல்விச் செயன்முறையிலேயே தங்கியுள்ளது. இவ்வகையில் நோக்குமிடத்து ஒரு நாட்டின் மனிதவள மேம்பாட்டிற்காக இடப்படும் ஒரு முதலீடே கல்வி எனலாம். பொருத்தமான வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் வறுமையை விரட்டுவதற்கும் உதவுவது கல்வியே ஆகும்.

ஓர் அபிவிருத்தித் திட்டத்தைச் சிறப்புற நடைமுறைப்படுத்துவதற்கு, மனித வளங்களும், நிதிவளங்களும், பௌதீகவளங்களும் போதியளவில் அத்தியாவசியமாக தேவைப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் இவ்வளங்கள் ஒன்றிணைக்கப்பட்டு கிடைத்த வளங்கள் உச்ச அளவுக்குப் பயனளிக்கத்தக்க வகையில் முகாமைத்துவஞ் செய்யப்படுவது மிகவும் முக்கியமானதாகும். கல்விக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துச் செல்வதனாலும் கல்விமுறைமையும் அதன் வினைத்திறனும் கல்வித் தரமும் உயர வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதாலும், கிடைக்கக்கூடிய வளங்களின் உச்சப் பயன்பாடு இன்றைய இன்றியமையாத் தேவையாகிவிட்டது. உலகம் எங்கணும் கல்வி நிருவாகிகள் எதிர் நோக்கும் முக்கியமான சவால் கிடைக்கக்கூடிய வளங்களை எவ்வாறு உச்ச அளவிற்குப் பயன்படுத்துவது பற்றியதே ஆகும்.

பொதுவாக கல்விக்கான வளங்களை மூன்று தொகுதிக்குள் அடக்கலாம்.

அவையாவன :-

(ஆ) நிதி வளங்கள்
(அ) பௌதீக வளங்கள்
(இ) மனித வளங்கள்

கல்விக்கான வளங்களைப் பெறுவதிலும், அவற்றை விரயமின்றி உச்ச அளவிற் பயன்படுத்துவதிலும் வளர்முகநாடுகள் பெருந்தடைகளை எதிர்நோக்குகின்றன. இதன் காரணமாக தேசிய வருமானத்தில் என்ன பங்கைக் கல்விக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதிலும் கல்வியில் எந்த மட்டத்திற்கு அல்லது எந்த அம்சத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதிலும், கூடிய கவனஞ் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் விதப்புரைகளின்படி வளர்முகநாடுகள் தமது கல்வித்துறை வளர்ச்சிக்காக ஆகக்குறைந்தது தேசிய வருமானத்தின் 4% ஆவது செலவிட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கல்விக்கான வளங்கள் இன்று எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதுபற்றியும், அவ்வளங்கள் தொடர்பான எத்தகைய

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கல்விக்கான வளங்கள் இன்று எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதுபற்றியும், அவ்வளங்கள் தொடர்பான எத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம் என்பதுபற்றியும், வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கல்வித்தரத்தை உயர்த்தவும், கல்விமுறையினை மேம்படுத்தவும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு அத்தகைய ஆய்வுகள் எவ்வாறு உதவும் என்பதையும் வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்விக்கான வளப்பிரச்சனை

வளர்முகநாடுகள் அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகளில் மட்டுமன்றி, கல்வித்துறையிலும் இன்று பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. இக் கல்விப்பிரச்சினைகளுக்குரிய குறிகாட்டிகளாகக் கல்விக்கான கேள்விஅதிகரித்தமை, கல்வி முறைமைகள் ஒழுங்கீனமாக முகாமைத்துவஞ்செய்யப்படுதல், கற்பித்தல் நிலைமைகளும், கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளும் தாழ்வுற்றுச்செல்லுதல், கல்வி முகாமைத்துவம் பணிக்குழுவாட்சி முறையின் கீழ் இயந்திரமாகி இருத்தல் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

உலகம் முழுவதிலுமே நாடுகள் எதிர்நோக்கும் கல்விப்பிரச்சினையின் அடித்தளம் பொருளாதாரப்பற்றாக்குறை என்பது கண்கூடு.

"1985 ஆம் ஆண்டிலே, வளர்முகநாடுகளின் வரவு-செலவுத் திட்டங்களில் சராசரியாக 16% மட்டுமே கல்விக்கான செலவினமாக ஒதுக்கப்பட்டிருந்தது"

உலகவங்கி *அறிக்கையில் இடம்பெற்ற இக்கூற்று* கல்விப்பிரச்சினைகளின் ஆணிவேரை தொட்டுக்காட்டுவதாய் அமைந்துள்ளது ஒருபுறம் கல்விக்கான செலவினத் தொகை கட்டுப்படுத்தப்படுவதையும் மறுபுறம் சனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாக கல்விவிரிவாக்கம் பன்மடங்கு அதிகரித்தவண்ணம் இருப்பதையும் காட்டுகிறது.

" 1960 தொடக்கம் 1980 வரையுள்ள இருதசாப்த காலப்பகுதியில் ஆரம்ப நிலைக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி என்பவற்றிற்காக வளர்முக நாடுகளிற் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை முறையே 142%, 358%,523% ஆக உயர்ந்திருக்கின்றது"

இவ்வாறு ஒவ்வொரு மட்டத்திலும் கல்விக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பிற்கேற்ப, வளர்முக நாடுகளினால் நிதி வளத்தைக் கூடுதலாகப் பகிர்ந்து வழங்கமுடியாத நிலைமை நிலவி வருவதைக் காணலாம்.

கல்விக்கான வளப் பிரச்சினையை இன்னொரு முறையிலே நோக்கினால் "வளர்முகநாடுகளைப் பொறுத்தவரையில், ஒரு மாணவனுக்காக அரசு வழங்கும் செலவினம் 1970ஆம் ஆண்டில் 5 அமெரிக்க டொலராகவும், 1982ம் ஆண்டில் 30 அமெரிக்க டொலராகவும் உயர்ந்துள்ளது"

இவ்வாறு உயர்ந்து செல்லும் கல்விக்கான செலவினத்திற்கு முகங்கொடுக்கக் கூடிய நிலைமையில் பெரும்பாலான வளர்முக நாடுகளின் பொருளாதாரம் உறுதியாக இல்லை. வளர்முகநாடுகளின் கடன்பளு ஆண்டுதோறும் அதிகரித்த வண்ணம் இருத்தல், அந்நிய, உதவிவழங்கும் நிறுவனங்களும், நாடுகளும் உதவி பெறும் நாடுகளுக்கு இடும் நிபந்தனைகளின் பெருக்கம், அந்நிய உதவிகளின் சீரற்ற-உறுதியற்ற போக்கு என்பன காரணமாகப் பற்றாக்குறை வரவு-செலவுத்திட்டங்களைத்

தொடர்ச்சியாகச் சமர்ப்பிக்க வேண்டிய நிலைமையிலே பெரும்பாலான வளர்முக நாடுகள் உள்ளன.

இதுகாறுங் கூறியதிலிருந்து கல்விக்கான வளப்பிரச்சனை ஒரு மாகாணத்திற்கு அல்லது ஒரு நாட்டிற்கு மட்டும் உரியதன்று என்பதும் உலகளாவிய பிரச்சனை அது என்பதும் உளங்கொளத்தக்க விடயங்கள் ஆகும். ஆயினும், வளப்பிரச்சனை உலகம் முழுவதற்கும் உரியதொன்று என்பதற்காகவோ, அரசின் வளஒதுக்கீடுகள் போதிய அளவிற் கிடைக்கவில்லை என்பதற்காகவோ நாம் வாளாவிருந்து விட முடியாது. எமது சிறார்களின் கல்வியை-அவர்களின் வருங்காலத்தை பாழடிப்பதற்கு எவரும் முற்படலாகாது. எம்மிடம் உள்ள பௌதீகவளங்களையும், எமக்கு கிடைத்த நிதி வளங்களையும், மனிதவளங்களையும் அடிப்படையாகவைத்துக்கொண்டே எமது இளஞ் சந்ததியினரின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதற்குக் கல்வித்துறையில் ஈடுபாடுடைய அனைவரும் முன்னின்று உழைக்க வேண்டும்.

3. வள முகாமைத்துவம்

கிடைக்கக்கூடிய வளங்களைப்பெற்று அவற்றை விரயஞ்செய்யாமல் உச்சப்பயனை பெறத்தக்கவிதத்தில் நன்கு திட்டமிட்டு அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதே வள முகாமைத்துவம் எனலாம். பௌதீகவளங்களாயினும் சரி, மனிதவளமாயினும் சரி, நிதிவளமாயினும் சரி எல்லாப் பிரதேசங்களிலும் ஒரே அளவாகக் கிடைக்கும் என்றோ சமமாய் பகிர்ந்தளிக்கப்படும் என்றோ எதிர்பார்க்கமுடியாது. எனவே கல்விக்கான வளமுகாமைத்துவத்திலே கல்விப்பணியில் ஈடுபடும் அனைவரும் அதிக கவனமுங் கருத்துஞ் செலுத்துவது இன்றியமையாத் தேவையாகிவிட்டது.

இலங்கையிலே கல்விக்கான வளங்களின் முகாமைத்துவம் பற்றி நோக்கும் போது கலாநிதி சீ. டபிள்யூ . டபிள்யூ . கன்னங்கர அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்விமுறைமை கடந்த பல தசாப்தங்களாக ஆற்றிவரும் பங்கினையும், பணிகளையும் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. தேசியக்கல்வி முறைமையைக் கட்டியெழுப்புவதற்கு அவர் கொண்டுவந்த இலவசக்கல்விச் சட்டத்திலே குறிப்பிடப்படும் கல்விக்கான சமவாய்ப்புகளை அதிகரித்துக் கல்வியில் அதிகளவு மாணவர்களைப் பங்கு பெறச் செய்தல் எனும் விடயம் இலங்கைக்கல்வி வரலாற்றிலே முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமன்றி தூரதிருஷ்டி மிக்கதுமாகவுள்ளது. இலங்கையின் கல்வியமைப்பினை ஆராய்ந்த ஆசியஅபிவிருத்தி வங்கி அறிக்கை இவ்விடயம் பற்றிப் பின்வருமாறு மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

தேசிய கல்வித் திட்டத்தின் நோக்கம் கல்வித்துறையில் நிலவும் சமமின்மைகளைக் குறைப்பதாகும். இன, மத, சாதி, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து கல்விக்கான சமவாய்ப்புகளை விஸ்தரிப்பதோடு, சகலரையும் கல்வியினாற் கிடைக்கும் பயன்களையும் அனுபவிப்பதற்கும் இடமளிக்க வேண்டும்" 5

இலவசக் கல்விக் கொள்கை அமுல் செய்யப்பட்டதன் விளைவாகக் கடந்த பல தசாப்தங்களின் எழுத்தறிவு வீதம் அதிகரித்துச்செல்வதைப் புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஆண்டு	1946	1965	1986
பாடசாலைகளின் எண்ணிக்கை	5159	9477	9575
மாணவரின் எண்ணிக்கை	933,358	2,329,403	3751708
எழுத்தறிவு வீதம்	57.8%	77.1%	87.2%

கல்விவளங்களுக்கான முகாமைத்துவந் தொடர்பாகத் தொடர்ச்சியான பன்முகப்படுத்தப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக (ஆசியப் பிராந்தியத்திலே உள்ள ஏனைய தாழ்ந்தமட்ட வருமானமுடைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து) இலங்கை உயர்வான எழுத்தறிவு வீதத்தினைக் கொண்டிருக்கிறது எனலாம்.

4. தற்போதைய நிலைமை

வடக்கு- கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இன்றைய வளங்கள் பற்றிய நிலைமையைச் சுருக்கமாகவும், பொதுவாகவும் எடை போடுவது அவசியமாகிறது.

4.1 கட்டிட வசதிகள்

பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் மாணவர்கள் அனைவரும் அமர்ந்து படிப்பதற்கு வசதியாய் அமையும் வகுப்பறைக் கட்டிடங்கள் கல்விப்பயிரை வளர்ப்பதற்கு அவசியமான தளம் என்றால் அது மிகையாகாது. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளிற் பெரும்பாலானவை திருப்திகரமான இட வசதியினை உடைய கட்டிடங்களைக் கொண்டவையல்ல. வெளிச்சம், காற்றோட்டம் ஏனைய சுகாதார வசதிகள் ஆகியவற்றைக்கொண்ட கட்டிடங்களை உடைய பாடசாலைகள் 10% இதற்கு குறைவாகவே உள்ளன எனலாம்.

4.2 மல சல கூட வசதிகள்

சுகாதாரத்தைப் பேணுவதற்கு அத்தியாவசியமாகவுள்ள மலசல கூடங்கள் எமது பாடசாலைகளிலே போதியளவில் அமைக்கப்படவில்லை. அமைக்கப்பட்டிருப்பினும் அவை சீராகப் பேணப்படவில்லை.

4.3 குடிநீர்

இலங்கையின் வரண்டவலயத்தில் அமைந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகள் பலவற்றிலே நல்லகுடிநீர் வசதிகள் திருப்திகரமான நிலையில் இருப்பதாகக் கூறுவதற்கில்லை.

4.4 தளபாடம்

எல்லாப் பாடசாலைகளிலுமே தளபாடம் போதிய அளவில் இல்லை என்பது ஓரம்சம். மாணவரின் வயதுக்கும் வளர்ச்சிப் பருவத்திற்கும் ஏற்ற பரிமாணங் கொண்ட தளபாடங்கள் இல்லாதிருப்பது இன்னோரம்சம். இருக்குந் தளபாடங்கள் கூட தரமான முறையில் அமைக்கப்படாமல் விரைவில் உடைந்து போய் உபயோகிக்க முடியாமல் இருப்பது மற்றுமோர் குறைபாடாகும். உடைந்த தளபாடக் குவியல்கள் பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு புறத்தை 'அலங்கரிப்பது' எமது பாடசாலைகளில் நாம் காணும் வழமையான காட்சி.

4.5 கற்றல் சாதனங்கள்

எமது பாடசாலைகளிற் காணப்படும் முக்கியமான கற்றற் சாதனம் கரும்பலகை ஆகும். முப்பரிமாணப் பொருட்களையோ உலகப் படங்களையோ, தேசப்படங்களையோ, காட்சிப்படுத்துவதற்குரிய வசதிகள் மிகக்குறைவு. ஒருசில பாடசாலைகளில் அவை இருப்பினும் கற்பித்தல்-கற்றல் செயன்முறையின் போது அவை பயன்படுத்தப்படுவது அபூ ர்வம் .

4.6 விளையாட்டு மைதானம்

விளையாட்டு மைதானத்தை உரிய முறையிலே பயன்படுத்தாமை எமது பாடசாலைப் பௌதீகவளப் பயன்பாட்டிலே இடம்பெறும் ஒரு குறைபாடாகும் விளையாட்டு மைதானத்தைச் சொந்தமாக உடைய பாடசாலைகள் கூட அதன் பெறுமதியை உணர்வதாகத் தெரியவில்லை. பல்வேறு விளையாட்டுக்களை மாணவர் பயில்வதற்கு உதவும் வகையில் விதிமுறைகளுக்கு அமைவான எல்லைகளையோ, குறிகளையோ, கொண்டிருக்காமல் வெறும் கட்டாந்தரையாகவோ, கட்டிடம் அமைப்பதற்கு உதவும் இடமாகவோ கருதிச் செயற்படுவது சாதாரண நிலையாகும்.

4.7 விஞ்ஞான ஆய்வுகூடங்கள்

மாணவர்களின் அவதானிக்குந்திறனும், தாமாகவே செயலாற்றுந் திறனும் தன்னம்பிக்கையும் விஞ்ஞானச் செயன்முறைகள் மூலம் வளர்க்கப்பட முடியுமாகையால் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் முக்கிய பங்குவகிக்கின்றன

எமது பாடசாலைகளைப் பொறுத்தவரையில் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் அடியோடு இல்லாமல் இருப்பதும், அவை இருப்பினும் கற்றல்-கற்பித்தல் செயன் முறையின் போது பயன்படுத்தப்படாது இருப்பதும் பயன்படுத்த எண்ணுவோர்க்கு தேவையான உள்ளக வசதிகளும் ஏனைய பொருட்களும் பற்றாக்குறையாக இருப்பதும் துரதிட்ட நிலைமைகளாகும்.

4.8 நூலகங்கள்

நூலகவசதிகளைக் கல்வி மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தும் வழக்கம் பொதுவாகவே இன்று அருகி வருகிறது. பாடநூல்கள் என்ற வட்டத்துக்குள் மட்டும் நின்று கொண்டு பரீட்சையை இலக்காகவைத்துக் கல்விபயிலும் நிலைமை எமது நாட்டில் நிலவுகிறது. பாடநூல்களுக்கு அப்பால் அறிவைவளர்ப்பதற்கான நேரம் மாணவர்க்கு இல்லை. தம் பிள்ளைகள் பாடநூல் தவிர்ந்த வேறு நூல்களையோ, சஞ்சிகைகளையோ வாசிப்பதைப் பொதுவாகப் பெற்றோர் விரும்புவதில்லை. வாசிப்பை வளர்த்துப் பரந்த பொது அறிவைப் பெருக்குவதற்கு பாடசாலைகள் போதியவசதிகள் அளிக்க முடியாத நிலையில் உள்ளன. இந்த நிலமைகளினால் எமது பாடசாலைகளில் நூலகங்கள் அமைக்கப்படுவதற்கோ அவற்றைச் சீராகப் பேணுவதற்கோ, நூல்களை வாசிப்பதற்கான மனநிலை சூழ்நிலை என்பவற்றை வளர்ப்பதற்கோ வாய்ப்புகளும், வசதிகளும் வழங்கப்படுவது மிகமிகக் குறைவு.

4.9 இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகள் கல்விக்கான மனிதவளங்கள்பற்றிய இன்றைய நிலைமையை எடுத்துக்காட்டுகின்றன.

5. கல்வியை மேம்படுத்துவதற்குச் செய்ய வேண்டியவை

கல்விப்பயிரை வளர்ப்பதற்கு பலதரப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது கல்வி மேம்பாட்டுக்காகச் செய்யவேண்டியனவற்றுள் பின்வருவன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன:

(அ) கல்வியை விருத்தி செய்வதில் தேசிய அபிலாஷை
(ஆ) கல்வித்திட்டத்தின் பொருந்தப்பாடு
(இ) ஆசிரியர்களின் திறன்களும் சேவை மனப்பாங்கும்
(ஈ) மாணவர்கள் கல்வி மீது காட்டும் ஆர்வம்
(உ) பாடநூல் உள்ளடக்கத்தின் சீரும் சிறப்பும்
(ஊ) பௌதீக வசதிகள் ஆதாரமாக அமைதல்
(எ) பெற்றோரின் ஊக்கமும் மீள வலியுறுத்தலும்.
(ஏ) கல்வி நிருவாகத்தின் பங்கும் பணியும்.

மேலே தரப்பட்டவற்றுள் ஒன்றோ, இரண்டோ மாத்திரம் இருந்தாலோ அல்லது ஒரு சிலவற்றைச் சீரமைப்பதாலோ, கல்வித் தரம் உயர்ந்துவிடுமென எதிர்பார்க்க முடியாது. கல்வியோடு தொடர்புடையகாரணிகள் அனைத்தும் சமாந்தரமாகவும் முரண்பாடுகள் இன்றியும் மேம்பாடு அடையும் போதே கல்வித் தரம் உயருதல் கூடும்.

கல்வி வளங்களைப் பயன்படுத்துல் தொடர்பான சில ஆலோசனைகள்

(அ) பௌதீகவளங்கள் போதிய அளவில் இல்லையென்றோ, நிதிவளங்களின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு எவரும் உதவவில்லையென்றோ குறிப்பிட்ட பாடத்தை கற்பிப்பதற்கு ஆசிரியர் இன்மையோ இந்த நிலைமைக்குக் காரணம் என்று கூறுவதாலோ, எமது சிறார்களின் எதிர்கால வாழ்வு சிறக்கப்போவதில்லை. ஆகையால் வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகள் தம்மிடம் உள்ள வளங்களையும், சூழவுள்ள சமூகவளங்களையும் தேடிப்பெற்று உச்ச அளவுக்குப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) கிடைக்கும் வளங்களை விரயஞ்செய்யாது உச்ச அளவுக்குப் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, பாடசாலைக் கட்டிடங்களைப் பாடசாலை வேளை

அல்லாத காலங்களிற் பயனுள்ள முறையிற் பயன்படுத்துவதன் மூலம் பாடசாலைகள் வளர்ச்சிப்பாதையில் நடைபோட வழி பிறக்கும்.

(இ) வளங்களின் விரயம் தவிர்க்கப்படுவதற்குத் திட்டமிட்ட செயற்பாடுகள் அமுல் நடத்தப்படல் வேண்டும். உதாரணமாக விஞ்ஞான பாட ஆசிரியர் ஒருவர் பாடசாலைக்குச் சமூகமளித்திருந்தும், பல்வேறுகாரணங்களுக்காக அவர் அப்பாடத்தைக் கற்பிப்பதில்லை என்றால், அப்பாடசாலையைப் பொறுத்தமட்டில் விஞ்ஞான பாடங்களுக்கான பாடவேளை வீண் விரயமாகிறது என்றே கொள்ள வேண்டும். எனவே இத்தகைய வளவிரயங்களைத் தவிர்ப்பதற்குப் பாடசாலை மட்டத்திலான கல்வி நிருவாகம் ஆவன செய்தல் வேண்டும்.

(ஈ) பாடசாலை அதனைச்சூழவுள்ள சமூகத்திலிருந்து விலகியிருப்பதைத் தவிர்த்துக் கொண்டால், பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான பரஸ்பர நல்லுறவுகள் வலுப்பெறும். ஒரு பாடசாலை மீது பெற்றோர், பழைய மாணவர் நலன் விரும்பிகள் ஆகியோர் நல்லெண்ணமுடையவராய்ச் செயற்படுவதற்கான சுமுகமான சூழ்நிலை பேணப்படுமாயின் வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஓரளவாவது முயற்சி செய்யலாம். இதன் மூலம் பாடசாலைகளின் பௌதீகச்சூழல் சிறப்புற்று விளங்கும்.

(உ) பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற் காணப்படும் வளங்களைப் பெற்றுக் கொள்வதிலும், அவற்றை பயன்படுத்துவதிலும் பாடசாலைகள் தமக்குள்ளே போட்டியிட்டுக்கொள்ளாத நிலைமை ஏற்படுமாயின் அருமையாகக்கிடைக்கும் வளங்களை உச்ச அளவுக்குப் பயன்படுத்தலாம்.

7. கல்வி வளங்கள் தொடர்பான ஆய்வுகள்

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கல்விவளங்கள் தொடர்பாக ஆய்வுகள் பல மேற்கொள்ளப்படுவது கல்விவளந்தொடர்பாகக் கடைப்பிடிக்கக்கூடிய கொள்கையை உருவாக்குவதற்குப் பெரிதும்உதவும். ஆய்வுகளின் அடிப்படையெதுவுமின்றிக் கொள்கை எதுவும் நற்பயனைத்தந்துவிடுமென எதிர்பார்க்க முடியாது. மாறாக பாதகமான விளைவுகளும் இத்தகைய ஆய்வடிப்படையற்ற கொள்கையை அமுலாக்குவதனால் ஏற்படவும் கூடும்

இதனால் கல்விவளங்கள் தொடர்பாகப் பின்வரும் ஆய்வுகளைப் மேற்கொள்ளுவது பயன்மிகு முன்னாயத்த நடவடிக்கையாகும் எனலாம். இதன் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்விக்கானவளங்களைப்பெறுதல் தொடர்பாகவும், வளப்பகிர்வு, வளமுகாமைத்துவம் என்பன தொடர்பாகவும் அமுலாக்கற் கொள்கையொன்றினை உருவாக்குதல் கூடும்.

(அ) இன்றைய வளநிலைமைகளை மதிப்பீடு செய்தல். (மாவட்ட கல்வி வலயரீதியாக)

(ஆ) கல்வியின் விளைவுகளும், அவை சமூகத்துறை, தனியார்துறை, அரசதுறைகள் என்பவற்றுடன் இடம் பெற்ற தாக்கங்களும்.

(இ) கல்வியின் பல்வேறு துறைகளிலும் மாவட்டங்களிலும் இடம்பெறும் வள விபரங்கள்.

(ஈ) கல்விவளங்கள் தொடர்பான சமூக ஈடுபாடுகளும் சமூகத் தொடர்புகளும்

(உ) கல்விவளங்களைப் பகிர்வதற்கான இன்றைய நடைமுறைகளும் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்.

(ஊ) கல்விவளங்களை முகாமைத்துவஞ் செய்யும்போது இடம்பெறும் குறைபாடுகளும் அவற்றிற்கான தீர்வுகளும்.

8. பொழிப்பு

ஐக்கிய நாடுகள் அமையத்தினால் வெளியிடப்பட்ட மனித உரிமைகளுக்கான பிரகடனம் (1948) பின்வருமாறு.

ஒவ்வொருவரும் கல்வி கற்கும் உரிமை உடையவர். ஆரம்ப, அடிப்படை மட்டங்களிலாவது அனைவருக்குங் கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

தொழில்நுட்பக் கல்வியும், தொழில் பெறுவதற்கான கல்வியும் பொதுவாகக் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும். திறமையின் அடிப்படையில் உயர்கல்வி எல்லோருக்கும் சமமான முறையில் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

கல்வி முறைமையில் மேலதிக வளங்களை ஒதுக்குவதன் அவசியத்தை இப்பிரகடனம் வலியுறுத்துகிறது.

கல்வித்துறையில் எதிர்நோக்கப்படும் வள நெருக்கடிகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பது பற்றியும் கல்வி நடவடிக்கைகளில் எவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது பற்றியும் கிடைக்கும் வளங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றியும் தீர்மானிப்பது கல்வியில் நாட்டங்கொண்ட அனைவரதும் கடமையாகும்.

❑

தமிழ் மொழி மூலம் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

து. தவசிலிங்கம்

பொறியியலாளர்

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தேக் முன்தோன்றி மூத்ததமிழ்" என அணிகலன்சூடி பாவலராலும், நாவலராலும் பாராட்டப்பட்டது தமிழ்மொழி. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு இதனோடு தோன்றியதாகச் சொல்லப்படும் பலமொழிகள் இன்று வழக்கில் இல்லை. ஆதியில் அகத்தியர் தொட்டு இன்றைய பாரதி வரை அருளிய அருஞ் செல்வச்சிறப்பால் தமிழ் தரணியெங்கும் தளராத நிலையில் தவழ்வது ஒரு சரித்திரம். "யாமறிந்தமொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என கர்வத்துடன் உரைத்தது இன்று பழம்கதையாகிவிட்டது.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் பூ மிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" எனப் பாரதி பாடியது இலக்கிய இலக்கணச் சிறப்பென ஒப்புக்கொள்ளப்பட்டாலும் இன்றைய யதார்த்த நிலையில் தமிழ்மொழியின் நிலைபற்றி சிந்திப்பது ஒரு ஆக்கபூ ர்வமான விடயமாகும்.

தமிழில் ஏறக்குறைய மூன்று இலட்சம்வார்த்தைகள் இருப்பதாக ஒரு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது வளர்ந்துவரும் விஞ்ஞான உலகின் கண்டுபிடிப்புகளை அடக்குவதற்கு தமிழில் வார்த்தைகள் போதுமானவையாக இருக்க மாட்டாதென்பது பலரது அபிப்பிராயமாயுள்ளது. மகாகவிபாரதியார் இவ்விடயத்தில் என்ன அபிப்பிராயப்பட்டாரென்பதை தமிழ்த்தாய் வரிகள் மூலமாக வெளியிட்டுள்ளதை ஈண்டு நோக்குவோம்.

"ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கற்று மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்.

சாத்திரங்கள் பல தந்தார் - இந்தத்
தாரணியெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்
நேத்திரங் கெட்டவன் காலன் - தன்முன்
நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான்
கன்னிப்பருவத்தில் அந்நாள் - என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெயருண்டு - பின்னர்
யாவும் அழிவுற்றிறந்தன கண்டீர்.

இன்றொரு சொல்லினைக் கேட்டேன் - இனி
ஏது செய்வேன் ? எனதாருயிர் மக்காள்
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்கு
கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்.

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூ தச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவதில்லை - அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ
இந்த வசையெனக் கெய்திட லாமோ ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.

சரித்திரத்தைப் பின்நோக்கிப் பார்த்தால் இது எவ்வளவு உண்மையென்று விளங்குகின்றது. நம்முன்னோர்களில் பலர் அரிய தொழில்நுட்பத் திறமை படைத்திருந்ததோடல்லாமல் அவர்தம்படைப்புகளை இன்றைய நவீன விஞ்ஞானத்தால் எடைபோட முடியாமல் இருக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இராஜஇராஜசோழன் கட்டிய தஞ்சைப்பெரியகோவில் ஸ்தூபியின் நுனியில் ஒரு தனிக்குன்று குடைந்து வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு பாரியகுன்றினை எங்ஙனம் என்ன தொழில்நுட்பம் பாவித்து அவ்வளவு உயரத்திற்கு உயர்த்தினார்கள் என்பதற்கு இன்றைய விஞ்ஞானிகள் இன்னமும் தெளிவாக விளக்கமளிக்கவில்லை. இதே போன்றுதான் கரிகாற்சோழன் காவிரி நதிக்கு குறுக்கே கட்டிய கல்லணையும் ஆகும். இதில் ஒரு விடயம் தெளிவாகின்றது மேற்கில் வளர்ந்த தொழில்நுட்பம் போன்று எம்மிடையே இருந்திருக்கின்றது. ஆனால் அவை பாரதியார்கூறியது போல் "சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை" என்பது காரணமாகக் காணப்படுகின்றது.

இதுதான் இன்றைய நிலையெனில் தமிழர் தமிழ்த்தாய்க்கு ஆற்றக்கூடிய நற் சேவை தான் என்ன? அதற்கும் பாரதியே விடை பகர்கின்றார்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை
வணக்கஞ் செய்தல் வேண்டும்.

வளர்ந்துவரும் விஞ்ஞான உலகத்தின் வளத்தினை தமிழ்மொழிக்குள் அடக்கினாலன்றி தமிழ்மொழியின் எதிர்காலத்தை வளம்பெறச் செய்ய முடியாது. அப்படியாயின் வெளிநாட்டு மொழிகளில் உள்ள புதுமைகளை தமிழிலே சேர்த்தெடுக்க வேண்டும். இவற்றைவிளங்கிக் கொள்ளத்தக்க தகுதியினை தமிழுக்கு அளிக்க வேண்டும். இதற்குச் சொல்லாக்கம் அவசியம். புதுப்புது விஞ்ஞான கருத்துகளையும் தொழில் நுட்பக்கண்டு பிடிப்புகளையும் தமிழில் சொல்லவந்தால் புதியதமிழ் வார்த்தைகளை உருவாக்க வேண்டியது அவசியம் எனப்படலாம்.

பொருத்தமான வார்த்தைகளைக் காணும் பயிற்சிகூடிய கவனத்துடனும் திறமையாகவும் செய்யப்பட வேண்டியதொன்றாகும். சொல் அகராதியில் வேண்டிய சொற்கள் சேர்க்கப்பட்டாலும் நடைமுறையில் அவை என்ன மாற்றத்தைக் காண வேண்டும் என்பதில் குழப்பம் உண்டு.

தமிழிலேயே படித்து பயிற்சியைமுடிக்கும் ஒருவர் எவ்வாறு வெளியுலகத் தொடர்பினைக் கொள்ள முடியும் என்றதொரு கேள்வி எழுதப்படுகின்றது இன்றைய உலகநடப்புகளை நன்கறிந்த எவரும் இதனை ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார் உதாரணமாக தொழில்நுட்பத்தில் இன்று ஜப்பானுக்கும் ஜேர்மனிக்கும் இணையில்லை. ஆனால் அங்கே ஜப்பானியர்களாயினும் ஜேர்மனியர்களாயினும் தமது கல்வியை முடிக்க தம்தம் மொழியிலேயே கற்று செயற்கரியசெய்கின்றார்கள் அதனால் அவர்தம் மொழி இன்றைய தேவைகளை ஈடுசெய்யும் பரிமாணத்தைக் கொண்டிருப்பது நோக்கத்தக்கது. பல மேற்கு நாடுகள் எவ்வாறு இப்பிரச்சனையை அணுகுகின்றன என ஆராயும் இடத்து இரண்டாவது மொழியொன்று பயிற்றுவிக்கப்படுவது வெளியுலகத்தொடர்பிற்கு உறுதுணையாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறாயின் தமிழர்கள் தாமும் வேண்டுமாயின் வெளியுலகத்தொடர்பிற்காக இரண்டாவது மொழிப்போதனையை வரவேற்கலாம்.

பொருத்தமான சொல்தேடுதல் முறையாகச் செய்யப்படல் வேண்டும். உதாரணத்திற்கு இரசாயனவியலில் “சேர் வோர்டன்பைப்” என்னும் ஒரு குழாய்பற்றிப் பேசுகையில் அதனை மொழிபெயர்க்கும்போது நேரிடையான தமிழ்வார்த்தையாக “தேவாலய காவலாளிக் குழாய்” என மொழிபெயர்ப்பின் அது கருவையே மாற்றிவிடும். ஏனெனில் சேர்ச் வோர்டன் என்பது ஒரு நபருடைய பெயர் அந்த குழாயைக் கண்டு பிடித்தவர் பெயரால் அக்குழாய் பெயரிடப்பட்டது. ஆகவே மொழிபெயர்ப்பு வல்லுனர்களையும் அடக்கிய ஒரு குழுவால் மட்டுமே முடியும். இத்தகைய மொழி பெயர்ப்பு எவ்வளவு காலம் எடுக்கும். அதுவரை என்ன செய்ய வேண்டும் என்பது ஒரு கேள்விக்குறி. இதனை உடனடியாக செயற்படுத்த முடியாது என்பது தெளிவு. இது கட்டம் கட்டமாக ஒரு குறிப்பிட்டகாலத்திற்குள்ளாக நடைமுறைப்படுத்த வேண்டிய ஒரு பயிற்சி. ஆகவே இதனை நிர்ணயம் செய்வோர் குழுவில் பல்துறை சேர்ந்த அறிஞர் அடங்க வேண்டியிருப்பது அவசியம். அல்லாவிடில் இது அவமானமாகிவிடும்.

மொழி பெயர்ப்பின் போது சொல்லின் அர்த்தம் தொனிக்கப்பட்டால் நன்றென்று நினைப்பவர் பலர் உண்டு. உதாரணமாக ஆங்கிலத்தில் ஒட்சிசன் என்ற வாயுவை தமிழில் பிராணவாயுவென மொழிபெயர்த்துள்ளார்கள். இது அவ்வாயுவின் குணாதிசயத்தையும் சேர்த்துக் குறிப்பதாக அமைகின்றது. ஆயினும் "ஒட்சிசன்" என்று பாவிக்கப்பட்டால் ஏனைய விடயங்கள் இலகுவாயிருக்கும் என்று வாதிப்போர் ஆங்கிலம் மூலம்கல்வியை கற்றவர்களாகக் காணப்படுவர். ஆயினும் ஒட்சிசன் என்னும் வாயுவோடு சம்பந்தப்பட்ட ஒட்சைட்டுகளை குறிப்பிடும்போது ஒட்சிசன் என்னும்பதம் கூடிய பொருத்தமாக அமைகின்றது. இஃது ஒட்சிசன் குடும்பமாகிய "ஓசோன்" மற்றும் மூலகங்களை குறிப்பிடவும் உதவியாக இருக்கும். ஆகவே தமிழில் இருக்கும் பொருத்தமான வார்த்தைகளை மட்டுமே தேடாமல் வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகளை தமிழோடு சேர்க்கவேண்டிய கட்டமும் வரலாம். உதாரணத்திற்கு "தார்" என்னும் பதத்தைக் குறிப்பிடலாம். Tar என்ற ஆங்கிலப்பதத்திற்கு தமிழில் வார்த்தைகள் தேடவேண்டியதில்லை. ஏனெனில் தமிழர்களிடையே தார் என்னும் வார்த்தை பிரபல்யமானது மட்டுமன்றி பிரயோகத்திலும் உள்ளது. ஆங்கிலத்தில் Foot inches என்று கூறப்பட்டதை தமிழில் அடி அங்குலம் என்று மொழிபெயர்த்த காலை, வழக்கில் தமிழர்மத்தியில் அடி, அங்குலம் எவ்வளவு தூரம் பாவனையின் நோக்கத்தினை தெளிவு படுத்திற்று என்பதும் இவ்விடத்தில் நோக்கத்தக்கது.

ஆகவே மொழி பெயர்ப்பு பல்துறை சேர் பேராளர்கள் கொண்ட குழு மூலம் பாவனைக்கேற்ற சொற்றொடராக செய்யப்பட வேண்டியது அவசியம்.

தமிழ் மக்களாகிய நாம் தமிழ்த்தாய்க்குச் செய்யும் தொண்டாக இதனைக்கருதி செயற்படுத்தினால் "மெல்லத் தமிழினிச் சாகும்" என்னும் நிலை வராமல் "வானம் அளந்ததனைத்தும் அறிந்து வளர்மொழி வாழும்" எனக்கூறி கொள்ள விரும்புகின்றேன்.

☐

வைத்தியத்துறை

ஏ. ஞா. ஞானகுணாளன்
தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி

எமது இலங்கைத் திருநாட்டைப்பொறுத்தளவிலே வைத்தியத்துறையில் முற்று முழுமையாக ஆங்கில மொழியே பிரதான இடத்தை வகிக்கின்றது. கல்லூரிகளிலே உயர்தரவகுப்புவரை தாய்மொழியிலே கல்விபயிலும் மாணவர்கள் மருத்துவக் கல்லூரியிலே தமது மேற்படிப்பை ஆங்கிலமொழியிலே தொடர்கின்றார்கள். முதலில் தாய் மொழியின் உதவிகொண்டு ஆங்கிலமொழிக் கல்விக்குக் தங்களைப் பழக்கிக் கொள்கின்றார்கள். ஏனெனில் சகல மருத்துவ பாடநூல்களும் ஆங்கிலமொழியிலேயே இருப்பதாலும் தமிழ்மொழியிலே "மருந்துக்குக்கூட" ஒரு புத்தகமும் இல்லாத காரணத்தினால் ஆங்கிலமொழி அறிவு குறைவாக இருந்தபோதிலும் தமது மாணவர்கள் தமது விடாமுயற்சியாலும், கடினஉழைப்பாலும் ஆங்கிலநூல்களைக் கற்று சிறப்பாக தேர்ச்சிபெறுகின்றார்கள்.

ஒரு பிறப்பில் தான் கற்றகல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல், ஒருவனுக்கு ஏழுபிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும் என்கிறார் வள்ளுவர். அப்படிப்பட்ட கல்வியை நமது தாய்மொழியிலே கற்பதற்கு தடையாக இருக்கும் முக்கிய காரணி "தமிழ்மொழியிலே மருத்துவம்சம்பந்தமான பாடநூல்கள் இல்லாததே" என்பது வெள்ளிடை மலை. இப்பிரச்சனை இலங்கையில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலும் இதுதான் நிலைமை. இதற்கு ஓர் சிறந்தபரிகாரம் தேடத் தமிழ் அறிஞர்கள் முன் வருவார்களானால் இந்த ஆய்வரங்கத்தின் அடிப்படை நோக்கம் ஈடேறுவதற்கு எதிரக்கருத்து இருக்காது என நம்புகிறேன்.

இச்சமயத்தில் இன்னுமொரு முக்கியகருத்தை எடுத்தியம்புவது எனது கடமையாகும். தமிழ்மொழியிலே கல்வி கற்பதாகக் கூறிக்கொண்டு "கடின நடையிலே மாணவர்களுக்கு புரியாத முறையிலே கல்வி கற்பிப்பதால் பிரயோசனம் ஒன்றும் இல்லை. ஆங்கிலச் சொற்தொடர்களை இலக்கண ரீதியாக மொழி பெயர்த்து, வாயில் நுழையாத வார்த்தைகளை அர்த்தம் புரியாதமுறையிலே கற்பதால் மாணவர்களின் கிரகிக்கும் தன்மையிலே பிரச்சினை ஏற்படுகின்றது. இதுசம்பந்தமாக பலநிகழ்ச்சிகளை உதாரணமாக எடுத்துக்காட்ட முடியும். எனினும் அதனால் சில பேராசிரியர்களின் மனம் சங்கடப்படலாம் என்ற காரணத்தினால் விபரமாக சொல்வதை தவிர்த்துக் கொள்கிறேன்.

இங்கு நான் எடுத்துக்காட்ட முயற்சிப்பது யாதெனில் "இலகு நடையிலே" சகலருக்கும் புரியும் முறையிலே இருக்கவேண்டும் என்பதுதான். இம்முறை கல்வி கற்பதில் மட்டும் இருந்தால் போதாது. கல்வியின் பின் மருத்துவராகத் தொழில்புரியும் காலத்திற்கும் இது பொருந்தும் என்பதையும் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

ஒரு வைத்தியர் தன்னிடம் வரும் நோயாளிக்கு அவரின் தன்மை பற்றி எடுத்துக் கூற வேண்டியது மிகவும் முக்கியமானது. அந்த நோயின்தன்மையை அந்த நோயாளிக்கு புரிகின்ற அவரின் தாய்மொழியிலே எடுத்துக் கூறுவது அதைவிட முக்கியமானது. ஆனால் நடைமுறையில் நடப்பது இதற்குஎதிர்மாறானதாக இருக்கின்றது. அநேகமான நோயாளிகளுக்கு நோயின் தன்மை பற்றி எடுத்துக் கூறப்

படுவதில்லை. ஒருசிலர் எடுத்துக் கூறினாலும் அநேகமாக ஆங்கிலப் பதங்களையே பிரயோகிக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் மருந்துகள் கொடுக்கும் போது அது பற்றிய விபரங்களைக் கூடதெரிவிப்பதில்லை. அதற்காக "அஸ்பிரின்" என்ற மருந்து எதற்காகக் கொடுக்கப்படுகின்றது என்ற விபரம் அந்தமருந்தை உட்கொள்ளப்போகின்ற நோயாளிக்கு கட்டாயம் தெரியப்படுத்த வேண்டும்.

இவையெல்லாவற்றிற்கும் அடிப்படைத் தேவை, தமிழ்மொழியிலே மருத்துவம் சம்பந்தமானபுத்தகங்கள் தொடர்ச்சியாக வெளிவரவேண்டும். சமீபகாலமாக தமிழ் நாட்டிலிருந்து சுகாதாரம்சம்பந்தமாக சிலஇதழ்கள் வெளிவரத்தொடங்கி இருக்கின்றது. இவற்றில் பொதுவாக சமுதாயத்தில் காணப்படும் நோய்களைப் பற்றிய செய்திகள் வெளிவருகின்றது. எனினும் இவ்விதழ்கள் எவ்வளவு தூரம் மக்களை சென்றடைகின்றது என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும். இவற்றில் சில "தனிச்சுற்றுகளாகவும் மற்றவை வியாபார நோக்கத்துக்காகவும் வெளியிடப்படுகின்றது". தனிச்சுற்றுவெளியீடுகள் சில குறிப்பிட்டமருத்துவ தொழில்சார்ஊழியர்களின் கரங்களுக்கே கிடைக்கின்றது. வியாபார நோக்க வெளியீடுகள் ஒரு குறிப்பிட்ட சிலருக்கே சென்றடைகிறது. எனினும் இவற்றின் தரம் சமீபகாலங்களிலே விருத்தியடைந்திருக்கின்றன.

இச்சமயத்தில் "டாக்டர் இல்லாத வீட்டில்" என்ற புத்தகத்தைப்பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்க வேண்டும் என நினைக்கின்றேன். ஆங்கிலத்தில் வெளிவந்தநூலொன்றை இந்திய நிலைமைகளுக்கேற்பத் திருத்தித் தமிழாக்கம் செய்துள்ளார்கள். இந்தப்புத்தகம் முக்கியமாக மருத்துவவசதிகள் உடனடியாகக் கிடைக்காத இடங்களிலும் வைத்தியர்கள் இல்லாத இடங்களிலும் வசிப்பவர்களுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்றஅடிப்படை நோக்கத்துடன் எழுதப்பட்டிருக்கின்றது இது அநேகமான உலகமொழிகளில், மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது

இலங்கையிலே சமூக சுகாதார ஊழியர்களுக்கு என இரு இதழ்கள் வெளிவருகின்றன

01.சுகாதார மஞ்சரி :- இவ் இதழ் மட்டக்களப்பு சுகாதார திணைக்களத்தினால் நோராட் நிதி உதவியுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

02.சுகமஞ்சரி - யாழ் பல்கலைக்கழக சமுதாய மருத்தவ துறை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் வெளியிடப்படுகிறது.

எனினும் இவ்விரு இதழ்களும் சில குறிப்பிட்ட கரங்களுக்கே சென்றடைவதால் இவ் வெளியீடுகளின் பயன் நேரடியாக மக்களை சென்றடைவதில்லை. வருங்காலத்தில் மருத்துவம் சம்பந்தமாக பல புத்தகங்கள் வெளிவரவேண்டும். அவை எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய எளிமையான மொழியில் எழுதப்பட வேண்டும். ஆனால் எங்கு மிக அவசியமோ, பொருத்தமோ அங்கு சில கடினமான சொற்களை அவற்றின் ஆங்கில வார்த்தைகளுடன் பயன்படுத்தலாம். பெரும்பாலும் இச் சொற்களிலிருந்து அவை எதைக்குறிக்கின்றன என்று புரிந்து கொள்ளும் வகையில் இச்சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும். நமது நாட்டில் தேவைகள், பழக்க வழக்கங்களுக்கு ஏற்ற விதத்தில் நமது எதிர்கால நடவடிக்கைகள் இருக்க வேண்டும். மேற்கு நாட்டுவைத்தியத்தையும், நாட்டு வைத்தியத்தில் மிகச் சிறந்ததெனக் கருதப்படுவதையும் ஒன்றாக இணைத்து நடவடிக்கைகள் எடுக்கும் போது இவ்விரண்டும் தனித்தனியே அளிக்கும் பலனைவிட அதிகப்பலனை அளிக்கும் என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது.

சாதாரணமாக மக்கள் தங்களின் பழக்கவழக்கங்களை மிகமெதுவாக தக்க காரணங்களோடு மாற்றிக்கொள்கின்றார்கள். தாங்கள் சரியானது என்று நினைப்பதை எளிமையாகப் பின்பற்றுகின்றார்கள் இந்தப் போக்கை நாம் சாதகமாக பயன் படுத்திக் கொண்டு திட்டமிட வேண்டும்.

மக்கள் தாங்களாகவே, தங்கள் சொந்தஆரோக்கியத்திலும் தங்கள்சமூக ஆரோக்கியத்திலும் அக்கறை கொண்டு பொறுப்புணர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே முக்கியமான மாறுதல்களை ஏற்படுத்த முடியும். இந்த இலக்கை மனதிலே வைத்துக் கொண்டு நமது எதிர்கால திட்டங்களை வகுத்துக் கொள்வோமேயானால் நிச்சயமாக ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி வீறுநடைபோட முடியும். அக்கறையும் பகிர்ந்து கொள்ளுதலுமே ஆரோக்கியத்தின் அடிப்படை.

பேதியின் சேதி, கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி, வேலூர்
நல்வழி, உங்கள் நலம்,
டாக்டர் இல்லாத வீட்டில் .... டேவிற் வெர்ணர்.

சட்டம், நீதித்துறை

சோ. தேவராசன்.
சட்டத்தரணி.

சனநாயக அரசொன்றின் இதயத்திலேயே மக்களின் இறைமை குடிகொண்டிருக்கிறது. நாட்டின் மீயுயர் அதிகாரம் அதன்பிரசைகளுக்கே உரித்தாக்கப்பட்டுள்ளது என்பதே அதன் பொருளாகும். மக்களின் மீயுயர் அதிகாரம் மும் முனைகளையுடையது.

(1) மக்களின் சட்டவாக்க அதிகாரம்
(11) மக்களின் நிறைவேற்று அதிகாரம்
(111) மக்களின் நீதித்துறை அதிகாரம்

இப்பிரேரணைகளின் குறிக்கோளாவது அதிகாரம் சமுதாயத்தில் ஆகச்சிறிய அமைப்புக் கூறுக்கும் கையளிக்கப்படக்கூடியவாறான அளவுக்கு பகிர்ந்தளிபதும் அதன்வாயிலாக தங்கள் இறைமையைக்கப்படுவப் பிரயோகிப்பதற்குப் மக்களுக்குள்ள வாய்ப்புக்களை கூடியவரை அதிகரிப்பதும் ஆகும்.

அதிகாரப்பரவலாக்கலின் அடிப்படையில் அரசியல்தீர்வொன்றுக்கான அவசியத்தை ஒப்புக்கொள்ளுதல் இலங்கை அரசியல் வரலாற்றில் ஒன்றும் புதிதல்ல. ஒற்றுமைக் குலைவின் விதைகள் துளிர்விட்டு இனக்கலவரம் உருவெடுக்கத் தொடங்கியதிலிருந்து இனப்பிரச்சினை பூ தாகாரமான ஒரு விருட்சமாக வளர்ந்திருக்கும் இற்றை நாள் வரை அரசியல் தலைவர்கள் இத்தேசிய பிரச்சினைக்கான தீர்வுகளை முன்மொழிந்த சம்பவங்கள் பல எமது அண்மைக்காலவரலாற்றில் மலிந்திருக்கின்றன. முக்கியமான பிரேரணைகளில் ஒரு சில வருமாறு.

(அ) 1957- இன் பண்டா- செல்வா உடன்படிக்கை

(ஆ) 1965- இன் டட்லி - செல்வா உடன்படிக்கை

(இ) 1987-இந்திய- இலங்கை உடன்படிக்கையும் 13-வது அரசியலமைப்பு திருத்தமும்.

(ஈ) 1988- ஜனநாயக மக்கள் சக்தியின் பிரேரணை

(உ) 1992- மங்கள முனசிங்க பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை.

(ஊ) 1994-ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபன காமினி திசநாயக பிரேரணைகள்

இத்தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் கடந்த 40 ஆண்டுகளாக அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வுக்கான எண்ணம் அரசியல் உரைகளில் மீண்டும் மீண்டும் தொனித்துக் கொண்டிருக்கும் ஓர் அம்சமாக இருந்து வந்துள்ளது என்பதனை இது தெளிவாகக் காட்டுகின்றது. எனினும் இந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியே கண்டன என்பது அவதானிக்கப்படற்பாலது.

முக்கியமான இரண்டு காரணிகள் அத்தோல்விக்கு ஏதுவாயமைந்துள்ளன. அவையாவன.

(1) பிரேரணைகளின் உள்ளார்ந்த பலயீனம்

(2) தீவிரக் கோணங்களிலான கருத்துக்களைக் கொண்டிருந்த பல்வேறு சக்திகளிடமிருந்து வந்த எதிர்ப்புக்களின் முன்னால் அரசியற் தலைமைத்துவத்தின் உறுதிப்பாடு தகர்க்கப்பட்டமை புரையோடும் போராட்டமே இதன் பயங்கர பெறு பேறானது. அது மட்டுமல்லாமல் எம்மைப் போரிற்கும், கலவரத்துக்கும் மரபுரிமையாளர்களாக்கியது. கலவரத்தால் விளைவிக்கப்பட்டதும் தொடர்ந்து இடம்பெற்று வருவதுமான உயிர்ச் சேதங்களினைச் சகித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாடே தள்ளப்பட்டுள்ளது. இக்கலவரத்திற்கு நிலையான தீர்வொன்றைக் காணும் முயற்சியினை மேற் கொள்ள பொது மக்கள் கூட்டணி அரசாங்கம் திட சங்கற்பம் பூ ண்டுள்ளது.

மேற் சொன்ன விபரங்களும் பிரகடனமும் நீதி, அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சின் வெளியீடான "அரசியல் அமைப்பு வரைவு ஏற்பாடுகளும் அதன் மீதான கருத்துரைகளும்" என்ற பிரசுரத்தில் அமைந்துள்ளன.

போரும் கலவரமும் மரபுரிமையாக்கப்பட்ட சூழலில் நாம் தமிழ்மொழிப் பிரயோகம் பற்றிப்பேசுகின்றோம். தமிழ்மொழி அமுலாக்கம் என்பது அரசால் மேற்கொள்ளப்பட வேண்டியது. 1972 - ம் ஆண்டு அரசியல் அமைப்பில் மக்களின் இறைமையின் மீயுயர் கருவி தேசியஅரசுப்பேரவையாக இருந்தது 1978-ம் ஆண்டு அரசியல் யாப்பு மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட்ட செயற் திறன் மிக்க ஜனாதிபதி மூலம் இறைமை பரிசோதிக்கப்பட்டது. மக்கள் பல இனங்களைச் சார்ந்தவர்கள். சிங்கள தமிழ்-முஸ்லீம்-பறங்கியர் பரந்துவாழும் பல்லின நாடான இலங்கையின் அரசியல் யாப்பு இந்தியா போன்று மதசார்பற்ற நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்தத் தவறியது. இலங்கை, இந்திய ஒப்பந்தத்தில் இலங்கை பல்லின, பல்கலாசார நாடு என எடுத்துச் சொன்ன பின்னரும் கூட இன்றுவரை புத்தமதம் அரசமதம் என்பது அரசியல்யாப்பின் தாரகமாகும்.

எமது நாட்டில் காலனித்துவ காலத்தில் சட்டம், நீதித்துறை அறிமுகப்படுத்தப்பட்டு பரவலாக்கப்பட்டது. ஆங்கிலமே அறிவுமொழி, அந்தஸ்து மொழி, அரியாசனமொழியாக அமைந்தது. எனவே இருமொழி பேசும் உத்தியோகத்தரிடையே குறிப்பாக தமிழ் அதிகாரிகள் சட்ட அறிஞர்களிடையே பிரச்சினை எதுவும் எழவில்லை.

பொதுமக்கள் அந்நிய ஆட்சியினரின் சட்டங்களுக்கு ஆட் படாமல் கோட்டு வாசல் மிதிக்காமல் வாழத்தலைப்பட்டனர். சட்டஅறிஞர்கள் ஆண்டகைகளின் பிரதிநிதிகளாக மேட்டுக்குடியினராக நிலப்பிரபுத்துவ, பழமைவாதச் சிந்தனை மேலிட்டோராய் காலனித்துவ கூட்டில் குடிபுகுந்தனர். விதேசிய வெறுப்பு பொதுமக்களை சட்டம், நீதித்துறையில் இருந்து தூர ஒதுக்கிவைத்திருந்தது. ஆங்கிலம் சட்ட நீதித்துறை மொழியாக அரசோச்சும் வரை தமிழ்மொழிப்பிரயோகம் பற்றிய தேவையோ அவசியமோ ஏற்படவில்லை

'தமிழும் சிங்களமும் ஆட்சிமொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்' என்ற முதலாவது குரல் 1932 -யூ லை 5ம் திகதி மாத்தறை சட்ட சபை அங்கத்தவர் திரு ஜி. கே. டபிள்யூ . பெரேராமூலம் பின்வரும் பிரேரணைகளுக்கான முன்னறிவித்தல் சட்டசபையில் முன்வைக்கப்பட்டன.

(1) எதிர்காலத்தில் எழுதுவினைஞர் அல்லது சிவில்சேவைக்கு நியமிக்கப்படும் ஒருவர் தமிழ் அல்லது சிங்களத்தில் உயர் தராதரம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(2) சிவில் அல்லது எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த ஒருவர் சிங்களம் அல்லது தமிழில் தேர்ச்சி (Proficiency) காட்டத்தவறினால் பதவியுயர்வு பெறத் தகுதியற்றவராவார்.

(3) உயர் குற்றவியல் நீதிமன்றங்களில் நியமிக்கப்படும் நீதிபதி அவரால் தமிழிலும் சிங்களத்திலும் நீதிமன்ற நடவடிக்கைகளை பதிவுகளை நடாத்தமுடியுமென நிரூபித்தாலன்றி நியமனம் பெறமுடியாது.

(4) வழக்கறிஞர்கள் தமிழிலும், சிங்களத்திலும் குற்றவியல் வழக்குகளை நடாத்த அனுமதிக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து சட்ட சபையில் 1943-யூ ன்-22ல் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன சிங்களம் அரசகருமமொழியாக வேண்டுமென்ற நோக்கில் முன்வைத்த விவாதம் முக்கியமானதாகும். எனது விருப்பம் தமிழும் சேர்க்கப்படவேண்டும். தமிழ் பேசும் மாகாணங்களில் தமிழ் அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என்றார். இங்கு தமிழ் (also) 'உம்' அந்தஸ்து பெற்றமை எமது கவனத்துக்குரியது. மட்டக்களப்பு உறுப்பினர் திரு. வி. நல்லைரெத்தினம் பிரேரணைக்கு திருத்தம் கொண்டு வந்தார்.

"சிங்களமும் தமிழும் நாட்டின் அரசகரும மொழியாக வேண்டும்" என்று முன் மொழிந்தார். இதனை கம்பகா சட்டசபை உறுப்பினர் திரு. R. S. S. குணவர்த்தனா வழி மொழிந்தார். நியமன உறுப்பினர் T. B. ஜாயா என்பவரும் "தமிழும் சிங்களமும் அரசகருமமொழியாக்கப்பட வேண்டும" என்றார். பருத்தித்துறை சட்டசபை உறுப்பினர் திரு. ஜி . ஜி . பொன்னம்பலம் "உயர்ந்த இனம் என்றபேரால் 2வது உலகயுத்த ஐரோப்பாவில் நடந்த படுகொலைகள் விளைவித்த பாடத்திலிருந்து நாம் ஒருமொழி, ஒரு இனம், ஒரு மதம் என்பதை வன்மையாக எதிர்க்க வேண்டும். இதனால் தான் நாம் (சிங்களம் மட்டும்) இந்தப்பிரேரணையை எதிர்க்கிறோம்" என்றார் (3) இதன் தொடர்ச்சியாக N. M பெரேரா கொல்வின் ஆர். டி சில்வா ஆகியோரின் விவாதங்களும் பின்னாளில் மொழிக் கொள்கை விவாதத்தில் முக்கியமானவையாகும். ஆனால் வரலாற்றில் இவை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

1956ம் ஆண்டு 33- ம் இலக்கத்தில் அரசகரும மொழிச் சட்டத்தின் மூலம் சிங்களம் மட்டும் அரியாசனத்தமர்ந்தது. 1958ம் ஆண்டு 28-ம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் தமிழ் மொழிக்கு இரண்டாம் தரஅந்தஸ்து - சலுகையாக வழங்கப்பட்டது. 1973-ம் ஆண்டு 14-ம் இலக்க நீதிமன்ற மொழிச்சட்டத்தின்படி தமிழ் வடக்கு-கிழக்கில் நீதிமன்ற நிருவாகமொழியாக ஏற்கப்பட்டது.

தமிழ் நீதிநிருவாகமொழியாகவும், நிருவாகமொழியாகவும் செயற்படாத பலசந்தர்ப்பங்களை 1983 வரை பாராளுமன்ற விவாதங்களிலும் பத்திரிகைக்குறிப்புகளிலும் பட்டறிவிலும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

தமிழ்மொழி; அந்நியரின்மொழி, தேசிய நலனுக்குக் குந்தகமான மொழி எனப் புரியப்பட்டது. தேசநலன், தேசபாதுகாப்பு என்பனவும் ஒருவழிப்பாதையாக உணரப்பட்டது. அடிப்படை உரிமைகளில் வரும் 12(2) ம் பிரிவுக் (அதாவது மொழி, இனம் காரணமாக பாரபட்சம் இருக்கக்கூடாது) காப்புவாசகத்தில் விதிவிலக்காக அவசியமான மொழி ஆகிய அந்தஸ்தை சிங்களமொழியே தட்டிக் கொள்கிறது என்பதை வாழ்நிலை அனுபவம் எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

சிங்கள அரசகரும மொழிச்சட்டம் அரங்கேறியதும் நாடு, தேசம், மக்கள் என்பது சிங்களத்தை மட்டுமே குறிக்கும் சொல்லாக மாறியது எனவே ஆங்கிலத்தில் கடமையாற்றிய தமிழர்கள் தமது வளத்தையும், வாழ்வையும் இழக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர் தமிழ்மொழியின் தனித்துவம், அந்தஸ்து, அமுலாக்கம்

ஆகியவற்றுக்காக தமிழ்த்தலைவர்கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தனர். தமிழ் மொழி அமுலாக்கத்துக்கு தமிழ் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இதற்கான சுற்று நிருபம் நீண்ட காலமாக அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காகக் காத்துக் கிடந்தது. இறுதியாக அரச கரும மொழி என்ற பதம் சிக்கலில் இருப்பதாக சட்டத்துறை தலைமை அதிபதி கூறிவிடுகிறார். இவை தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அ. அமிர்தலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், துரைரத்தினம், சிவசிதம்பரம் ஆகியோரின் விவாதங்கள் முக்கியமானவை.

சிங்கள தேசிய முனைப்பு என்பது தமிழ்தேசியத்திற்கான விதைப்பாகியது. சிங்கள- தமிழ் முரண்பாடு பிரதான பாத்திரம் பெற்றது. இம் முரண்பாடு இரத்தம் சிந்தும் அரசியலாகி யுத்தமாக வடிவெடுத்துள்ளமை இன்றைய யதார்த்தமாகும். எமது 1978 அரசியலமைப்பினை இந்த வரலாற்றுப் பின்னணியிலேயே தமிழ்மொழிப்பிரயோகம் தொடர்பான பிரச்சினைகளை நாம் புரிந்துகொள்ள முயலவேண்டும். அரசியல் யாப்பின் 4-ம் அத்தியாயம் 'மொழி' பற்றியதாகும். இதில் 18-வது உறுப்புரையின் படி சிங்களம் அரசகரும மொழியாகும். பின்னர் 13-வது அரசியல் திருத்தத்தின் படி 1987-ல் 18(1)-ம் பிரிவாக இது மாற்றப்பட்டு 18(2)-ம்பிரிவில் தமிழும் அரசகரும மொழியாகும் என்று ('also') அந்தஸ்தைத் தட்டிக் கொண்டது. உறுப்புரையில் சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல் சிங்களமும் தமிழும் அரச கருமமொழிகளாகும் எனப்போடப்படவில்லை என்பது அடிப்படையில் வரலாற்று ரீதியான ஒற்றைமொழிச் சிந்தனையையே வெளிப்படுத்துகிறது.

இலங்கையின் நிர்வாகமொழி பற்றி 22-ம் உறுப்புரை எடுத்துக் கூறுகிறது 22(1)ம் பிரிவின்படி அரசகரும மொழியே இலங்கையின் நிருவாக மொழியாகும் பின்னர் 16-வது திருத்தச் சட்டத்தின் படி 22(1) -ம் பிரிவில் தமிழும் சிங்களமும் இலங்கை முழுவதும் நிர்வாக மொழியாகும். வடக்கு-கிழக்கு தவிர்ந்த மாகாணங்களில் சிங்களம் நிர்வாகமொழியாகும் என்றுமாற்றப்பட்டது. இதில் இந்தத் திருத்தத்திற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? ஏற்கனவே இருந்த 'அரச கருமமொழி' என்பதற்குப் பதிலாக அரச கரும மொழிகள் நிர்வாக மொழிகளாகும் என்ற படி போட மறுத்தமை ஏன்? ஏனெனில் சிங்களமொழி அரச கரும மொழியாக இருந்தபோது இருந்த விசேட நிலைமை தமிழுக்கு இருக்கக் கூடாதென்ற நிலைப்பாடேயாகும்.

22(1) -ம் பிரிவுக்கு காப்புவாசகமாக, ஏதாவது மாகாணத்தில் சிங்கள அல்லது தமிழ் மக்கள் சிறுபான்மையினராக இருந்து ஏதாவதொரு உதவி அரசாங்க அதிபர் அலகில் அவர்கள் முழுமையாக இருந்தால் அப்பகுதியில் மாகாணத்தின் மொழி தவிர்ந்த மற்றைய மொழியை நிர்வாகமொழியாகப்பயன்படுத்தும்படி ஜனாதிபதி பணிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. இது வடக்கு-கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் சிங்களமொழி நிர்வாகமொழியாகப் பயன்படலாமோ என்றஅச்சம் ஏற்படுகிறது. ஜனாதிபதி பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவராவர். அம்பாறை, சேருவில ஆகிய பகுதிகளையும் வெலிஓயாவையும் இவ்வாறு பணிக்கலாமா? இதே நடைமுறை தமிழ் மக்கள் வாழும் சிங்களமாகாணங்களின் உதவிஅரசாங்கஅதிபர் பிரிவுகளில் செயற்படுமா? ஜனாதிபதி இதில் தனது தன்மதி அதிகாரத்தைப் பயன்படுத்துவாரா? மத்தியமாகாணத்தில் அம்பேகமுவ, நுவரெலியா முஸ்லிம் மக்கள் வாழும் புத்தளம், சிலாபம் தர்காரவுண், அக்குறணை,கம்பளை, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் சாத்தியமாகுமா? அல்லது வடக்கு-கிழக்கு இணைப்பைத் துண்டுபோடும் திட்டத்துக்கு துணை போகுமா என்பது தமிழ்பேசும் தரப்பினரின் கேள்விகளாகும்.

தமிழும் அரசகரும மொழியாகும் என்பது வடக்கு-கிழக்குக்கு மட்டுப்படுத்தப்பட்டதா? ALSO என்பது உயர்நீதி மன்றத்தில் பொருள் கோடல் முறையில் சம அந்தஸ்த்துக்குச் சாத்தியமாகுமா? இல்லை என்பதே பதிலாகும். சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக இருந்த போது அதற்கிருந்த விசேட நிலமைகள் தமிழுக்கு வழங்கப்படுவதை தவிர்ப்பதற்காகவே 25(A) பிரிவு 16-வது அரசியல் அமைப்புத்

திருத்தத்தில் புகுத்தப்பட்டுள்ளதெனலாம். இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் ஏதாவதொரு சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமிடையில் முரண்பாடுகள் தோன்றினால் இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளே நடைமுறையிலிருக்கும் என்பது கவனத்திற்குரியது. (13 வது திருத்தம் 1987-11-04இல் வந்தது. 16வது திருத்தம் 1988 டிசம்பரில் வந்தது)

அரசியலமைப்பின் 24-ம் உறுப்பு நீதிமன்றங்களின் மொழியாக இலங்கை முழுவதும் சிங்களமும் தமிழும் இருக்க வேண்டும் என்கிறது. தமிழ் நிர்வாக மொழியாக இல்லாத பகுதிகளில் சிங்களம் நீதிமன்றங்களில் உபயோகிக்கப்படும் மொழியாகும் என 16வது திருத்தச் சட்டத்தின் படி மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. முதலில் அரச கரும மொழியே நீதி மன்ற மொழியாகும் என இருந்தமையை மாற்றி சிங்களமும் தமிழும் என குறிப்பிட்டமை தமிழுக்கு 13-வது அரசியல் திருத்தத்தில் வழங்கப்பட்ட அரச கரும மொழி அந்தஸ்தை தட்டிப்பறிப்பதற்கேயாகும்.

24(2)-ம் பிரிவின் படி எவரேனும் திறத்தவர் அல்லது விண்ணப்பகாரரை அல்லது அத்தகையதிறத்தவரை அல்லது விண்ணப்பகாரரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சட்டமுறையாக உரித்துடைய எவரேனும் ஆள் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் நீதிமன்றில் நடவடிக்கை தொடரவும் விண்ணப்பகாரரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சட்டமுறை வழக்குரைகளையும் பிற ஆவணங்களையும் சமர்ப்பிக்கவும் நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கு பெறவும் உரித்துடையவராவார்.

கொழும்பு மாவட்ட விசேட நீதிபதி 3007/ RE என்ற வழக்கில் எதிராளி தனது வாதங்களை தமிழில் தாக்கல் செய்தபோது அதனை நிராகரித்து சிங்களத்தில் தாக்கல் செய்யும்படி நெறிப்படுத்தினார். எதிராளி மேன்முறையீடு செய்தார். மேன்முறையீட்டு நீதி மன்றம் இந்தநிராகரிப்பு செல்லுபடியற்றதெனத் தீர்ப்பளித்தது எனினும் 125வது உறுப்புரை தொடர்பில் அரசியல் யாப்புப் பிரச்சினை இருப்பதனால் உயர் நீதி மன்றத்திற்கு இந்த விடயத்தைப் பாரப்படுத்தியது.

இந்தவிடயங்கள் ஆராயப்படுகையில் (Classification) வகுப்பாக்கம் என்ற வகையில் உயர்நீதிமன்ற பொருள்கோடல் வேறுபடலாம்.

1981 இன் 18ம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச்சட்டம் 1991 மே 27-ல் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்தச்சட்டத்தில் 28 (1) -ம் பிரிவின் படி அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் இயல்பான மொழியில் கருமங்களை ஆற்றுவதற்கு அல்லது பிரதிகளை வழங்குவதற்கு வேண்டுமென்றே தவறினால் அல்லது அசட்டை செய்தால் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதின் மேல் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது மூன்றுமாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

சிங்களஅதிகாரத்துவ மேலாண்மைக்கு சார்பாக தமிழ்மக்களிடமுள்ள மனத்தடை, தயக்கம், அலட்சிய மனப்போக்கு ஆகியவற்றை விமர்சித்து பணியமறுக்கும் மனோபாவம், தனிமனித ஆளுமைவிருத்தி ஆகியவற்றை ஊக்கப்படுத்தும் தமிழ் சமூக பொதுநலச் சிந்தனை கொண்ட சமூக அமைப்புகள் கூட்டு நடவடிக்கைகள் மூலம் இலங்கை முழுமைக்குமான தமிழ் மொழிப் பிரயோகம் வேண்டி இயக்கம் நடாத்துதல் இக்காலச் சூழலில் அவசியமாகும். அரசியல் யாப்புக்கான 13வது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் 2/3 பங்குவாக்கால் நிறைவேற முதல் உயர் நீதி மன்றத்தில் நாற்பதுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்டன. இத் திருத்தங்கள் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டுமென்று சலசலப்பை ஏற்படுத்தியது. உயர் நீதிமன்ற நிறைகுழாம் வேறுபட்ட கருத்துகளை கொண்டிருந்தது. ஒரு வாக்கு வேறுபாட்டால் நீதிமன்றம் 154ம் அரசியல் யாப்பு உறுப்புரை திருத்தங்களை அங்கீகரித்தது. அவ்வழக்கு விபரங்கள், விவாதங்கள்,

தீர்ப்புக்கள், பாராளுமன்ற விவாதங்கள் எமது சமகாலமக்கள் இறைமை என்பதும் மக்கள் ஆளுமை என்பதும் சிங்களம் தமிழ் என முரண்படுவதும் கவனத்துக்குரியன.

மாகாணசபை நீதிமன்றங்களுக்கு மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை வழங்கின. 154 p(3) உறுப்புரை ஒரேநீதிமன்றம் முதனிலை நியாயாதிக்கத்தையும் மேன் முறையீட்டு நியாயாதிக்கத்தையும் வழங்குதல் நீதித்துறைத் தத்துவத்துக்கு ஏற்புடையதா? சில வழக்குகளில் மேன்முறையீட்டுக் காலதாமதம் நீதியை மறுப்பதாகாதா? என்ற கேள்விகளுடன் அடிப்படை மனித உரிமை மீறல் களுக்கெதிரான வழக்குகளைத் தாக்கல் செய்து நிவாரணம் பெறும் உரிமை இந்நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சட்டக்கல்வி 1970களின் முற்கூறிலிருந்து தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் தமிழில் கல்வி கற்ற சட்டத்தரணிகள் அதனை தமிழில் பயிற்சி செய்தற்கு ஏற்றவாறு நீதிமன்றங்களில் தமிழில் நிருவாகம் அமைவது வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த மாநிலங்களில் சாத்தியப்படவில்லை. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிருவாக மொழி தமிழென்பதனால் நீதிமன்ற பதிவேட்டு மொழி தமிழாக அமைந்தது. நீதிபதி முன்பாக சட்ட விவாதங்கள் ஆங்கிலத்திலேயே நடை பெற்றன. ஓரிரு சிரேஷ்ட சட்டத்தரணிகளே தமிழில் சிறப்பாக வாதிடும் வழக்கத்தை பின்பற்றினர். யாழ்ப்பாணத்தில் திரு. விஸ்வநாதன், ராஜராஜேஸ்வரன் தங்கராஜா, வீ. என். நவரத்தினம் போன்ற சட்டத்தரணிகள் முன்னுதாரணமாகச் செயற்பட்டனர். தமிழில் கற்று வெளியேறிய சட்டத்தரணி தொழில்சார் திறமை பெற்றவர்களாக சிறக்க வழியேற்படவில்லை 1985களின் பின்னர் நீதிமன்றங்கள் செயலிழந்து போனமையும் முக்கியமானது. தமிழில் சட்டக்கல்வி பெற்றவர்கள் ஆங்கில ஆற்றல் அருகியிருப்பின் தொழில்சார் போட்டியில் முதன்மை பெறமுடியாது முடமாகிவிடுகின்றனர். எனவே தமிழ் மொழி மூலச் சட்டக்கல்வி என்பது நீதித்துறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி தமிழ்மொழிப் பிரயோகத்தைச் செய்வதற்குப் பதிலாக சட்டம், நீதித்துறையில் தேக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் சட்டக்கல்வி என்பது கொழும்பு பல்கலைக்கழகத்திலும் 'நாவல' திறந்த பல்கலைக் கழகத்திலும் கொழும்பு சட்டக் கல்லூரியிலும் மட்டுமே உண்டு. இது கொழும்பையேமையமாகக் கொண்டுள்ளது. திறந்த பல்கலைக்கழகங்களுக்கு (Regional centres) பிராந்திய நிலையங்கள் உண்டு. வடக்குகிழக்கில் இவை இயங்கவில்லை. கண்டியில் உள்ள பிராந்திய நிலையத்தில் சட்டக்கல்வி உண்டு. ஆனால் தமிழ் மொழியில் இல்லை. பல்கலைகழகச் சட்டபீடத்தில் ஒரு பாடம் ஒரு மாதத்தில் 90 மணித்தியாலங்களெனில் திறந்தபல்கலைக்கழகத்தில் ஆக 40 மணித்தியாலங்கள் மட்டுமே

நீதிநிருவாகம், நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழில் ஆரம்பித்து நடாத்தப்படும் போது மட்டுமே சட்டக்கல்வி தமிழில் நடத்தப்படுவதன் பயன்பாட்டை பெற முடியும் தற்போது வடக்கு-கிழக்கில் உள்ள நீதிமன்றங்கள் பல கடந்த தசாப்பத்தில் பல நெருக்கடிகளுக்குள்ளாயின. அரசு இயந்திரத்தின் ஒரு பகுதி நீதி மன்றம் என்ற கருத்து மேலீட்டினால் வடக்கில் இலங்கை அரசின் நீதிமன்றங்கள் இயங்கமுடியாமல் புதிய நீதிமன்றங்கள் இலங்கைச் சட்டங்களுக்கு மாறாக தோற்றம் பெற்றன. கடந்த ஐந்து வருடங்களாக அவை செயற்பட்டன. நீதி மன்றங்களில் சட்டத்தரணிகள் சகலரும் தமிழிலே தமது விவாதங்களை நடாத்தினர். ஆங்கிலத்தின் மெல்லிய குரலைக் கூட அங்கு கேட்க இயலவில்லை 90கள் வரை காணிக்கந்தோர் பதிவேட்டு மொழி ஆங்கிலத்திலேயே இருந்த நிலை மாறி தமிழில் எந்த வித கூச்சமுமின்றி அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நிர்வாகமொழியாக தமிழ் அங்கீகரிக்கப்பட்டு 20 வருடங்களின் பின்பே வடக்கில் காணிக்கந்தோரில் தமிழ் பிரயோகம் சாத்தியமானதென்பது கவனத்திற்குரியது. வவுனியாவில் நீதிமன்ற மொழி நீதிநிருவாகம் ஆங்கிலத்திலேயே நடைபெறுகிறது. இல்லையெனில் சிங்களத்திலேயே நடைபெறச் சாத்தியம் இருக்கிறது.

தமிழில் சட்டக்கல்வி என்பது பல, முன்தேவைகளைக் கொண்டுள்ளது. கொழும்பு தவிர பிற இடங்களில் சட்டக்கல்வி கொண்டு செல்லப்படாமை, நீதி நிருவாகம் மத்தியப்பட்டிருக்க வேண்டும் அது பரவலாக்கப்படக் கூடாது என்ற மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடேயன்றி வேறல்ல. இது தெற்கில்வாழும் சிங்களவர்களுக்கும் வடக்குகிழக்கில் வாழும் தமிழ்-முஸ்லீம் மக்களுக்கும் தமது மொழிகளின் நீதித்துறை அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் தமது இறைமையை இழந்துள்ள நிலையினையே காட்டுகிறது. தமிழிலோ-சிங்களத்திலோ ஆக்கப்படும் புதிய நியதிச் சட்டங்கள் தவிர முழு நூல்களும் ஆங்கிலத்திலேயே உள்ளன. சட்ட நூல்கள் தமிழிலும் இல்லை. 1956 இலிருந்து இன்று வரை சிங்களத்திலும் இல்லை. எனவே தாய் மொழியில் சட்டக்கல்வி என்பது வெறும் ஏட்டுச் சுரக்காயே. தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்ப்புகள் செய்யப்பட வேண்டும். சர்வதேச சட்ட அறிக்கைகள் , சஞ்சிகைகள், நூல்கள், சகல நீதிமன்றங்களின் சட்ட நூலகங்களில் கிடைக்கவேண்டும். சட்ட உயர்தொழில் தனிப்பட்ட தொழில்சார் போட்டிக்குட்பட்டிருப்பதனால் சாதாரணமக்களைச் சென்றடைவதற்கு 21-ம் நூற்றாண்டும் சாதகமாக இருக்குமோ என்பது சந்தேகமே. வடக்கு யுத்தச் சூழலில் சட்டநூல்கள், கொண்ட நூலகமும் மொழி பெயர்ப்புகளும் 'றெவிரச' வரை வேகத்துடன் நடந்து முடிந்தமை தமிழில் சட்டக்கல்வியும், நீதித்துறைத் தமிழ் மொழிப் பிரயோகமும் அதிகாரப் பகிர்வில் மக்களை சென்றடையும் அவசியத் தேவையில் நீதியின் ஆவேசத்தையும் தரிசிக்க முடிகிறது. ஒரு மனிதன் தனக்குத் தெரியாத சட்டங்களால் ஆளப்படுவதும் அதனால் தண்டனைக்குள்ளாவதும் அபத்தமானது ஆக்கப்படும் சட்டங்கள் அனைத்தும் மட்டுமன்றி ஏற்கனவே உள்ள சட்டங்களையும் ஒருவன் தெரிந்திருக்க வேண்டும் என்பதே நீதித்துறை வேண்டும் முன்நிபந்தனையாகும். எனவே சட்டம் தெரியாது என்பது ஒரு சாட்டாகாது என்பது நீதித்தத்துவஇயலின் ஒரு கோட்பாட்டு நெறியாகும். இலத்தீன் மொழி மட்டுமே சட்ட மொழி என்ற காலம் மறைந்து விட்டது. ஆங்கிலம் சட்ட மொழி என்ற மாயை எம்மை விட்டு அகலாதவரை தமிழ்-சிங்கள மொழிகளில் சட்டக்கல்வி சாதனைகளைப் படைப்பது கடினமென்பதுடன் நீதித்துறையில் பொதுமக்களின் இறைமைப் பிரயோகமே சாத்தியமற்றுவிடுகிறது.

உயர்நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் நிர்வாகம், பதிவேட்டு நடவடிக்கை மொழி ஆகியன ஆங்கிலத்தில் மட்டுமேயுள்ளன. 1956-ம் ஆண்டு சிங்கள அரச கரும மொழி 1978-ம் ஆண்டு அரசியல் அமைப்பில் 13வது திருத்தத்தின்படி தமிழும் அரசகரும மொழி என்ற போதும் இவ்விருமொழிகளும் பிரயோகிக்கப்பட இயலவில்லை.அரசியல் அமைப்பு ஆங்கிலத்திலேயே அங்கீகரித்துள்ளது

வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 24(2) -ம் உறுப்புரையின் படி தமிழும் பங்கு பெறமுடியும் எனக் கூறப்பட்ட போதும் மொழிபெயர்ப்பு, தட்டச்சு ஆகிய வசதிகளின்மை வெற்றுச் சாட்டாகிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக சிங்கள மனோபாவம் இவற்றுக்கு சாதகமாக இல்லை என்பதுடன் வழக்கின் திறத்தவர், சட்டத்தரணிகள் தமிழராய் இருப்பினும் சாதகமான தீர்ப்புப் பெறும் தனிப்பட்ட விருப்பில் இத்தகைய மொழி அமுலாக்கலில் அவர்கள் அக்கறைப்படுவது அவர்களின் வழக்கு விடயப் பொருளைப் பாதித்துவிடுமென அஞ்சுகின்றனர். வடக்கு-கிழக்குக்கு வெளியே நீதிமன்ற நிருவாக மொழி சிங்களம் என்பதனால் முதநிலைநியாயாதிக்க நீதிமன்றமான மஜிஸ்ரேட் நீதிமன்றங்கள், மாவட்ட நீதி மன்றங்கள் தமது நிர்வாகமொழியாக சிங்களத்தையே பயன்படுத்துகின்றனர். தமிழ் சந்தேகநபர்கள் இன்று பெருமளவில் அதிகரித்துள்ள சூழலிலும் கொழும்பில் பெருமளவில் தமிழ் முஸ்லீம் மக்கள் வாழுகின்றபோதும் தமிழில் நீதி நிருவாகத்தை ஏதேனும் ஒரு பகுதியிலாவது நடாத்தும் படி ஜனாதிபதி பணித்தால் என்ன குறைந்தா போய்விடும் ?

இதனால் தமிழ் பேசுவோர் தமக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட சிங்களத்தில் மட்டுமுள்ள நீதிமன்றங்களின் ஆவணங்களையோ, குற்றச்சாட்டையோ விளங்க முடியாதுள்ளனர். விளக்கம் போதாமை காரணமாக வழக்கினை ஒழுங்காக நடத்த முடியாதுள்ளது.

மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்யும் தமிழ் பேசும் ஒருவர் பல இடர்பாடுகளை எதிர்கொள்கிறார். நீதிமன்றங்களின் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர் இல்லாமை அல்லது போதாமை, இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமென்ற அரசின் அசட்டை காரணமாகவும் அலட்சிய மனோபாவத்தாலும் தமிழ் பேசும் மக்கள் தமது வழக்குகளை சிங்களத்திலேயே தாக்கல் செய்கின்றனர்.

இருதரப்பாரும் தமிழர்களெனினும் சிங்களத்திலேயே தாக்கல் செய்யப்படுகிறது.

சிங்களத்தில் வழக்குப் பதிய வேண்டிய காரணத்தால் கட்சியினர் தமக்குத் தெரிந்த பிற மொழியில் வழக்கைத் தயாரித்து விட்டு அதற்குச் சிங்களமொழி பெயர்ப்பைப் பெறும் நிர்ப்பந்தம் உள்ளது. அத்துடன் நீதிமன்றத்தில் தமக்கு தெரிந்த மொழியில் ஆவணம் இருக்க வேண்டுமென்பதனால் கட்சிக்காரர் தமது மொழியில் அல்லது தமக்கு தெரிந்த ஆங்கிலத்திலும் தட்டச்சு செய்வதுடன் சிங்களத்திலும் செய்ய வேண்டி ஏற்படுகிறது

ஒருவர் தமக்குத் தெரியாத ஒரு மொழியில் இன்னொருவரூடாக மொழிபெயர்ப்பதால் அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளவை தமதுமொழியில் தயாரிக்கப்பட்ட அதே நிகழ்வை, சட்டக்கருத்தை உள்ளடக்கியுள்ளனவா என்பதில் மொழி பெயர்ப்பாளரிலேயே தங்கியுள்ளனர். இதனால் மொழி பெயர்ப்பின் தவறு வழக்குகளை மோசமாக பாதித்தமைக்கான சந்தர்ப்பங்கள் உண்டு.

தகுதிபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்கள் குறைந்த அளவில் வெகுசிலரே இருப்பதனால் வழக்குத் தாக்கல் செய்வதிலும் வேறு ஆவணங்கள் தயாரிப்பதிலும் பெருமளவு தாமதம் ஏற்படுகிறது. அத்துடன் மொழிபெயர்ப்பாளர் ஒரு சிலரென்பதனால் அவர்களின் ஊதியமும் அளவுக்கதிகமாகி விடுகிறது.

இருமொழிகளிலும் வழக்கைத் தயாரிப்பதனால் சிங்களப்பொதுமகன் செலவிடும் பணத்திலும் பார்க்க இருமடங்கு செலவாகிறது.

சிங்கள மொழியில் ஆவணங்களை மொழி பெயர்ப்பதால் தமிழ் பேசும் திறத்தவர் மட்டும் மொழி பெயர்ப்புக்கு மேலதிக செலவு செய்யவேண்டி ஏற்படுகிறது

வழக்கை நடாத்தும் பொழுது மற்றத்தரப்பார் சமர்ப்பிக்கும் ஆவணங்களும் நடவடிக்கைகள் சிங்களத்தில் பதியப்படுவதனால் அவற்றினையும் தமிழ் பேசும் ஒருவர் தமது மொழியில்மொழி பெயர்க்கக் கட்டாயப் படுத்தப்படுகிறார். எனவே மொழி பெயர்ப்பின் நம்பகத் தன்மையிலேயே அவர் வழக்குத் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

போதிய மொழி பெயர்ப்பாளர்கள் இல்லாமையினால் வழக்குகள் அளவுக்கு மீறிய காலதாமதத்தையும் பெறுகின்றன. நீதி தாமதப்படுவது என்பது நீதி மறுக்கப்படுவதாகிறது.

"சட்டத்தின் முன் யாவரும் சமம்" என்பது எமது நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் நடைமுறையில் பொருத்தமற்ற தாக்கப்பட்டுள்ளது.

நீதி மன்றங்களில் கட்சிக்காரர் தமிழராயிருப்பினும் நீதிபதிகள் கட்சிக்காரருக்குப் புரியாத சிங்களத்திலேயே தீர்ப்புகளை வாசிப்பது நடைமுறையாகிவிட்டது. மொழிபெயர்ப்பும் வழங்கப்படுவதில்லை. எனவே ஒருவர் தமக்கெதிராக வழங்கப்படும் தீர்ப்பு என்ன என்பதையும் அதன் காரணம் என்ன என்பதையும் உடனடியாக அறிய முடியாது. தீர்ப்பின் பிரதியை நீதி மன்றத்தில் இருந்து பெறப்பல நாட்கள் காத்திருக்க வேண்டி ஏற்படுகிறது இத்துடன் மொழிபெயர்ப்புக்கும் பலநாட்கள் அலைய

வேண்டியுள்ளது. எனவே தனது தீர்ப்பை அறியப் பலநாட்கள் பொறுப்பதுடன் மேலதிக செலவையும் தமிழ்பேசும் ஒருவர் பொறுக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் மேன் முறையீடு செய்வதெனில் ஒருவர் 14 நாட்களினுள் அறிவித்தல் கொடுக்க வேண்டுமென்ற சட்டவிதியால் தமிழ்பேசும் ஒருவர் மேலதிக சிரமத்துக்கும் ஆளாகிறார்.

சட்டப்புத்தகங்களில் நீதியிருப்பதால் மட்டும் நீதி வழங்க முடியாது. நீதிமன்ற அலுவலகங்களில் நடவடிக்கைகளில் அரசியல் சட்ட முறை மட்டுமன்றி இயற்கை நீதி என்ற கோட்பாட்டுக்கமையவேனும் சகலசமூகத்தினருக்கும் முழுமையாக நீதி வழங்கப்படுவது நாகரிக மிக்க இன்றைய சமூக அடிப்படைத் தேவையாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்ற ஒப்புதல் மட்டுமே சான்றாகக் கொண்டு ஒருவருக்கெதிராகத் தீர்ப்பு வழங்க இயலும். எனவே பொலீஸ் நிலையத்தில் தமிழ் தெரியாத பொலீசார் ஒருவர்- மொழிபெயர்ப்பு அங்கீகாரம் பெறாத ஒருவர் தமிழ் பேசும் ஒருவரின் ஒப்புதல் வாக்கு மூலத்தை, தனக்குத்தெரியாத மொழியில் குற்ற ஒப்புதல் செய்வதனை எவ்வாறு சான்றாகக் கொள்ள முடியும். இதனை எவ்வாறு நீதிபதி புரிந்து கொள்வது? இது பற்றிய நீதியை நாம் எங்கே தேடுவது? அண்மையில் 6580 / 94-ம் இலக்க மேல் நீதிமன்றவழக்கில் மொழிபெயர்த்த சாட்சியின் தமிழ்அறிவைப் பரிசீலிக்க தமிழில் குறுக்கு விசாரணை நடந்த சம்பவம் ஒன்று உள்ளது. பொலீஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு செய்வது எந்த யுகத்தில் சாத்தியமோ?

யாரிடம் நோவோம்? யார்க் கெடுத்துரைப்போம்?

எல்லோரும் இந்நாட்டு மன்னர்! ஓம் நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்.

நன்றி

சட்டத்தரணி

இ. தம்பையா

சட்டத்தரணி ஜெகந்நாதன்

முதுநிலை விரிவுரையாளர். வி ரி தமிழ்மாறன்

உசாத்துணை நூல்

OFFICIAL LANGUAGE IN SRILANKA - ஆ. தேவராசன்

☐

இணைப்பு

குழு : 1 மாணவர்களுக்கான உப பாடநூல்களைத் தயாரித்தல்

01. மருதூர் ஏ. மஜீத் பிரதிக்கல்விப்பணிப்பாளர்
02. சோ. தேவராசன் சட்டத்தரணி.
03. திருமதி. எஸ். சக்கரவர்த்தி உதவிக்கல்விப்பணிப்பாளர்.
04. பத்மா சோமகாந்தன் ஓய்வுபெற்ற அதிபர்.
05. திருமதி. செ. கந்தையா அதிபர்.
06. ஏ. எச். ஏ. பஷீர் பிரதிக்கல்விப்பணிப்பாளர்
07. சி. கமலநாதன் கல்விப்பணிப்பாளர்.
08. செல்வி. கி. சி. இராஜரத்தினம் இணைந்த பல்கலைக்கழக பணிப்பாளர
09. செ. பாலசிங்கம் அதிபர்.
10. திரு. செ. மகேஷ் சேவைக்கால பயிற்சி ஆலோசகர்.

குழு : 2 தமிழ்மொழிப் பிரயோகத்தை அடிநிலைவரை கொண்டு செல்லுதல்.

01. சு. சிவரத்தினம் விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்
02. இ. யுவேந்திரா விஞ்ஞானப்பட்டதாரி, பொறியியல்.
03. க. சிதம்பரநாதன் விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம் .
04. எம். பௌஸர் பத்திரிகையாளர்.
05. வி. ஜெயமுருகன் வெளியீட்டாளர்.
06. தெ. மதுசூதனன் பத்திரிகையாளர்.
07. சா. திரிவேணி சங்கமம் தகவல் உத்தியோகத்தர், கைத்தொழில் திணைக்களம்.
08. சி. திருநாவுக்கரசு நாடக ஆசிரியர்.
09. செ. விந்தன் ஆசிரியர் (நாடகம், தமிழ்)
10. சி. சிவபாதம் எழுதுநர், சுகாதார அமைச்சு. வடக்கு-கிழக்கு மாகாணசபை
11. அ. கனககந்தரம் உதவிக்கல்விபணிப்பாளர், வவுனியா.
12. சி. சுரேஷ் இணைந்த பல்கலைக்கழகம், வவுனியா.
13. சு. ஸ்கந்தராசா கூட்டுறவுப் பரிசோதகர்.

குழு : 3 — பள்ளிப்படிப்பின் இறுதி முதல் மூன்றாம் கல்வி நிலையில் தமிழ் பேசும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்.

01. பேராசிரியர். சோ. சந்திரசேகரம்	பல்கலைக்கழகம், கொழும்பு.
02. மு. இ. அ. ஜபார்	திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்
03. திருமதி. பத்மினி சிதம்பரநாதன்	ஆசிரியை.
04. தே. தேவானந்தன்	மாணவன், இரண்டாம் வருடம். யாழ் பல்கழைக்கழகம்
05. சு. சுரேஷ்குமார்	மாணவன், இணைக்கப்பட்ட பல்கலைக்கழகம், வவுனியா.
06. ந. தயானந்தன்	மாணவன், இணைக்கப்பட்ட பல்கலைக்கழகம், வவுனியா.

குழு : 4 — கலைச்சொல்லாக்கம்

01. திரு. கு. சோமசுந்தரம்	தேசிய கல்வி நிறுவகம்.
02 நீர்வை பொன்னையன்	எழுத்தாளர்.
03. து. நவசிலிங்கம்	பொறியியற் சேவைகள் அமைச்சு
04. த. யுவராஜன்	மாவட்ட கல்வித்திணைக்களம், மட்டக்களப்பு.
05. வேலானந்தன்	உதவிக்கல்விப்பணிப்பாளர்.
06. வாசுகி ஜெய்சங்கர்	ஓவியை
07. றூபி வலன்ரீனா	கிழக்குப் பல்கலைக்கழகம்.
08. அன்னலட்சுமி இராஜதுரை	பத்திரிகையாளர்.
09. நா. சோமகாந்தன்	எழுத்தாளர்
10 எஸ் எதிர்மன்னசிங்கம்	உதவிப்பணிப்பாளர் பண்பாட்டலுவல்கள் கல்வி அமைச்சு
11 எஸ். சுந்தரலிங்கம்	திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்.
12 திருமதி. எஸ். சூரியமூர்த்தி	பணிப்பாளர் (உடற்கல்வி)

குழு : 5 — நடைமுறைத்தமிழ்

01 திரு சி ஜெய்சங்கர்	விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்
02. திரு. க. ஸ்ரீகணேசன்	விரிவுரையாளர்,இணைக்கப்பட்ட பல்கலைக்கழகம்.
03 திரு. சி தங்கவேல்	எழுத்தாளர்.
04. திரு. மா கருணாநிதி	விரிவுரையாளர்,கொழும்பு பல்கலைக்கழகம்.
05 செல்வி. மா மகேஸ்வரலிங்கம்	ஆசிரிய ஆலோசகர்.
06 செல்வன். த. விஜயசேகரன்	மாணவன், இணைக்கப்பட்ட பல்கலைக்கழகம்,

பள்ளிப்படிப்பின் இறுதி முதல் மூன்றாம் கல்வி நிலையில் தமிழ்பேசும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்.

1. ஆங்கிலம் முக்கியம் பெறுவதால் தமிழ்மொழியில் வாய்ப்புக்கள் இல்லாமை. மூன்றாம் நிலைக்கல்வியில் வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டும். இதன் முக்கியத்துவம் என்னவெனில் 13 வருட காலம் தமிழில் கல்விகற்றலாகும்.

2. தமிழ்மொழியில் உள்ளவாய்ப்புக்களில் உச்சப்பயன்பாட்டைப்பெறாமை. அதற்கான புள்ளிவிபரங்கள் எடுத்து உடன் நடவடிக்கை எடுத்தல்.

3. மூன்றாம் நிலைக்கல்வியில் பல்வேறு துறைகள் இல்லாததால் தமிழ்மாணவர்கள் கல்வி கற்கமுடியாதுள்ளது. இதற்காக பல்வேறுதுறைகளை தமிழ்மொழியில் அறிமுகப்படுத்தல்.

4. விரிவுரையாளர், போதனாசிரியர்கள் பற்றாக்குறை. இதற்காக நன்கு பயிற்சிபெற்ற போதனாசிரியர்கள், விரிவுரையாளர்களை நியமித்தல்.

5. தமிழ்மொழியில் போதிய உசாத்துணை நூல்கள் உருவாக்கப்படல். பல்வேறு துறைகளில் இதற்கான துறைசார்ந்தபுத்தகங்களும் தமிழில் உடனுக்குடன் மொழிபெயர்க்கக்கூடிய வசதியை ஏற்படுத்தல்.

6. தமிழில் கற்போர் தமிழ்மொழியில் வேலை செய்யும் வாய்ப்புக் கிடைக்காமை. இதற்காக தமிழ் மொழிப்பிரயோகம் உள்ள வேலைகளில் பொருத்தமானவர்களை நியமித்தல்.

7. கலைச்சொற்கள் பற்றாக்குறை. இதற்கான ஆய்வுப்புத்தகங்கள் வெளியிடல்.

8. வெளிப்படுத்தும் ஆற்றல் போதாமை (கலைச்சொற்கள் தேவை) அதற்கான கலைச்சொற் கோவை தயாரித்தல்

9. மொழி சம்பந்தமான புதிய சொற்கள், விடயங்கள் ஆவணப் படுத்தப்படாமை. இதற்காக காலத்திற்குக் காலம் இவற்றை ஆவணப்படுத்தல்.

10. ஆங்கிலமொழியில் தேவையற்றபோதனை.

11 அ. பிரதேச பண்பாட்டு மொழிவழக்குகள் ஆவணப்படுத்தப்படாமை.

ஆ உலக வளர்ச்சியை உள்வாங்கிக்கொள்ளாமை.

12. ஒவ்வொரு துறைசார் நிறுவனங்களும் தமது தமிழ்மொழிசார் பிரச்சினைகளைக் கருத்தில் எடுக்காமை. 11, 12 இற்கான விசேட குழு அமைக்கப்பட்டு காலத்திற்குக்காலம் மொழி ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும். மாகாண அமைச்சுக்கும் வெவ்வேறு துறைசார்ந்த மொழி ஆய்வாளர்களுக்கும் இடையில் ஒரு ஊடகம் தேவை.

13. காலனித்துவ மனப்பாங்கு தமிழ்மொழி வளர்ச்சிக்கு தடையாக உள்ளமை. சுயமொழிப் பற்றை வளர்க்கும் கல்வியை ஊக்குவித்தல்.

14. காலத்திற்குக்காலம் உலகளா வியதாக வெளிவரும் நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு இல்லாமை. (யப்பான் மொழியில் உலகில் உள்ள வெளியீடுகள் மொழி பெயர்க்கப்படல்) மொழிபெயர்ப்பு அமைப்பு உருவாக்கல்.

15. கல்வியில் சரியான தத்துவப் பின்னணி இல்லாமை (குறிக்கோளை நோக்கிய பயணம் இல்லாமை) மொழிரீதியாகவும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது ஆரம்பக்கல்வியில் இருந்து தெளிவான தத்துவப் பின்னணி கொடுக்கப்படுதல்.

பிரச்சினைகளும் தீர்வுகளும்

பிரச்சினைகள் :-

1. போதிய வாய்ப்புக்கள் தமிழ்மொழிமூலம் இன்மை.

2. கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களை பயன்படுத்தக்கூடிய போதிய தகவல்கள் இன்மை.

3. இத்துறைகளில் பலவகைப்பட்ட தமிழ் மொழிமூல கற்கை நெறிகளின் பற்றாக்குறை.

4. வடக்கு-கிழக்கு பல்கலைக்கழகக் கல்லூரிகளில் ஆங்கில மொழிமூல பட்டப் படிப்பும் தமிழ் மொழிமூல வேலைவாய்ப்பும்.

5. போதிய உசாத்துணை நூல்களின்மை.

6. மாணவர்களது உளப்பாங்கிற்கு ஊக்கம் அளிக்காத கல்வி முறைமை.

7. தத்துவப் பின்னணி அற்ற கல்வி.

8. கலைச் சொற்களின் பற்றாக்குறை.

மேற்கூறியவற்றை மூன்றாம் நிலைக் கல்வி நிலையில் தமிழ் பேசும் மாணவன் எதிர் நோக்கும் பிரச்சினை எனலாம்.

நடைமுறைத் தமிழ் - (பயன்பாட்டுத் தமிழ்)

நோக்கம் :

01 மொழியைப் பொருத்தமானதாகவும் வலுவானதாகவும் பயன்படுத்தக் கூடிய அறிவைப் பெறல்.

02. இலகுவான முறையில் அம்மொழியை தொடர்புகொள்ளலுக்கு பிரயோகித்தல்

பிரச்சினையை இனங்காணல் :

மாணவர்:

01. மொழி அடிப்படைத் திறன்களிலுள்ள தவறுகளை இனங்காணல்.

02. இலக்கண அறிவின் குறைபாடு (கேட்டல், கிரகித்தல், வாசித்தல், எழுதுதல்)

ஆசிரியர் :

01. ஆரம்ப ஆசிரியர்கள் ஆரம்ப வகுப்பில் எழுத்துக் கற்பிக்கும் போது விடும் தவறுகளைக் கண்டுபிடித்தல்.

02. இலக்கணத்தைக் கற்பித்தலில் ஆசிரியர்கள் ஆர்வம் காட்டாமை.

03. கிரகிக்கும் திறனை ஆசிரியர் மாணவர்களிடம் வளர்ப்பதில்லை.

04. சுயமாக மாணவர்கள் செயற்படுவதற்குரிய பயிற்சிகள் வகுப்பறையில் அளிக்கப்படுவதில்லை

05. மாணவர்கள் வாசிப்பதற்கு வகுப்பறையில் நேரத்தை ஒதுக்குவது குறைவானதாக இருப்பது.

பாடசாலையை விட்டு விலகியவர்களின் பிரச்சினைகளை இனங்காணல்.

மாகாண மட்டத்தில் நடைமுறைத் தமிழ் சம்பந்தமாக மக்களிடமுள்ள குறைகளை இனங்காணல்.

தீர்வு :

01. மொழி அடிப்படையில் திறன்களை எவ்வாறு வளர்ப்பது என்பது பற்றி ஆரம்ப இடைநிலை மட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல் (காலத்திற்கேற்ற பாடத்திட்டத்தின்படி எழுத்தறிவு போதித்தல்)

02. தமிழ்மொழிப் பாடம் மாத்திரம் அல்லாமல் ஏனைய பாடங்களிலும் மொழி அறிவை பயிற்றுவிப்பதில் ஏனைய ஆசிரியர்களும் செயற்பட வேண்டும்.

03. தமிழ்மொழி ஆசிரியர்களுக்கு மாத்திரமல்லாமல் ஏனைய பாட ஆசிரியர்களுக்கும் தமிழ்மொழிப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

04. பாடசாலை மட்டத்தில் ஒவ்வொரு வகுப்பு மட்ட மாணவர்களும் சமூகத்தோடு தொடர்புகொள்ளும்போது ஏற்படும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணல் வேண்டும்.

05. தமிழ்மொழிப் பயிற்சி நெறியைக் கொண்டு வருதல்.

06. மொழிவெளிப்பாட்டுத்திறனை வளர்த்தல் (சம்பவம், பேசல்)

07. ஒவ்வொரு சமுதாய மட்டத்தையும் ஆய்வு செய்து அதன்மூலம் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.

08. இளைஞர்களின் தேவைகளை இனங்காணலும் அதற்குப் பொருத்தமான மொழித் தேவைகளை நிறைவு செய்தலும்.

09. தொழிலுக்கு வழிகாட்டல்- கற்றவற்றை -வாசித்தல்.

10. தொடர்பு சாதனங்களின் மூலம் பயன்பாட்டுத் தமிழ் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல்

11. நாளாந்த அவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய வழிகாட்டல் (விளம்பரம், பிரயாண வழிகாட்டிகள்).

12 திருத்தமான மொழி நடைப் பிரயோகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல். (நடைமுறைக்கேற்ற சொற்பிரயோகமும், வசன அமைப்பையும் கையாளுதல்)

13. பயன்பாட்டுத் தமிழுக்குரிய சில விடயங்களை ஆராய்ந்து அதற்குரிய துணைநூல்களை ஆக்குதல். (ஆண்டு 10 - கடிதம், அறிக்கை, விளம்பரம், இலக்கணத் தொகுப்பு).

14 மேலதிக வாசித்தலை ஊக்குவித்தல்.

15. அலுவலக தொடர்பு மொழியாக தமிழ் மொழியைத் தொடர்ந்து பேணுதல்

16. வேற்று மொழிகளில் இருந்து பெறப்படும் சொற்களை தேவையான இடங்களில் புதிதாகப் பயன்படுத்த இடமளித்தல்

கலைச்சொல்லாக்கம்.

01. கலைச்சொல்லாக்கக் குழுவில் துறைசார்ந்த அறிஞர்கள் மொழி வல்லுநர்கள் இடம் பெறல்.

02. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இது செய்யப்படல்.

03. பயன்பாட்டில் உள்ளதும் ஏற்றுக கொள்ளப்படக்கூடியதுமான சொற்களைப் பயன்படுத்தல்.

04. தொழில் செய்பவர்களின் இடங்களுக்குச் சென்று அவர்கள் பயன்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தல் (கள ஆய்வு)

05. நிறுவன ரீதியான அமைப்பை ஏற்படுத்தி அதனனூடாக கலைச்சொல்லாக்கம் செய்தல்.

06. பிறமொழிச் சொற்களை பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில் அந்த மொழிச் சொற்களின் மூல ஒலி வேறுபடாத வகையில் சொற்கள் அமைக்கப்படல்.

07. வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்ட பின்னர் அவற்றை தமிழ் நாடு, மலேசியா,சிங்கப்பூ ர் முதலிய நாடுகளின் அரசுகளுடன் தொடர்பு கொண்டு அறிஞர்களின் உடன்பாடு கண்டு இறுதிக் கலைச் சொல்அகராதியை தயாரித்தல் வேண்டும்.

08. வளர்ந்து வரும் அறிவியலுக்கு ஈடுகொடுக்கக் கூடிய முறையில் கலைச்சொல்லாக்கம் செய்யப்படல்

09. தமிழ்நாடு, சிங்கப்பூ ர், மலேசியா, முதலிய நாடுகளுடன் மொழியியல் ரீதியான பொது அமைப்பை வடக்கு -கிழக்கு மாகாணம் ஏற்படுத்திக் கொள்ளல்.

10 துறைசார் குழுக்கள் அமைக்கப்படல் அக் குழுக்களில் குறிக்கப்பட்ட மூன்று மொழிவல்லுநர்களும் பொது மக்கள் இருவரும் அங்கம் வகித்தல்.

11 தமிழில் நவீனத்துவம் என்ற தேவையை உணர்ந்து கலைச் சொல்லாக்கம் செய்யப்படல் வேண்டும்.

12 பொருத்தமான சொற்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

13. கலைச்சொல்லாக்கம் என்பது தொடர்ச்சியானது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழிப் பிரயோகத்தை அடிநிலைவரை கொண்டுசெல்லல்.

இக்குழுவிற்கு தரப்பட்ட அடிமட்டம்வரை தமிழ்மொழிப் பிரயோகத்தைக் கொண்டுசெல்லல் என்ற தலைப்புத் தொடர்பாக நாம் வாதத்திற்கு உட்படுத்தும் போது அடிமட்டம் என்ற சொல்தொடர்பாக அதன் கருத்து நிலையில் எமக்குள் அதிக சந்தேகங்கள் ஏற்பட்டன. அடிமட்டம் என்பது எது ? அதன் அளவுகோல்கள் என்ன? இக்கேள்விக்கான விடையை நீண்ட நேர விவாதத்தின் பின் இப்படி வரையறுத்துக் கொண்டோம். அதாவது தமிழை எங்கும் எதிலும் பிரயோகிக்க வேண்டும் என்று விரும்பும், அவாவும் ஆத்மார்த்த ரீதியாக மேலோங்கி நிற்கும் யாவரையும் உள்ளடக்கும் என்ற முடிவுக்கு வந்தோம். இதில் கல்வி நிலை, பொருளாதார நிலை, நாகரீக பண்பாட்டு அம்சங்கள், உயர்பதவிகள் என்பன இவ்வரையறையைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமையவில்லை

தமிழ் மொழிப் பிரயோகத்தை அடிமட்டம் வரை கொண்டுசெல்வதில் பின்வரும் காரணிகள் தடையாக இருக்கின்றன

1. மத்திய அரசு மட்டம் :-

அரசின் மொழிக் கொள்கையும் நிலைப்பாடும்.

2. மாகாண அரசு அதிகாரிகள் மட்டம் :-

1) தமிழ்மொழியை நிருவாகத்தில் செயற்படுத்தும் வாய்ப்புக்கள், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அதிகாரிகளின் நிலைப்பாடு.

அ) போதிய அக்கறையின்மை, அசமந்தப்போக்கு என்பன.

ஆ) ஆங்கிலப் பிரயோகத்தின் ஊடாக தங்களின் இருப்பையும், புலமையையும் வெளிப்படுத்தல்

இ) ஆங்கிலத்தில் பேசுவதின் ஊடாக சாதாரண மக்கள் தங்களின் மேலாண்மையை வெளிப்படுத்தல்.

ஈ) நிறைய விடயங்களில் மத்திய அரசுடன் தொடர்புகொள்ள வேண்டிய சூழல்.

3) மக்கள் மட்டம் :-

1) மக்கள் தலைமை :- தமிழை உரிய அந்தஸ்துக்கு கொண்டுவருதற்கு அரசியல் ரீதியாக தீவிரமாக உழைப்பதற்கு தலைமையின்மை.

2) பொது மக்கள் - தமிழை அடிமட்டம் வரை கொண்டுவருதற்கு தமிழ்மொழியைப் பேசுபவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. ஆனால் நடைமுறையில் தமிழ் மொழி பேசுபவர்களின் தங்களது மொழிதொடர்பான விழிப்புணர்வின்மை.

* சிங்களமொழி அதிகாரத்தின் குறியீடாக இருப்பதனால் தமிழ் அதிகாரம் சிங்கள மொழி அதிகாரத்திற்குட்பட்டு தமிழை புறக்கணித்தல். இது பெரும்பாலும் பதவி அச்சம் தொடர்பாக ஏற்படுகிறது.

* மொழிப்பற்று இன்மையும் தமிழை கௌரவக் குறைவாக எண்ணலும்.

* தமிழின் சாதாரண நடைமுறை மொழிப்பதங்களை பிரயோகிக்காமல் கடின மொழியைக்கையாளல்.

தீர்வுகளும் மார்க்கமும் :-

அரச மட்டத்தில்

தமிழின் சமத்துவத்தை ஏற்றுக்கொள்ளலும் அரசியல் அமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை கைக்கொள்ளல்

* மத்தியமாகாண அரச நிருவாகமட்டங்களுக்கு பரவலானதொடர்புகளில் எமது மாகாண அரசு உத்தியோகமொழியான தமிழை எவ்வித விட்டுக்கொடுப்பும் இன்றி பேணல்.

* மாகாணத்திற்குட்பட்ட அரச நிருவாகங்களில் தமிழையே கண்டிப்பாக பயன்படுத்தல்

* இத்துடன் நிருவாகத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் தமிழ்மொழி தொடர்பாக தங்களது பற்றையும் அவசியத்தையும் உணர்ந்து செயற்படுவது மிகவும் பிரதானமானது.

மக்கள் மட்டத்தில் : மக்கள் தலைமை

மக்கள்மத்தியில் தமிழை, தமிழின் அவசியத்தை உணர்த்துவதற்கான வெகுஜன ரீதியான இயக்கங்களை கட்டியெழுப்புதலும் ஊக்கத்துடன் செயற்படுதலும்.

அனைத்து சாத்தியமான நிலைகளிலும் தமிழின்அவசியத்தை உணர்ந்து தமிழை பேசுவதால் ஏற்படும் பயம், வெட்கம் என்பவற்றில் இருந்தும் விடுபடல்.

❑

பதிப்பகத் திணைக்களம் வடக்கு - கிழக்கு மாகாணம்